மகாகவி பாரதியின்
இஸ்லாத்தின் மஹிமை

செ.திவான்

மகாகவி பாரதியின்

இஸ்லாத்தின் மஹிமை

(முதன்முறையாக தனிநூல் வடிவில்)

வரலாற்றாசிரியர்

செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,

சுகைனா பதிப்பகம்,

106-F/4A திருவனந்தபுரம் சாலை,

பாளையங்கோட்டை – 627 002

திருநெல்வேலி மாவட்டம்.

✆ 0462 - 2572665

ஆசிரியரின் 82–ஆவது நூல்

பாரதி குறித்த 4–வது நூல்

முதற் பதிப்பு	:	06.04.2011
கணினி வடிவமைப்பு	:	நான்சி கணினியகம், பாளையங்கோட்டை.
அச்சிட்டோர்	:	சிவசக்தி அச்சகம், சிவகாசி
முகப்போவியம்	:	முருகன், காசி கிராபிக்ஸ், பாளையங்கோட்டை.
விலை	:	ரூபாய் நூறு.

துஆ செய்ய வேண்டுகிறோம்

கண்ணியத்திற்குரிய அண்ணன் சிங்கப்பூர் அல்ஹாஜ் S.M. காதர் சுல்தான் அவர்களின் துணைவியார்

சகோதரி **ஆமிஷா பீவி** (23.06.1950 – 07.03.2010) அவர்களின் மறுஉலகநல்வாழ்விற்காக துஆ செய்யுமாறு வேண்டுகிறோம்.

– சுஹைனா பதிப்பகம்.

நூலாசிரியர் செ.திவான் எழுதிய பதிப்பித்த நூல்கள்

1) விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள் (தொகுதி – 1)
சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ.10,000 பெற்ற நூல்)
2) நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப்
("உணர்வு") வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5,000 முதல் பரிசு பெற்ற நூல்)
3) ஆரியமாயை அகல . . .
("சங்கொலி" வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5,000 முதல் பரிசு பெற்ற நூல்)
4) திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்.
5) நபி பெருமானாரின் நாற்பது பொன் மொழிகள்.
6) தக்கலை பீர் முகம்மது (ரஹ்) ஞானப்பாடல்களும், சரிதையும்
7) இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்
8) வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்
9) குடை
10) சிந்தனைக்கு
11) வ.உ.சி.யின் துன்பத்தின் கற்பனை
12) வ.உ.சி.யும் பெரியாரும்
13) வ.உ.சி.யும் தொல்காப்பியரும்
14) வ.உ.சி. பாடல்கள்
15) வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்
16) தெற்கில் ஒலித்த தீன்குரல்
17) விடுதலைப் போரில் விஸ்வகர்மாக்கள்
18) பாரதியும் காங்கிரசும்
19) ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்
20) உண்மையின் சவுக்கடி
21) கூடங்குளம் அணு உலையை மூடு
22) குடைப்புரட்சி
23) ஆரியப் பாதையில் பசுவதை
24) வாகை சூடி வரும் வைகோ
25) கலைஞரை வென்ற வைகோ
26) வைகோவின் பொன்மொழிகள்
27) சேது சமுத்திரத் திட்ட வரலாற்று நாயகன் வைகோ
28) வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள்
29) வ.உ.சி.யின் நூற்கோவை

30) வ.உ.சி.யும் பரலி சு.நெல்லையப்பரும்
31) ஆன்மீகச் சிந்தனை
32) வேதங்கள் விலக்கிடும் விக்கிரக வழிபாடு
33) செய்குத்தம்பி பாவலரின் ஷம்சுத்தாசீன் கோவை
34) கட்டபொம்மனின் கடைசி நாட்கள்
35) வி.ஓ.சி. கண்ட பாரதி
36) இறை நேசச் செல்வர் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி)
37) வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்
38) இறைவனின் திருநாமங்கள்
39) இறுதித் திருநபியும் இயற்கையின் அற்புதங்களும்
40) அண்ணாவின் மறுபக்கம்
41) மாற்றார் மதித்திடும் மாநபி (ஸல்)
42) பெரிய புராணத்தில் வாழ்க்கை நெறி
43) விடுதலையின் நிறம் பச்சை
44) வரலாற்றுப் பாதையில் பசுவதை
45) கட்டபொம்மனும் கலெக்டர் ஜாக்சனும்
46) இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.
47) சதாவதானி செய்குத்தம்பி பாவலரின் நபிகள் நாயகமான்மிய மஞ்சரி
48) வ.உ.சி.யின் உயில்
49) ஆலிப்புலவர்
50) தியாக நெருப்பில் வைகோ
51) வ.உ.சி.யும் திருக்குறளும்
52) அணைய வேண்டிய அயோத் 'தீ'
53) வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்
54) வியத்தகு சாதனையாளர் வைகோ
55) மாநபி (ஸல்) காட்டிய மனித உரிமைகள்
56) வைகோ . . . வெற்றிப் பாதை . . . வீரச்சங்கொலி
57) செந்தமிழ் வளர்த்த சிங்கப்பூர் அ.நா.மொய்தீன்
58) விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிம்கள் (தொகுதி – 2)
59) திராவிட இயக்கம் – வரலாற்றுக் குறிப்புகள்
60) வேலூர்ப் புரட்சியில் (1806) வீரமிகு முஸ்லிம்கள் (தொகுதி – 3)
61) இந்திய சுதந்திரப் பெரும் போரில் இஸ்லாமியர்கள் (தொகுதி–4)–1072 பக்கங்கள்.
62) சங்கொலி
63) பம்பரம்

64) சுயமரியாதை சூரர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி
65) இந்து – முஸ்லிம் ஒற்றுமை
66) புரட்சிக் கனலில் பொசுங்கும் துரோகம்
67) மாலிக்காபூர்
68) சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு
69) அறிஞர் அண்ணாவின் அமுத மொழிகள்
70) கழகத்தின் காவலன் கே.வி.கே. சாமி
71) இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.யின் சிவஞான போத உரை
72) வ.உ.சி.யின் சுயசரிதை
73) அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி
74) கே.வி.கே. சாமி கட்டுரைகள்
75) நாடோடி மன்னன்
76) விடுதலை வேள்வியில் விஸ்வநாததாஸ்
77) கச்சத்தீவு யாருக்குச் சொந்தம்?
78) பாரதி செல்லம்மாள் உயில்
79) தேவநேயப் பாவாணரின் கிறித்தவக் கீர்த்தனம்
80) தேவநேயப் பாவாணரின் துவாரகை மன்னன்
81) இந்திய சுதந்திரப் போரில் தமிழக விஸ்வகர்மாக்கள்
82) மகாகவி பாரதியாரின் இஸ்லாத்தின் மஹிமை

அச்சில்--

83) தமிழகத்தில் இஸ்லாம்
84) கடற்போர் தளபதி குஞ்சாலி மரைக்காயர்
85) 1921 மாப்பிள்ளைமார் எழுச்சி

சங்கொலி, தினமணி, நம்நாடு, அறமுரசு, குர்ஆனின் குரல், மறைச்சுடர், உணர்வு, மக்கள் உரிமை, விடியல் வெள்ளி, சிந்தனைச்சரம், ஜமாத்துல் உலமா, ரஹ்மத், இஸ்லாமிய சகோதரத்துவ குரல், சமரசம், தினமலர், முரசொலி, தினகரன், தினத்தந்தி, தமிழ் முரசு மற்றும் பல இதழ்களில் 1000–க்கும் மேற்பட்ட கட்டுரைகள் . . .

முகவரி
செ.திவான்,
106 F, 4 A, திருவனந்தபுரம் ரோடு,
பாளையங்கோட்டை – 627 002.
தொலைபேசி: 0462 – 2572665

நூலாசிரியரின் வாழ்க்கைக் குறிப்புக்கள்



பெயர்	:	செ.திவான், **M.A., M.Phil.,** வரலாற்று ஆய்வாளர்
தந்தை பெயர்	:	நா. செய்யது மசூது
தாயார்	:	செ.காசினம்மாள்
பிறந்த தேதி	:	01.09.1954
இடம்	:	விசுவநாதபுரம், செங்கோட்டை இரயிலடி – 627 810.
துணைவியார்	:	மரு.திவானிஜஹானரா, **B.S.M.S.,**
மூத்த மகள்	:	தி.நஜாத், **MCA,**
மருமகன்	:	**M.** முகமது அப்துல் மஜீத், **M.B.B.S.,**
இளைய மகள்	:	தி.சுகைனா, **M.B.B.S.,**
பெற்ற பட்டங்கள்	:	தமிழ்மாமணி – இஸ்லாமிய இலக்கியக் கழகம், காரைக்கால். தமிழறிஞர் – இஸ்லாமிய இலக்கியக் கழகம், சென்னை. ஆய்வறிஞர், வரலாற்று அறிஞர், வரலாற்றியல் அறிஞர். வ.உ.சி. ஆய்வாளர், சமூக நல்லிணக்க காவலர்.

எண்ண அலைகள்

பார் அதிர்ந்தது; மார்தட்டிய மகாகவிஞனின் கவிதை வேட்டுக்களைக் கேட்டு; அதனால்தான் என்னவோ 'பாரதி'யென்று பெயர் சூட்டி மகிழ்ந்தது.

பாரதி உயிரோடு இருந்த போதே அவரை கைவிட்டது காங்கிரஸ் என்பதனை வலியுறுத்தி 1998 ஜூனில் **'பாரதியும் காங்கிரசும்'** *எனும் நூலை வெளியிட்டேன்.*

தேசபக்தச் செம்மல் வ.உ.சி.

கப்பலோட்டிய தமிழன், அஞ்சா நெஞ்சன் வ.உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் பாரதி குறித்து எழுதிய **'வ.உ.சி. கண்ட பாரதி'** *நூலினை மறுபதிப்பு செய்து வெளியிட்டேன்.*

முதன் முறையாக அச்சில்

*என் சிந்தை கவர்ந்த தொ.மு.சி. ரகுநாதன் அவர்கள் தீட்டிய 'பாரதி காலமும் கருத்தும்' நூலில் 'கவிதையில் தெறித்த கனல்' எனும் கட்டுரையின் இறுதியில் செங்கோட்டை வீரவாஞ்சியின் சாகசச் செயலான ஆஷ் கொலை குறித்த வழக்குகளின் தடையங்கள் (எக்ஸிபிட்டுகள்) முதன்முறையாக அச்சேறுகின்றன என்று குறிப்பிட்டு மகிழ்வார்.** *

வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்

அடியேனது ஆய்வில் 'முதன் முறையாக அச்சில்' என்று சொல்லத்தக்க வகையில் **'வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்'** *கட்டுரைகளைத் தேடிக் கண்டுபிடித்து அழகிய நூலாக்கினேன்; மறுபதிப்பும் செய்துள்ளேன்.***

---

* ரகுநாதன், பாரதி காலமும் கருத்தும், சென்னை, டிசம்பர் 82, ப. 8.

** செ. திவான், அழகும் ஆரோக்கியமும் நூல் முன்னுரையில் விரிவாக அது பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம்.

வ.உ.சி.யின் உயில்

அகிலம் போற்றும் அற்புதத் தலைவர் 'வ.உ.சி.யின் உயிலை' முதன்முறையாக நாட்டுக்குத் தந்து **'வ.உ.சி.யின் உயில்'** எனும் நூலாக வெளியிட்டேன்.

பாரதி செல்லம்மாளின் உயில்

தேசியக் கவிஞன் பாரதி குறித்து இதுகாறும் ஆயிரக்கணக்கான நூல்களும், கட்டுரைகளும் வெளிவந்து கொண்டே இருக்கின்றன.

மகாகவி பாரதி குறித்து இதுவரை அறியப்படாத வரலாற்றுக் குறிப்புக்களை எங்கேனும், எப்படியேனும் கண்டுபிடித்து வெளியிட வேண்டுமென்ற அவா எளியேனது உள்ளத்திலும் நிலைத்து நின்றிருந்தது. எளியேனது வாழ்வில் அந்த எண்ணம் 01.03.2009-இல் நிறைவேறியது.

பாரதியாரின் துணைவியார் செல்லம்மாளின் உயில் பற்றிய வரலாற்றுச் செய்திகளை முதன்முறையாக நூலாக்கித் தந்தேன். இந்து சமயத்தில் ஆழ்ந்த பற்று கொண்ட மகாகவி இனிய இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றியும் கதை, கட்டுரை, கவிதைகளை எழுதியிருப்பதை அறிந்தபோது சாதி மதங்களுக்கு அப்பாற்பட்ட பாரதியின் சமயப்பொறை அடியேன் மனதில் மின்னியது.

நடுத்தர உயரம், மாநிறம், சுழலும் கண்கள், அகன்ற நெற்றி அதிலே குங்குமப் பொட்டு, துடிதுடிக்கும் உதடு, ஓயாது பாடும் வாய், கறுத்து அடர்ந்து முறுக்கி விடப்பட்ட மீசை, தலையிலே சிவப்புத் துணியில் கட்டப்பட்ட பெரிய முண்டாசு, அதிலிருந்து வால் தொங்கும், ஒரு கிழிந்த கோட்டு, கையிலே புத்தகம், இராணுவ வீரன் போன்ற அளந்த நடை இப்படி உலா வந்த பாரதி இஸ்லாம் பற்றி கொண்டிருந்த கருத்துக்கள் தான் என்ன? மகாகவி பாரதி (11.12.1882 - 12.09.1921) தனது 15-வது

---

* சீனி.விசுவநாதன், கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புக்கள், தொகுதி – 1, சென்னை, 2003, ப. 6.

வயதில் 24.01.1987-இல் எட்டயபுரம் மன்னருக்கு விண்ணப்பம் எழுதிய கவிதை முதல் கவிதையாகும். 'தென்னிளசை' (எட்டயபுரம்) என்று துவங்கி 'வாழ்கவே' என்று முடியும் இப் பாடலே பாரதியின் முதற் பாடல் என்று கூறத்தகும் சிறப்புமிகு பாடலாகத் திகழ்கிறது.

தொடர்ந்து பாரதி தனது இறுதி மூச்சு வரை எழுதிக் கொண்டே இருந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் இஸ்லாம் பற்றியும், அது தொடர்பாகவும் எழுதியவைகள் என்னென்ன? தேடலுற்றேன்; தேடினேன், தொகுத்துத் தருகிறேன்.

இஸ்லாம் மார்க்கம் குறித்துப் பாரதியின் படைப்புக்கள் அனைத்தையும் முழுவதுமாகத் தாங்கி முதன் முதலில் வரும் தொகுப்பு இது என்பதில் பெருமிதம் கொள்கிறேன். இந்நூல் வெளிவர எனக்கு உதவிய இறைவனுக்கும், காலத்திற்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலினை நல்ல முறையில் அச்சிட்ட சிவசக்தி ஆர்ட்ஸ், நான்சி கணினியகம், ஆகியோருக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை

எழுதுவதற்காக வாழ்கிறேன்.

06.04.2011
பாளையங்கோட்டை

செ. திவான்,
106F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
0462 - 2572665

பாரதியின் இஸ்லாத்தின் மஹிமை

இஸ்லாம் குறித்தும், இஸ்லாத்திற்கும் தொடர்பான விஷயங்கள் குறித்தும் நம் இதயங் கவர்ந்த மகாகவியின் படைப்புக்கள் இதோ . . .

23.06.1906

இந்தியா இதழில் பாரதி எழுதுகிறார். இதோ . . .

நமது மகமதிய சகோதரர்கள்

'ஸத்யமேவ ஜயதே' இந்தியாவின் வருங்காலப் பெருமைக்கும், சிறப்புக்கும், இத்தேச ஜனங்கள் பெரும்பாலார் ஹிந்துக்கள், மகமதியர் என இரண்டு பகுதிப்பட்டு நிற்பது பெரும் தடையாகவே இருக்கிறதென்பதை ஒளித்து வைத்து பிரயோஜனமில்லை. தென்னிந்திய கிராமாந்திரங்களிலே மகமதியர்களும், ஹிந்துக்களும் தமக்குள்ள வேறுபாட்டை மறந்து மகமதியர்களும், ஹிந்து ஜன சமூகத்தில் ஒரு கிளையாராகவே கருதப்படுகிறார்கள் என்பது வாஸ்தவமென்ற போதிலும், பொதுவாக இம்மாகாணத்திலும், வட இந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களில் ஹிந்து, மகமதியர்கள் ஒருவிதமான பரஸ்பர துவேஷம் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். இதற்குக் காரணம் மகமதிய ஆட்சியில் ஏற்பட்ட துவேஷமே.

இந்த விரோதங்களை நீக்கி இந்த இரண்டு ஜாதியாருக்குள்ளே சினேக உணர்ச்சியும், சகோதரப் பான்மையும் ஏற்படுத்துவது இத்தேசாபிமானிகளின் முக்கியக் கடமையாகும். ஆனால் ஒரு நோயைத் தீர்க்க விரும்புவோன் அந்த நோயே இல்லையென்று பிரமாணம் செய்துவிடுதல் மிகவும் சிறப்பான உபாயமில்லை. ஹிந்து மகமதியருக்குள்ளே விரோதங்களைத் தீர்க்க விரும்புவோர், மேற்படி விரோதங்களே இல்லையென்று சாதித்து விடுதல் சரியான பாதையாக மாட்டாது.

திருஷ்டாந்தமாக கல்கத்தாவிலே நடந்த சிவாஜி உற்சவத்தை எடுத்துக் கொள்வோம். எவ்விதமான ஆபத்திலும் ஹிந்துக்களைவிட்டு நீங்காத மகா தேசாபிமானிகளாகிய லியாகத் ஹுசேன் போன்றவர்கள்கூட அந்த சமயத்திலே சிவாஜி உற்சவத்தினின்றும் விலகி இருந்து விட்டார்கள். சிவாஜியை தெய்வாம்சமென்றும், மகாத்மாவென்றும் ஹிந்துக்கள் ஸ்தோத்திரம் செய்து கொண்டிருக்கும்போது, அவர் கொலையாளி என்றும், பாதகர் என்றும் அநேக மகமதியர்கள் 'இங்கிலீஷ்மான்' பத்திரிகைகளுக்கு எழுதி இருக்கிறார்கள்.

மேற்கண்டவாறு இருக்கும் நிலைமையை உத்தேசிக்குமிடத்து அநேகர் மனதில் பாரத கண்டத்தின் வருங்காலத்தைப் பற்றி பயமேற்படுகின்றது. 'கோட்டைக்குள் குத்து வெட்டும்' நடக்குமானால் எதிரிக்கு எப்பொழுதும் சந்தோஷமேயல்லவா? இதற்காக, நம்மவர்கள் பெரும் பாடுபட்டு ஹிந்துக்களுக்கும், முகமதியர்களுக்கும் இடையேயுள்ள பகைமையாகிய கழியை கடக்க முயல வேண்டும். அந்தக் கழியிலே இருக்கும் கற்களும், பாறைகளும் எண்ணிறந்தனவையாகும். இதைக் கடக்கும்போது எத்தனையோ ஆபத்துக்களும், துன்பங்களும் நேரிடக்கூடும். ஆனால் விடாமுயற்சி, பொறுமை, தீரத்துவம், கருணை என்னும் சிறந்த மாலுமிகளைத் துணையாகக் கொண்டு நாம் செல்ல வேண்டும். நம்மால் கூடியவரை முயற்சி செய்துவிட்டு பலனை தெய்வத்திற்கு விட்டுவிடுதலே பொருந்தும். 'பசுவைக் கொல்லுவோர்', 'பசுவை வணங்குவோர்' ஆகிய இந்த இரண்டு வகுப்பினரும் எத்தனைக்கெத்தனை சீக்கிரமாக நெருங்கத் தொடங்குகிறார்களோ, அத்தனைக்கத்தனை நலமுண்டாகும். முகமதியர்களும் இந்தப் பெரும் முயற்சியிலே தம்மாலியன்ற அளவு ஒத்து முயல வேண்டுமென்று மிகவும் ஆவலுடன் பிரார்த்தனை செய்து கொள்கின்றோம்.*

---

* வி.எஸ்.சுப்பிரமணியம், இளசைமணியன், பாரதி தரிசனம் முதல் பாகம், சென்னை, 1986, பக். 284 – 285.

ஆப்கானிஸ்தானத்து அரசர்

ஆப்கானிஸ்தானத்து அரசர் (The Amir of Afghanistan) என்ற கட்டுரையை 21.07.1906 இந்தியா பத்திரிகையில் பாரதி எழுதியுள்ளார்.

ஆப்கானிஸ்தானத்து அமீர் Amil of Afghanistan

11.08.1906 இந்தியா இதழில் 'ஆப்கானிஸ்தானத்து அமீர்' என்ற பாரதியின் கட்டுரை இதோ . . .

நமது இந்தியாவின் வடமேற்குப் பாகத்திலமைந்துள்ள மகமதிய ராஜ்யமாகிய ஆப்கானிஸ்தானத்துக் கதிபதியாகிய அமீர் அபிபுல்லாகான் என்பவர் வருகிற குளிர்காலத்தில் இந்தியாவைப் பார்க்க வருகிறாரென்ற சங்கதியைக் கேட்க ஒருபுறம் மகிழ்ச்சியும் மறுபுறம் வ்யஸனமும் உண்டாகின்றன.

சூரிய சந்திரர்கள் ராகு கேதுக்களால் பீடிக்கப்படுவது போல நமது ஆசியாவனது ஐரோப்பிய சர்ப்பங்களின் வாயிலாகப்பட்டிருந்தும், இடையிலும் புறத்திலும் சுயாட்சியைப் பெற்றுள்ள இவ் வாப்கானிஸ்தானத்தைப் போன்ற நாடுகளிருப்பதைப் பற்றி நாம் மகிழ்ச்சி அடைய வேண்டியதுதான். அப்படிப்பட்ட ராஜ்யாதியாரியாகிய நமது அபிபுல்லாகான் வரவை நாம் ஆவலுடன் எதிர்பார்ப்பது அவசியமே.

ஆனால், பல வருஷங்களாகப் பஞ்சத்தில் ஆழ்ந்துள்ள நம்மை இவர் வந்து நேரில் பார்க்க வேண்டுமென்று ஆவல் கொள்ளினும் நமது ராஜாங்கத்தார் அவருக்குத் திரையிட்டு, இந்நாட்டில் பஞ்சமுள்ளதெனத் தோற்ற இடமுண்டாக்காமலே செய்யத் தடையில்லை.

ஆக்ராவென்னும் பட்டணத்திலே நமது ராஜப் பிரதிநிதியாகிய மிண்டோ இவரை எதிர்கொண்டு தங்கள் சைன்னியப் பெருக்கையும் காட்டப் போகிறாராம். இந்நாட்டு ஜனங்களை அடிமையாக்க வேண்டுமென்றே வைத்திருக்கும் இவர்கள் சேனைப் பெருக்கைக் கண்டா அவர் மகிழ்ச்சி அடையப் போகிறார்?

இவர்கள் மயக்கத்திற்கு இலக்காகாமல் நமது தேசத்தை நன்றாய்ச் சுற்றிப் பார்த்து உண்மை நிலையை அறிய ஆவல் கொள்வாராயின், அதனால் நம்மிடத்தில் அனுதாபமும், சகோதர வாஞ்சையும் உண்டாகி உண்மையை வெளியிடுவார்.

01.09.1906 இந்தியா இதழில் பக்கம் 4-இல் பாரதி எழுதுகிறார்.

'வைஸிராயின் கடிதத்திற்கு உத்தமராக அமீர் ஒரு கடிதமெழுதி, அதில் தாம் புறப்பட்டு வரும் தேதியைக் குறிப்பிட்டிருக்கிறார். ஜலாலபாதிலிருந்து டிசம்பர் மாதம் 17-ந் தேதி புறப்பட்டு ஆக்ரா நகரத்தில் வைஸிராயுடன் சந்திப்பார். அவ்விடத்தில் அப்பொழுது ஓர் தர்பார் கூட்டப்படும். பின்பு படைக்காட்சியொன்று நடக்கும் தர்பாருக்கும் படைக்காட்சிக்கும் இன்னும் நாட்கள் குறிப்பிடவில்லை. ஆயினும், லார்ட் மிண்டோ சிம்லாவை விட்டுப் புறப்படு முன் எல்லாம் ஏற்பாடாய் விடும் . .

அமீர் வெளியே வந்திருக்கையில் அவரது சகோதரர் சர்தார் நஸ்ருல்லாவும், இநாயதுலிலாவும் ஆப்கானிஸ்தான் அரசாட்சி நடவடிக்கை முதலியவற்றைப் பார்த்துக் கொள்வார்கள்.'

13.10.1906, இந்தியா இதழில் பக்கம் 13-இலும், 10.11.1906 இந்தியா இதழில் பக்கம் 11-இலும் ஆப்கன் அமீரின் இந்தியப் பயணம் குறித்த செய்திகள் பிரசுரமாகியுள்ளன.

வேலூர் மகமதியக் கான்பரன்ஸ்

28.07.1906 அன்று வேலூர் அரபிக் காலேஜ் கட்டிடத்தில் தென்னிந்திய முஸ்லிம் கல்விக் கான்பரன்ஸ் நடைபெற்றது. 2000 முஸ்லிம்கள் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர். கர்னல் ஸ்டூவர்ட் தலைமை வகித்தார். கருத்தரங்கிற்கு ஜஸ்டின் போடாம் வர இயலாததற்கு வருத்தம் தெரிவித்துக் கடிதம் அனுப்பியிருந்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அரபி - பார்ஸி மொழிகளில் வல்லுநர்களான மௌலவிகள் ஆங்கிலம் பயிலுவது நல்லது என்று பேசினர்.*

வேலூரில் நடைபெற்ற முஸ்லிம்களின் கருத்தரங்கு குறித்து மகாகவி பாரதி எழுதுகிறார்** இதோ . . .

வேலூர் மகமதியக் கான்பரன்ஸ்

சிறிது காலத்திற்கு முன்பு வேலூரிலே கூடிய மகமதியக்*** கல்விச் சங்கத்தில் நடந்த விஷயங்களைப் படித்துப் பார்த்த காலத்தில் நமக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று.

நமது தேசத்துக்கு முக்கியப் பலமாக இருக்கும் மகமதியர்கள் கல்வியின்மை முதலிய காரணங்களால் தமதுஉண்மையான கடமையை அறியாமல் தவறிப்போய் விடுவார்களே என்ற பயம் அனேக அறிஞர்களுக்குக்கிருக்கின்றது. ஆனால், மகமதியர்கள் உண்மையாகவே கல்விப் பயிற்சியிலே ஆசை காட்டத் தொடங்கி, அதற்கிணங்கிய பல பெரிய முயற்சிகள் செய்வதைக் கண்டவுடன் அந்தப் பயம் நீங்குவதற்குரிய ஹேது உண்டாகிறது.

அதிகாரக் கர்வத்தால் இப்போது சில மேற்குத் தேசத்தார் அநாகரிக நிலைக்கு வந்து கொண்டிருப்பது போலவே, இடைக்காலத்தில் மகமதியர்கள் செல்வத் தருக்கின் பேரில் சிறிது அநாகரிகமடைந்து போனது மெய்யே என்ற போதிலும், **ஆதி காலத்தில் மகமதியர்கள் கல்வியிலும், நாகரிகத்திலும் மிகவும் சிறப்புற்றிருந்தார்களென்பதற்குப் போதுமான நிதரிசனங்களிருக்கின்றன. அவையனைத்தும் நமது மகமதிய சகோதரர்கள் முயற்சி செய்யும் பக்ஷத்தில் மறுபடியும் எளிதாக ஏற்பட்டுவிடக்கூடும்.**

---

* இந்தியா, 04.08.1906, ப. 12.

** முற்கூறிய நூல், பக். 287 – 288.

*** மகமதியர்கள் – முஸ்லிம்கள் (பதிப்பாசிரியர் குறிப்பு)

மேலும், வெறும் பண்டிதர்களை மட்டும் உண்டுபண்ணிவிட வேண்டுமென்ற நோக்கம் மேற்படி கான்பெரஸ்காரருக்கில்லாமல், எல்லாவிதமான கல்வியிலும் பயிற்சி உண்டாக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டிருப்பதாக அவர்களது தீர்மானங்களைப் படிக்கும்போது புலப்படுகின்றது.

ஒரு ஜனக் கூட்டத்திற்குப் பெருமை ஏற்பட வேண்டுமென்றால், அதிலிருக்கும் வக்கீல்களாலும், பண்டிதர்களாலும், வைத்தியர்களாலும் ஏற்பட்டு விடமாட்டாது. கைத்தொழில், வர்த்தகம் என்பனவற்றின் மிகுதிப்பாட்டினாலேயே ஜனக்கூட்டத்திற்கு உண்மையான மகிமை ஏற்படுகின்றது.

மேற்படி கான்பரன்ஸ் சபைத் தலைவராக இருந்த மிஸ்டர் ஸ்டுவேர்ட் மகமதியக் கூட்டத்தாரின் நிலை மிகுந்த அதிருப்திகரமாக இருக்கவில்லை என்றும், எவ்வளவோ நம்பிக்கைக்கு இடமிருக்கிறதென்றும் பேசினார் என்ற போதிலும் மகமதியர்கள் தமது நிலைமையிலே மிகவும் திருப்தி கொண்டிருக்கவில்லை. அவர்களுடைய புராதனப் பெருமை, ஜனத்தொகை முதலியவற்றையெல்லாம் உத்தேசிக்குமிடத்து அவர்கள் அவ்வாறு அபிவிருத்தியடைந்து வர வேண்டுமோ, அவ்வாறு அபிவிருத்தி பெற்று வரவில்லை என்றே கருதுகிறார்கள். தாம் அவ்வாறு அபிவிருத்தி பெறுவதற்கு கவர்ன்மெண்ட் கூடிய மட்டில் சகாயம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். கவர்ன்மெண்டார் தம்மால் இயன்ற மட்டும் சகாயம் புரிவார்களென்றே நம்புகிறோம்.

ஓர் ஈஜிப்டிய தேசாபிமானி*

1906-இல் நிலவிய எகிப்திய அரசியல் நிலைமை குறித்து பாரதி எழுதுகிறார் .....

ஈஜிப்ட் தேசத்திலே இப்போது பிரிட்டிஷ் அதிகாரம் மிகைப்பட்டிருக்கிறதை நீக்கிவிட வேண்டுமென்றும், ஈஜிப்டின் காரியங்கள் ஈஜிப்ட்காரராலேயே நடத்தப்பெற

வேண்டுமென்றும் ஓர் உணர்ச்சி அத்தேசத்தில் உண்டாகிப் பலமடைந்து வருகிறது. சிறிது காலத்தின் முன்பு 'டான்டா ஷாவி' சம்பந்தமாக அங்கே பிரிட்டிஷ் படைகள் நடத்திய மிருகத்தனமான கொலைச் செயல்களைப் பற்றி முன்னமே பிரஸ்தாபித்திருக்கிறோம். அது முதல் பிரிடிஷாருக்கு விரோதமான உணர்ச்சி அந்நாட்டிலே வெகு ஜாஸ்தியாக இருக்கிறது.

காலத்திற்கிசையவே அந்நாட்டில் அரிய தேசாபிமானிகள் பலர் கிளம்பியிருக்கிறார்கள். ஈஜிப்ட் நாட்டிற்குச் சுயாதீனம் வேண்டுமென்று இத்தேசாபிமான கட்சியார் பெருமுயற்சி செய்து வருகிறார்கள். இவர்களுக்கெல்லாம் சிரோ ரத்தினமாக விளங்குபவர் கெயிரோ நகரத்தில் அட்விலா என்னும் பத்திரிகைத் தலைவராகிய **முஸ்தபா கமல் பாஷா** என்ற மஹானேயாவார்.

கனம் தங்கிய முஸ்தபா பாஷா பெரிய பிரபுக் குலத்தைச் சேர்ந்தவர். சென்ற ஜுலை 24-ம் தேதி லண்டன் இஸ்லாமிய சங்கத்தார் முஸ்தபா பாஷாவுக்கு விருந்தளித்து உபசரணை செய்தார்கள். லண்டனில் வந்திருக்கும் இந்த சுதேச பக்த சிரோன்மணி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் குறைகளை எடுத்துக் கூறுவதில் சிறிதேனும் அச்சமற்றவர். ஈஜிப்ட் நாடு சுயாதீனம் பெற வேண்டுமென்பதில் இவருக்குள்ள ஆவல் வரம்பற்றது.

பிரிட்டிஷார் சமீபத்தில் நடத்திய 'டான்ஷாவி' கொலைகளை இவர் மஹா அநாகரிகம் கொண்ட மிருகச் செயல்களென்றும் இவை எக்காலத்திலும் ஈஜிப்ட் தேசத்தாரின் மனதைவிட்டு நீங்க மாட்டாவென்றும் பேசினார்.

இந்த மீட்டிங்கில் அனேக இந்திய மாதர்களும் கனவான்களும் வந்திருந்தார்கள். அச்சமயத்தில் பரத

இந்தியா, 18.08.1906, ப. 6.

கண்டத்தின் உத்தமபுத்திரராகிய சியாம்ஜி கிருஷ்ணவர்மா மேற்படி ஈஜிப்டிய தேச பக்தர் விஷயத்தில் தமக்குள்ள பெருமதிப்பைப் பற்றிப் பேசினார். சுயாதீனத்தின் மஹிமையைப் பற்றி கிருஷ்ணவர்மா பேசியபோது கேட்போர்களுக்கெல்லாம் மயிர்க் கூச்சலுண்டாகும்படியாக இருந்தது.

'யுத்தம் கூடாது. அமைதி வேண்டியதுதான். ஆனால் அது அடிமைத்தன்மையுடன் கலந்த பேடி அமைதியாக இருக்கக் கூடாது. சுயாதீனத்துடன் கலந்ததாக இருக்க வேண்டும். சுயாதீனத்தை இழப்பதைக் காட்டிலும் மரணமே விசேஷமானது' என்று கிருஷ்ணவர்மா சொல்லினார்.

கிருஷ்ணவர்மாவின் பிரசங்கத்தைக் கேட்டவுடனே கனந்தங்கிய முஸ்தபா பாஷா மஹா சந்தோஷமடைந்து, உடனே எழுந்து வந்து கிருஷ்ண வர்மாவுடன் கை குலுக்கி அன்பு பாராட்டினார். சுயாதீன தேவதையின் தொண்டர்களாகிய இவ்விரண்டு மஹான்களும் கை குலுக்கும் போது சபையோரெல்லாம் பேரானந்தமடைந்தார்கள்.

ஹிந்து – மகமதியர்களின் கூட்டு விருந்து

17.09.1906 'சுதேசமித்திரன்' இதழில் பக்கம் 2-இல் வெளிவந்த செய்தி இதோ . . .

கல்கத்தாவிலே சட்டசபை மெம்பர்களாகிய உயர்ந்த தகுதி பெற்ற ஹிந்துக்கள் பகிரங்கமாக மகமதியர்களுடன் கூட்டு விருந்துண்டு களிப்பதால், அனேக வைதிக ஜனங்களுக்கு மிகுந்த மன வருத்தமுண்டாயிற்றென அறிகிறோம்.

சென்னையிலே தகுந்த பதவியிலுள்ள அனேக ஹிந்துக்கள் ரகசியமாக வெள்ளைக்காரர்களின் உணவுச் சாலைகளிற் சென்று உண்பது சகஜமாகயிருப்பினும் அதனைப் பகிரங்கமாகச் செய்ய மாட்டார்கள். எனினும் சில தினங்களில் முன்பு சென்னை அங்கப்ப நாயக்கன் தெருவிலே நடந்த ஓர் கூட்டு விருந்துக் கூட்டத்தில் அனேக வாலிபர்கள் (ஹிந்து,

மகமதிய, கிறிஸ்துவ வகுப்பினர்) ஒன்று சேர்ந்து பகிரங்கமாக உண்டார்களென அறிகிறோம். இதில் ஒரு பிராமண வக்கீலும் வேறு சில பிராமண வாலிபர்களும் வந்திருந்தனர். முக்கிய விருந்தாளியாகிய புரொபசர் பி.லஷ்மி நரசும் வேறு சிலரும் 'ஜன ஐக்கிய'த்தின் அவசியத் தன்மையைப் பற்றி உபந்நியாசம் செய்தார்கள்.

(கொல்கொத்தாவில்) கல்கத்தாவில்

17.09.1906 சுதேசமித்திரன் ஓர் பெரிய 'கூட்டுணவு விருந்து' என்ற தலைப்பில் வெளியிட்ட செய்தி இதோ . . .

இம்மாதம் 14-ம் தேதி அன்று மாலை கல்கத்தா ஆல்பர்ட் ஹாலில் ஓர் பெரிய கூட்டு விருந்து நடந்தது. அப்போது ஹிந்துக்களில் அனேகரும் மஹமதியர்களில் அனேகரும் வந்திருந்தார்கள்.

ஹிந்துக்களிலே முக்கியஸ்தர்கள்: ஆனரெபில் மிஸ்டர் ஆர்.சௌத்ரி, ஆனரெபில் மிஸ்டர் பூபேந்திரநாத் வஸு முதலாயினோர்.

முகமதியர்களில் மிஸ்டர் ரஸூல், மிஸ்டர் காபர், மிஸ்டர் கஸ் முதலானவர்கள்.

மொத்தம் 50 கனவான்கள் வந்திருந்ததில் மிகவும் உல்லாசமாக விருந்து நடைபெற்றது.

மகமதியர்களும் ஹிந்துக்களும் பரஸ்பரம் வெகுநேசம் பாராட்டிக் கொண்டனர்.

இது குறித்து பராபவ வருஷம் புரட்டாசி மாதம் 6-ஆம் தேதி மகாகவி பாரதி 22.09.1906 'இந்தியா' இதழில் பக்கம் 7-இல் எழுதிய தலையங்கம் இதோ . . .

ஹிந்து – மகமதியர்களின் கூட்டு விருந்து

பெங்காளத்திலே விஷயங்கள் வெகு தீவிரமாக ஓடுகின்றன. செப்டம்பர் மாதம் 14-ம் தேதி அன்று கல்கத்தா

ஆல்பர்ட் மண்டபத்திலே மிகவும் தகுதியும், உன்னத ஸ்தானமும் பெற்ற ஹிந்து கனவான்களும், மகமதிய கனவான்களும் ஒக்க இருந்து, விருந்துண்டதாக அறிகிறோம்.

கல்கத்தா சட்டசபை மெம்பர்களாகிய ஆனரெபில் ஸ்ரீபூபேந்திரநாத் வஸு, ஆனரெபில் ஸ்ரீ சௌதுரி முதலிய பெயர் பெற்ற ஹிந்துக்களிலேகூட அனேகர் மேற்படி விருந்துக்கு வந்திருந்தார்களென்றால், அது சாமானியமாகக் கொள்ளத்தக்க விஷயமில்லை.

*இப்போது சென்னை சட்டசபை மெம்பர்களாகிய ஸ்ரீ எல்.ஏ.கோவிந்தராகவய்யர், ஸ்ரீ வி.ஸி. தேசிகாசாரியார் முதலியவர்கள் மகமதியர்களோடு ஒரே பந்தியிலிருந்து சாப்பிட்டார்களென்றால் அது லேசாகத் தள்ளிவிடக்கூடிய காரியமென்று மதிக்கப்படுமா?**

சுல்தான் மகமத் ஆகாகான் (H.H. Sultan Mahomed Agakhan)

முஸ்லிம்களின் கோஜா வகுப்பினருக்கு பரம்பரைத் தலைவர் ஆகாகான் (1875 - 1958) 1905-இல் முஸ்லிம்களுக்குக்குத் தனிப்பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பியவர்.

Topics of the Week *என்ற தலைப்பில் பராபவ வருஷம் புரட்டாசி மாதம் 20-ஆம் தேதி அக்டோபர் 6, 1906-இல் பாரதி எழுதியுள்ள செய்தி இதோ . . .*

மற்றொரு பக்கத்திலே மகமதியப் பிரதிநிதி கூட்டத்தைப் பற்றி பிரஸ்தாபித்திருக்கிறோம். அதிலே ஆகாகான் இத்தேச நலம் பற்றி விஷயங்களிலே அனுதாபமின்றி இருப்பதைக் குறிப்பிட்டிருக்கின்றோம். இவர்தான் மகமதியப் பிரதிநிதிக் கூட்டத்தாரின் தலைவராகச் சென்று வைசிராய்க்கு அட்டிரஸ் வாஸித்தவர். இவர் யார் என்பதைப் பற்றி நமது நேயர்கள் விவரமாக அறிய விரும்பக் கூடுமாதலால் இங்கே சுருக்கமாக அறிவிக்கிறோம்.

---

* முற்கூறிய நூல், பக். 288 – 289.

இந்த வெகு சுந்தரமான வாலிபர் மிகவும் புராதனமானதும் கவுரவமுடையதுமான ஒரு மகமதியக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்தக் குடும்பம் எத்தனையோ தலைமுறைகளாக இஸ்லாம் அல்லது கோஜாக்கள் என்னும் மகமதிய வகுப்பினருக்கு தலைமையாக இருந்து வந்திருக்கிறது. பம்பாய் மாகாணத்திலும், ஜான்ஸிபாரிலும் மேற்கு யேஷியாவின் (ஆசியாவின்) பல இடங்களிலும் உள்ள கோஜா வகுப்பினருக்கெல்லாம் இந்த ஆகாகானே முக்கிய புருஷர். அவர்கள் இவரிடம் வைத்திருக்கும் அன்பிற்கும் மதிப்பிற்கும் வரம்பே கிடையாது. பம்பாய் மாகாணத்தில் மட்டும் ஒரு லட்சம் கோஜாக்கள் இருக்கிறார்கள். இவர்கள் பாராட்டும் மகமதிய மார்க்கம் ஒரு மாதிரி வினோதமான தன்மையுடைது. இந்த வகுப்பின் முக்கிய தர்மங்களிலே ஆகாகான் குடும்பத்தாரிடம் பக்தி செலுத்துவது ஒரு தர்மமாகும். இப்போதிருக்கும் ஆகாகான் மிகுந்த வாலிபமுடையவராக இருந்த போதிலும் இவர் தம்மிடம் கோஜாக்கள் காட்டும் பக்தியாலும் பொதுவாகவே தம்மிடம் உலகத்தார் காட்டும் மதிப்பாலும் அறிவு புரண்டு போய்விடாமல் மிகவும் அடக்கமுடையவதாக இருப்பதாகப் பொதுவாக நம்பப்படுகிறது. எனினும் இவரது பேச்சுக்களையும், நடைகளையும் கவனிக்குமிடத்து இவர் சிறிது மதிபுரண்டிருக்கிறதாகவே தோன்றுகிறது. இது நிற்க.

இவர் மிகவும் யாத்திரையிலே பிரியமுள்ளவர். இங்கிலாந்திற்கும் ஐரோப்பாவிற்கும் பல தடவை போய் திரும்பி இருக்கிறார். ஆசியாவிலும் அநேக இடங்களில் யாத்திரை செய்திருக்கிறார். இந்த ஆகாகானுடைய பாட்டனார் 1840-ம் வருஷம் பெர்ஷியாவிலிருந்து சில ராஜாங்க சம்பந்தமாக காரணங்கள் பற்றி ஓடிவந்து இந்தியாவிலே சிந்து மாகாணத்திலே குடியேறினார். அவர் 1881-ம் வருஷத்திலே எண்பதாம் வயதில் இறந்து போய்விட்டார். இவருக்குப் பிறகு அந்தப் பட்டத்திற்கு நமது ஆகாகானுடைய தந்தையாகிய சுல்தான் அலி ஆகாகான் வந்தார். அவரும் சில வருஷங்களுக்கு முன் இறந்து போகவே

மேற்படி உயர்ந்த தகுதி இப்போதிருப்பவருக்குக் கிடைத்தது. நிலச்சொத்து ஜாஸ்தியாக இல்லாவிட்டாலும், இவர் மிகுந்த செல்வமுடையவராதலால் தமது கர்வத்தை சுககோபத்துடன் களிக்கிறார். இவரது சீடர்களிலே அனேகர் உயர்ந்த கல்வியும், செல்வமுடையவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகாகான் தக்க கல்வியுடையவர். யாத்திரையினால் இவரது அறிவு விருத்தி பெற்றிருக்றிது. இத்தனை சவுகரியங்களுடைய ஆகாகான் மகமதியர்களை நல்ல வழியில் திருப்ப முயல்வாராயின் அவருக்கு அது மிகவும் சுலபமாக நடக்கும். எனினும் அவர் நடந்த மாதிரி? மகமதியர்களின் அனுகூலத்திற்கெதிராகவே இருந்து வருவது கண்டு விசனிக்கிறோம்.

06.10.1906 இந்தியா இதழில் மகாகவி பாரதி எழுதிய தலையங்கம் இதோ . . .

மகமதியப் பிரதிநிதிக் கூட்டம் (The Mohamedan Deputation)

சிம்லாவிலே வைசிராயிடம் போய் செய்து கொண்ட அறிக்கையும் அவர் சொல்லிய மறுமொழியும் எவருக்கும் அதிக மனஸ்தாபத்துக்கிடங் கொடுக்கக்கூடியவல்ல. இவர்கள் கேட்டுக் கொண்ட விஷயமெல்லாம் சுருக்கிச் சொல்லுமிடத்தில் தமது கூட்டத்திற்கென்று முனிசிபாலிடிகள், சட்டசபைகள் முதல்யவற்றிலே பிரத்தியேகமான பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்பதேயாகும். இந்தப் பிரதிநிதிகள் எல்லா ஜாதியாராலும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கவொண்ணாதென்று, மகமதியர்களால் மட்டுமே தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் இவர்கள் கேட்கிறார்கள்.

மகமதியர்களுக்கு இது அன்னிய தேசமன்று

ஹிந்துக்களாலும், மகமதியர்களாயினும் சில சில சபைகளிலே ஓரிரண்டு பிரதிநிதிகள் வைத்து விடுவதால் முக்கியமான குறைகளொன்று நீங்கி விடமாட்டா. அது எக்கேடு கெட்டுப் போன போதிலும் பிச்சை கேட்கப் போன

இடத்தில் இந்தியாவின் முக்கிய ஜாதியார்களாகிய மகமதியர்களும், ஹிந்துக்களும் ஒருவருக்கொருவர் விரோதமுள்ளது போல் நடந்து கொள்ளுதல் சரியன்று. **மகமதியர்களுக்கு இது அன்னிய தேசமன்று. அவர்கள் இங்கே இன்றைக்கு நேற்றைக்கு வந்து குடியிருக்கும் ஜனங்களில்லை. இந்நாடு ஹிந்துக்களுக்கு எவ்வளவு சொந்தமோ அவ்வளவுக்கு மகமதியர்களுக்கும் சொந்தம். இந்தியாவிலே மகமதியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் எந்த உபாயத்திலேனும் பகைமூட்டிவிட வேண்டுமென்று அன்னியர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். நம்மவர்கள் மூடத்தனத்தால் மேற்படி பிரயத்தமனம் கைக்கூடும்படி விட்டு விடுவோமானால் அதுவே நமக்கு நாசகாலமாக முடியும்.**

சென்னைவாசியாகிய நவாப் ஸையத் மகமத் மேற்படி மகமதியப் பிரதிநிக் கூட்டத்தில் சேராதிருந்துவிட்டமை பற்றிச் சந்தோஷமறிவிக்கின்றோம்.

நவாப் ஸையத் மகமத் இவ்விஷயத்தில் காட்டிய மனோ தைரியமும் சுயாதீனத்தன்மையும் மிகவும் மெச்சுதற்குரியன. மேற்படிப் பிரதிநிதிக் கூட்டத்திலே வந்திருந்தவர்களில் சிலருக்கு இங்கிலீஷ் பாஷையே தெரியாதென்று கூறப்படுகின்றது. இது போகட்டும். நாம் ஆரம்பத்திலேயே கூறியது போல இவர்கள் கவர்ன்மெண்டாரிடம் உபயோகமற்ற சொற்பப் பிச்சைகள் கேட்டு வாங்கிக் கொள்வதில் எவருக்கும் தடையில்லையென்றாலும் அவர்கள் அதை இந்தச் சமயத்தில் இந்த மாதிரியிலே நடத்தி இருக்கக் கூடாது. ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் விரோதமெல்லாம் மறந்து போய் எத்தனையோ நாளாய்விட்டது. இவ்விரு ஜாதியாரும் பலவிடங்களிலே சகோதரரைப் போல வாழ்கிறார்கள். ஏதோ சில அற்ப சவுகரியங்களில் ஆசைப்பட்டுக் கொண்டு, ஹிந்துக்களிடம் விரோதமிருப்பது போல பாவனை பண்ணும் மகமதியர்கள் தமக்குத் தாமே சத்துருக்களாகிறார்கள். ஆகாகான் எவ்வளவோ படிப்பும், செல்வமும், நாகரிகமும் உடையவராயிருந்த போதிலும் இப்போது அவர் பேசி வரும்

பேச்சுக்களும் நடந்து வரும் மாதிரிகளும் சிறிதும் திருப்தி தரக்கூடாதனவாக இருக்கின்றன. ஒருவேளை அவர் இந்த 'அடிமை' ஜனக்கோடிகளுக்கு விரோதமாக எதைச் சொன்னாலும் யார் கேள்வி என்று நினைக்கிறர் போலும். அவர் தேச ஜனங்களுக்கு அதிகரித்து வரும் வல்லமையையும், ஆக்கிரகத்தையும் கவனிக்காமலிருக்கிறார். வடக்கே சில இடங்களில் இவ்வாறு குலைவுகள் ஏற்பட்டிருந்த போதிலும், சென்னை மாகாணம் சம்பந்தப்பட்ட மட்டிலே முக்கிய ஜாதிகளாகிய மேற்படி இரண்டு வகுப்புகளுக்குள்ளும் ஒற்றுமை ஏற்பட்டிருப்பது நமக்கு அளவற்ற மகிழ்ச்சி தருகின்றது.

பாரதி 'இந்தியா' பத்திரிகையில் 13.10.1906-இல் எழுதிய தலையங்கம் இதோ . . .

மகமதிய 'ராஜபக்த சிஹாமணி'களுக்கு ஒரு வார்த்தை

பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் 'ஹிந்து'க்களுக்கிருக்கும் பக்தியைக் காட்டிலும் அதிக பக்தி பாராட்டும் சில மகமதியர்களிருக்கிறார்கள். அவர்கள் பின்வரும் விஷயங்களை தயை செய்து வாசிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

1) ஆங்கிலேயப் பத்திரிகைகள் மேற்படி மகமதிய கட்சியாரின் முயற்சியைப் பற்றி மிகவும் சந்தோஷித்துப் பேசுகின்றன. ஆங்கிலேயப் பத்திரிகைகள் இத்தேச நலத்துக்கு விரோதமான விஷயங்களிலேதான் சந்தோஷமடைவது வழக்கமென்பது கவனிக்க வேண்டும்.

2) இந்தியர்களும், மகமதியர்களும் ஒன்று சேர்ந்து இந்தியா ஐக்கியப்படுதல் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களுக்கும் கெடுதியாகும். ஆதலால், அவர்கள் பலவித உபாயங்களில் ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் மனஸ்தாபம் உண்டாக்க முயற்சி புரிகிறார்கள்.

3) பிரதேச சம்பந்தமான வர்த்தக விஷயங்கள், திரவியபிவிருத்தி சம்பந்தமான விஷயங்கள் என்பனவற்றிலே

இந்தியாவிலுள்ள ஹிந்துக்களுக்கும், மகமதியர்களுக்கும் ஒன்று போலவே தான் அபிவிருத்தி ஏற்படக் கூடுமென்பதை யாராலும் மறுக்க முடியாது. சுதேசிய முயற்சி பலமடைவதால் ஹிந்துக்களைக் காட்டிலும் வர்த்தகபிமானமுள்ள மகமதியர்களுக்கு அதிக லாபமுண்டு. சுதேசிய முயற்சி பலமடைவதால் ஆங்கிலேய அதிகாரிகளின் இனத்தாராகிய ஆங்கிலேயே வர்த்தகர்களுக்கு மட்டுமே கெடுதி விளையும்.

4) ஹிந்துக்களுக்கும், மகமதியர்களுக்கும் மத விரோதமுண்டென்பதை ஆங்கியலேயர்கள் எடுத்து வற்புறுத்திக் காட்டுவதில் யாரும் ஏமாந்து போய்விடக் கூடாது. கிறிஸ்துமார்களுக்கும் மகமதியர்களுக்கும் நூற்றாண்டுக்கணக்கான விரோதமுண்டல்லவா? அதை மிருதுவான வார்த்தைகளால் ஆங்கிலேயப் பத்திரிகைகள் நழுவ விடுவதை நம்புவோன் நிகரில்லாத மூடனாவான்.

5) ஆங்கிலேய அதிகாரிகள் சொல்லியபடி கூத்தாடினால் சர்க்கார் உத்தியோகங்கள் அதிகமாகக் கிடைத்துவிடுமென்று நம்பி மோசம் போய்விடலாகாது. நெடுங்காலமாக கவர்ன்மெண்ட் வேலைகள் அதிகமாகப் பெற்று வந்த பெங்காளிகள் இப்போது கவர்மெண்டினிடம் மிகுந்த அதிருப்தி பாராட்டுவதை மறந்து விடலாகாது. சர்க்கார் பதவிகள் எந்த ஜாதியாருக்கு அதிகமாக இருக்கிறதோ அந்த ஜாதியாருக்கு சரியான அபிவிருத்தியுண்டாவது மிகவும் கஷ்டமாகும்.

6) இங்கிலீஷ் படிப்பினால் ஏற்படும் ஆவல்களையும் ஆசைகளையும் இப்போது ஹிந்துக்கள் உணர்த்துவது போல மகமதியர்கள் எப்போதும் உணர்த்தத் தலைப்படப் போகிறார்களோ அப்போதே அவர்களிடம் ஆங்கிலேய அதிகாரிகளுக்குக் கோபம் பிறந்துவிடும். இப்போது ஹிந்துக்களை நடத்துவதைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகக் கொடூரமாக அப்போது மகமதியர்களை நடத்துவார்கள். ஈஜிப்டில் மகமதியர்களை ஆங்கிலேயர்கள் எப்படி நடத்துகிறார்கள் என்பதை மகமதியர்கள் கவனிக்க வேண்டும்.

*7) ஆங்கிலேய அதிகாரிகடம் இவர்கள் இதைக் காட்டிலும் அதிகமாக 'பக்தி' காட்டியபோதிலும் இவர்கள் 'கருப்பு' மனிதர்களென்பதை அவர்கள் மறக்கப் போவதில்லை. 'கருப்பு மனிதர்' எல்லோரையும் வெள்ளை ஜாதியார் ஒன்று போலவே விரோதிக்கிறார்களென்பது உலகமறிந்த விஷயமாகும்.**

பாரஸீக ஜனப்பிரதிநிதிச் சங்கம் (The Persian Parliament)

27.10.1906 இந்தியா இதழில் பாரசீக ஜனப் பிரதிநிதிச் சங்கம் எனும் தலைப்பில் பாரதி எழுதுகிறார்.

பெர்ஷியா என்று அன்னியர்களால் வழங்கப்படும் பாரஸீக தேசத்தில் அரசன் தன் இஷ்டப்படியே ஆளுவதென்ற பூர்வீகமான வழக்கம் போய் ஜனப் பிரதிநிதிகள் கூடிய பார்லிமெண்ட் சபையாரே அரசனிடத்திலும் ஒருவிதமான அனுமதி வாங்கிக் கொண்டு ஆட்சி புரிவதாகிய நவீன முறைமை ஏற்பட்டுவிட்டதென்பதை நேயர்கள் நன்றாய் அறிவார்கள்.

மேற்படி பார்லிமெண்ட் சபையின் எலெக்ஷன் விதிகள் சில தினங்களின் முன்பு பிரசுரமாயிருக்கின்றன. 30 வயதுக்கு மேல் 60 வயதுக்குள் சர்க்கார் வேலை பார்க்காதவனாகவும், தண்டனைப்படாதவனாகவும் இருக்கும் ஒவ்வொரு பாரசீக ஆண்பிள்ளையும் வோட் செய்ய (பிரதிநிதி குறிப்பிட) உரிமையுடையவனாவான். எலெக்ஷனின் பொருட்டாகத் தேசம் முழுதும் 12 வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. 6 பிரதிநிதிகள் முதல் 19 பிரதிநிதிகள் வரை அனுப்பக்கூடிய வகுப்புக்கள் அவற்றுள்ளே இருக்கின்றன. தேச ராஜதானியாககிய டெஹ்ரான் நகரம் மட்டிலும் ஒரு தனி வகுப்பாகப் பாவிக்கப்படுகிறது. அதிலிருந்து 60 பிரதிநிதிகள் வரலாம். மொத்தப் பிரதிநிதிகளின் தொகை 156. வெளி மாகாணங்களில் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு

---

* முற்கூறிய நூல், பக். 293 – 295.

கூட்டத்தார் தமக்குள்ளே பிரதிநிதியைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

டெஹ்ரானில் ஜனங்கள் நேருக்கு நேராகவே வோட் செய்வார்கள். மூடி முத்திரையிட்ட கவர்களுக்குள்ளே எலெக்டர்கள் தாம் குறிப்பிடும் பிரதிநிதியின் பெயரை எழுதி அனுப்பிவிட வேண்டுமென்று விதியேற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரதிநிதிக்கும் கால வரையறை 2 வருஷம். இந்த 2 வருஷ காலத்திற்குள் அவன் என்ன எழுதினாலுமே, என்ன பேசினாலுமே யாதொரு நிர்ப்பந்தத்திற்கும் உட்படுத்த மாட்டான். அவர்கள் வேறு பெருங் குற்றங்கள் செய்து விடுவார்களானால் அவர்களை விசாரணை செய்ய பார்லிமெண்டாரே அருகராவார்கள். பிரதிநிதிகளுக்குச் சம்பளம் பார்லிமெண்டாராலேயே திட்டம் செய்யப்படும். பார்லிமெண்ட் சபையின் அக்கிராசனாதிபதி, இரண்டு துணைத் தலைவர்கள், ஒரு காரியதரிசி என்போர் வருஷந்தோறும் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

மேற்கண்டபடி பாரசீகத்தில் நடக்கப் போவதைப் பற்றி ஆங்கிலேயர்கள் எல்லாம் வெகு சந்தோஷம் பாராட்டுகிறார்கள். உலகம் நாகரிகமடைவதில் தமக்கு மிகவும் மகிழ்ச்சியுண்டாய்விட்டதாக இவர்கள் நடிக்கிறார்கள்.

இந்தியாவுக்கும் மட்டிலும் பிரதிநிதிச் சபை என்ற பேச்சை யாரேனும் பேசுவார்களேயானால் இந்த வெள்ளை மூர்த்திகளுக்கெல்லாம் தலைகால் தெரியாமல் கோபம் பிறந்துவிடுகிறது. காங்கிரஸ் கட்சியார் பிரதிநிதிச் சபையைப் பற்றி உச்சரிக்கும் பக்ஷத்தில் உடனே அவர்கள் ராஜ துரோகிகள் என்பதாக ஆங்கிலேயர்கள் குதிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். பெர்ஷியா, சீனா முதலிய வெளிநாடுகளெல்லாம் முன்னுக்கு வருவதில் ஆங்கிலேயர்களுக்குச் சந்தோஷந்தான். ஏனென்றால், அவைகள் முன்னுக்கு வருவதை இவர்கள் முக்கி முக்கிப் பார்த்தாலும் நிறுத்த முடியாது. ஆனால், இந்தியாவை முன்னுக்கு வரவொட்டாமல் அமுக்கிவிட வேண்டுமென்று

இவர்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை நம்பியா நமது காரியங்கள் பலிக்கப் போகின்றன?

05.01.1907-இல் இந்தியா இதழில் பாரதி எழுதுகிறார்.

அமீரின் வரவு

இதுவரையில் எதிர்பார்த்திருந்த ஆப்கான் அமீர் சென்ற புதன்கிழமை இந்தியாவில் எல்லைக்குள் அடி வைத்திருக்கிறார். முன்னமே செய்திருக்கும் ஏற்பாட்டின்படி வருகிற புதன்கிழமை ஆக்ரா வந்து சேருவாரென நம்பப்படுகிறது. அதற்கு வேண்டிய இட அமைதிகளும் அலங்காரங்களும் முன்னமே அமைத்திருப்பதாயும் தெரிய வருகிறது. எல்லோரும் அவரது வரவை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

இவர் ஆசியாவில் ஓர் சுயஆட்சி பெற்ற அரசர். இவரும் இவரது முன்னோரும் ஆளுந்திறமை வாய்ந்த பெருமன்னர்கள். இவரது தகப்பனார் அப்துல் ரகிமான் என்பவர் அதிக தந்திரத்தோடு அரசு புரிந்தவர்; தனது அரசுரிமைகளையும், ஜனங்களுடைய சுதந்திரங்களையும் வீரத்துடன் காத்து வந்தார். அவருடைய புத்திரனாகிய ‘**அபிபுல்லா கான்**’ *எனப் பெயர் பூண்ட இவரும், அப்பெருமைகள் அனைத்தையும் பெற்றிருக்கிறார்.*

இந்தியாவும், ஆப்கானிஸ்தானமும் வெகுகாலமாய் நேசமடைந்திருக்கின்றன. லார்ட் கர்ஸன், அந்த தேசத்தை உறுதிப்படுத்த தூது விடுத்ததை நாம் முன்னமே கேட்டிருக்கின்றோம். அப்போதே அவரை இந்தியாவுக்கு அழைத்திருந்தும் ஏதேதோ அசந்தர்ப்பங்களால் வர முடியாமல் போய்விட்டது. கடைசியாகச் சென்ற புதன்கிழமை ‘லாண்டிகோடல்’ என்னுமிடத்தில் வந்து சேர்ந்திருக்கிறார். அங்கே இரண்டு ஆங்கிலேய உத்தியோகஸ்தருடன் அதிக மனக்களிப்போடு பேசினதாகவும் சொல்லப்படுகிறது.

இவர் ஆப்கானிஸ்தானத்தை விட்டுப் புறப்பட்டது இதுதான் முதல் தடவை. இவர் தனது ராஜதானியை விட்டு

வெளியிலெங்கும் போனதேயில்லை எனச் சொல்லப்படுகிறது. இவர் இங்கு வந்து பார்க்க வேண்டியதும் அதனால் அறிந்து கொள்ள வேண்டியதும் அனேகம் உளவென்பது நிச்சயமே.

அதனால் தனக்கும் தன்னுடைய பிரஜைகளுக்கும் உண்டாகும் அனுகூலங்கள் அதிகமாவதற்குத் தடையேயில்லை.

நமது ராஜாங்கத்தாரும் அவரை வரவேற்பதில் அதிக ஆவல் கொண்டிருப்பதற்கும் பணம் செலவு செய்வதற்கும் பின்வாங்கார்கள். மனதிலொன்றும் வெளிப் பேச்சொன்றுமாய் காரியம் சாதிப்பதற்கு வேஷம் போடும் நமது ராஜாங்கத்தாருக்கு யாரேனும் உபதேசிக்க வேண்டுமா? அதிலும் இந்திய ராஜாங்கத்திற்கு அச்சாணி போலிருக்கும் இவரை வரவேற்பதில் அவர்கள் குதூகல நடிப்புக்குச் சொல்ல வேண்டுமா? நாமும் அவர்கள் செய்யும் வெளி மயக்கைக் கவனித்து நிற்போம்.*

19.01.1907-இல் மகாகவி பாரதி 'இந்தியா' இதழில் எழுதுகிறார்.

ஆப்கானிஸ்தானத்து அமீர்

ஆப்கானிஸ்தானத்து ராஜாவாகிய அமீரை இந்தியா கவர்ன்மெண்டார் இப்படி அபரிமிதமான உபசாரங்கள் செய்து வருவதின் உள் சூட்சுமம் இன்னதென்று தெரியவில்லை.

அவர் இந்தியாவின் எல்லைக்குள் கால் எடுத்து வைத்த நாள் முதலாக இதுவரை அவர் சென்றவிடங்களிலெல்லாம் ராஜோபசாரம் நடந்து வருகின்றது.

அமீர் சொல்லிய வார்த்தைகளையும், செய்த சாதாரணச் செய்கைகளையும் 'பரங்கி'ப் பத்திரிகைகள் வெகு

---

* இளசைமணியன், பாரதி தரிசனம், இரண்டாம் பாகம், சென்னை, 1977, பக். 183 – 184.

ஆடம்பரமாகத் தம்பட்டமடித்து வருகின்றன. இதற்கெல்லாம் முகாந்திரமென்ன?

'நோவோலி ரெம்யா' என்ற ருஷியப் பத்திரிகையொன்று அமீர் இந்தியாவில் யாத்திரை புரிவதைப் பற்றிப் பேசும்போது சில சமுசயங்கள் அடைகின்றது.

அமீர் தமது சொந்த விருப்பத்தின் பேரில் இந்தியாவுக்கு வரவில்லையென்றும், பிரிட்டிஷாரின் பலவந்தத்தின் பேரிலேயே வந்திருக்கிறாரென்றும் மேற்படி பத்திரிகை நினைக்கிறது. அமீருடைய தேசத்தின் சுதந்திர நிலைமையைக் குறைக்க வேண்டுமென்ற உட்கருத்துடன் பிரிட்டிஷார் வேலை செய்து வருவதாக அப்பத்திரிகை நினைக்கின்றது.

ஆட்டை வெட்டக் கொண்டு போகுமுன்பாக அதற்குச் சரியானபடி தழைகள் உண்பித்துச் சந்தனமும் குங்குமமும் பூசி மாலை போட்டு உபசாரங்கள் செய்யும் விஷயத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆப்கன் அமீர் விஷயத்திலும் பிரிட்டிஷார் அதே மாதிரியான வேலைதான் செய்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

அமீர் செய்து வருவதாகப் 'பரங்கி'ப் பத்திரிகைகள் எத்தனையோ டம்பக் காரியங்களைத் தம்பட்டமடித்து வருவதாக மேலே சொன்னோம். இவற்றுள்ளே சில காரியங்கள் உண்மையாகவே மிகவும் விசேஷமானவை.

டில்லியில் பக்ரீது பண்டிகைக்கு மகமதியர்கள் அமீரை அழைத்தார்கள். அப்போது மகமதியர்கள் பசுக்களைக் கொல்லும் பட்சத்தில் தாம் வரமுடியாதென்று அமீர் சொல்லி விட்டார்.

பசுக்களை வெட்டுவது ஹிந்து ஜனங்களுக்கு மனஸ்தாபம் உண்டுபண்ணக் கூடுமாதலால், அதற்குப் பதிலாக ஆடுகளை வைத்துக் கொண்டால் மட்டுமே தாம் வரக்கூடுமென்று அமீர் தெரிவித்தார்.

ஹிந்து ஜனங்களும் மகமதியர்களும் எவ்விதத்தாலும் மனஸ்தாப மிகுதியடையலாகாதென்ற விஷயத்தில் இவருக்குள்ள அபிப்பிராயத்தை எல்லா மகமதியர்களும் நன்கு தெரிந்து கொண்டு நலம் பெறுவார்களென நம்புகின்றோம்.

அலிகார் மகமதியக் காலேஜூக்கு அமீர் வந்திருந்த காலத்தில் மேற்படி காலேஜின் உதவியின் பொருட்டாக மொத்தத் தொகையாக 20,000 ரூபாய் கொடுத்தார். மாதந்தோறும் 5,000 ரூபாய் நன்கொடை அனுப்புவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்.*

இந்து - முஸ்லிம் ஒருமைப்பாட்டில் அமீர் கொண்டிருந்த பிடிப்பால் கவரப்பட்ட பாரதி, தொடர்ந்து பதிப்பித்த செய்திகள் இதோ . . .

அமீர் அரசரின் பெருந்தன்மை

அமீர் அரசர் டில்லி நகரத்துக்கு விஜயஞ் செய்த பொழுது அங்குள்ள மகமதியர் தம் ஜாதியாராகிய அமீரின் மீது வைத்திருக்கும் அன்பையும் பக்தியையும் காட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர் வரவின் ஞாபகார்த்தமாக அவருக்குச் செய்யப்படும் விருந்தில் நூறு பசுக்களைக் கொல்ல வேண்டுமென்று பிரேரேபித்தார்கள்.

ஆனால், இதற்கு அமீர் சிறிதும் சம்மதிக்கவில்லை. பசுக்களைக் கொல்வது இந்துக்களுக்கு வியசனத்தை உண்டாக்கக்கூடியதாயிருப்பதால், அவ்வாறு கொன்று அதனால் இந்துக்களுடைய மனஸ்தாபத்தை வருவித்துக் கொள்ளத் தமக்குப் பிரியமில்லையென்றும், அன்றியும் தாம் இந்தியாவைப் பார்க்க வந்திருக்கும் சமயத்தில் சகல ஜாதியாரும் ஒற்றுமையாயிருப்பதுதான் தமக்குச் சந்தோஷமே தவிர, ஒருவருக்கொருவர் விரோதங் காட்டிக் கொண்டிருப்பதைக் காணத் தமக்கு மிகுந்த வியசனம் உண்டாகுமெனவும் கூறித் தடுத்ததுமன்றி, தம்முடைய

---

* இளசைமணியன், பாரதி தரிசனம், இரண்டாம் பாகம், சென்னை, 1977, பக். 184 – 185.

விருப்பத்திற்கிசையாமல் பசுக்களைக் கொல்வதாயிருந்தால் அப்படிப்பட்ட விருந்தில் தாம் சேருகிறதில்லையெனவும் எச்சரிக்கை செய்து விட்டார். வேண்டுமானால், ஆடுகளைக் கொல்லலாமே தவிர பசுக்களைக் கொல்லக் கூடாதென்று சொல்லிவிட்டார்.

இதைப் பற்றிப் பத்திரிகைகளும் புகழ்ந்து பேசுகின்றன. அநேக இந்துக்கள் பற்பல விடங்களிலும் கூட்டம் கூடி மேற்கூறியவாறு அமீர் பசுக்கள் மீது தயவு காட்டியதற்காக மிகவும் சந்தோஷப்படுவதாய்த் தந்தியனுப்பி வாழ்த்தினார்கள்.

இதுவரையும் சிற்சில அற்ப குணமுள்ள பரங்கிகள் (ஆங்கிலோ - இந்தியர்) இந்துக்களுக்கும் மகமதியருக்குமுள்ள விரோதத்தை அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் பசுக்களைக் கொல்லும்படி மகமதியரைத் தூண்டி விளையாட்டுப் பார்ப்பது வழக்கம். அப்படிப்பட்ட நிர்மூடர்கள் இப்பொழுதாவது மகமதிய ஜாதியாராகிய அமீர் அரசரைப் பார்த்தேனும் திருந்துவார்களாக.*

விவேகபாநு – 01.09.1900

1900 செப்டம்பர் முதல் நாள் தூத்துக்குடி அருணோதயம் அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப் பெற்று கணபதியானந்த சுவாமியை ஆசிரியராகக் கொண்டு 2 அணா விலையில் (வருஷச் சந்தா தபால் கூலியுடன் ரூ.1) வெளிவந்த இதழ் விவேகபாநு.

தேசபக்தச் செம்மல் வ.உ.சி.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. முதல் இதழிலேயே 'கடவுளும் பக்தியும்' என்ற கட்டுரை எழுதியுள்ளார்.

1901 மார்ச் 1

திருநெல்வேலி நூருல் இஸ்லாம் அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டு தூத்துக்குடியில் பிரசுரிக்கப்பட்ட

---

r* இந்தியா, 19.01.1907, ப. 13.

விவேகபாநுவின் ஆசிரியர் வள்ளிநாயககசுவாமி. பின்பு மதுரை ஸ்ரீமீனாம்பிகை அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்று வருஷச் சந்தா ரூ. 2, பத்திரிகை 1-க்கு விலை அணா 5. புரோப்ரையிட்டர் எம்.ஆர். கந்தசாமிக் கவிராயர் பத்திராதிபர் எஸ்.சாமிநாதையர் என்று வெளிவந்த இதழ் விவேகபாநு.

மு.ரா. கந்தசாமிக்கவிராயர்

10.01.1907-இல் ஆக்ராவுக்கு விஜயஞ் செய்த ஆப்கன் அமீர் குறித்து முரா.கந்தசாமிக் கவிராயர், ஜனவரி 1907 விவேகபாநு இதழில், 'எம் மதத்தவராயிருப்பினும், பிற மதங்களை இகழ்தல் நியாயமன்று. சொந்த மதத்தில் அதிகப் பற்று வைத்தால் பிறர் மதங்களை இகழ வேண்டுமோ? பிறர் இக்கனவானது முன் மாதிரியைப் பின்பற்றுவார்களாக' என்றும் தம் நாட்டில் ஹிந்துக்களுக்கும் மிகப் பெரிய வேலைகள் கொடுத்திருப்பதாகக் கூறினாராம். இம்மாதிரி மனோவிலாசமுள்ள ஒரு மகம்மதிய அரசர் நம் நாட்டு அயலிலிருக்கும்படியான பாக்கியம் நமக்குக் கிடைத்ததைப் பற்றி மிகவும் சந்தோஷிக்கிறோம்.

தம் பிரஜைகளுக்கு வேண்டிய சௌகரியங்களுக்குத் தேடிக் கொடுப்பதில் அமீர் அவர்கள் கண்ணுங் கருத்தும் உள்ளவரென்றும் தெரிய வருகிறது. தாம் இப்பூவுலகில் பகவானால் அனுப்பப்பட்ட நோக்கத்தை நன்கு அறிந்தவராக அமீர் அவர்கள் சில குறிப்புகளால் வெளியிட்டனர். அவ்வித பயபக்தி அரசர்களுக்கு உள்ள வரையில் இராஜாங்கத்துக்கும் குடிகளுக்கும் யாதொரு குறைவும் நேரிடாது என்பது திண்ணம் என்றும் பாராட்டி எழுதியுள்ளார்.

ஆப்கானிஸ்தானத்து அமீரின் பெருந்தன்மை

02.01.1907 'இந்தியா' இதழில் அமீரின் பெருந்தன்மை குறித்து பாரதி பதிப்பித்துள்ள செய்தி,

அமீர் அரசர் சிறு குழந்தைகள் மீது அளவற்ற அன்பு காட்டுவதாய்த் தெரிகிறது.

அமீர் அரசர் பஞ்சாபிலுள்ள அம்பாலா என்னும் ஸ்டேஷனுக்கு வந்தவுடன் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த சுமார் 9 வயதுள்ள குழந்தையைக் கண்டார். கண்டவுடன் அக்குழந்தையின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த பிதாவினிடம் அக்குழந்தையைத் தன்னுடைய வண்டிக்குள் கொணர்ந்து விடும்படி அன்பாய்க் கேட்டுக் கொண்டார்.

பிதாவும் அவ்வாறே குழந்தையை அமீர் உட்கார்ந்திருந்த வண்டிக்குள் ஏற்றிவிட்டார். பின்பு அமீர் சிறிது நேரம் அக்குழந்தையோடு பேசிக் கொண்டிருந்துவிட்டு, அதன் பெயரையும் விலாசத்தையும் ஒரு கடிதத்தில் எழுதும்படி அதைக் கேட்க, அக்குழந்தையும் அப்படியே செய்தது.

பின்பு அமீர் இரண்டு தங்க மொகராவும், இரண்டு தங்க ஆப்கன் நாணயங்களும் அதன் கையில் கொடுத்து, அந்தத் தங்கத்தினால் ஒரு புரூச் (Brooch) என்னும் நகை செய்து அக்குழந்தைக்கு அணியும்படி அதன் பிதாவினிடம் வேண்டிக் கொண்டார்.

இந்தியாவுக்கு வந்தபொழுது முதல்முதல் இக்குழந்தையைப் பார்த்தபடியால், அதற்கு அடையாளமாக அவ்வாறு நகை செய்ய வேண்டுமென்றும், தான் ஊருக்குப் போன பின், இக்குழந்தைக்கு அடிக்கடி கடிதம் எழுதுவதாகவும் சொன்னார்.

முகமதிய குலத்திற் பிறந்த இவ்வரசர் பொதுவாய் இந்துக்கள் மீதும், அவர்களுடைய மத சம்பந்தமான அபிப்பிராயங்களிலும், கொள்கைகளிலும் இவ்வளவு அனுதாபமும், சிறு குழந்தைகள் மீது இவ்வளவு அன்பும் காட்டுவது மிகுதியும் புகழ்ந்து பாராட்டத்தக்கது என்பதில் தடையின்று.

இவருடைய உத்தம குணமானது இந்தியாவிலுள்ள எல்லா முகமதியர்க்கும் உண்டாய்விடும் பக்ஷத்தில் இந்தியாவுக்கு அளவிடற்கரிய நன்மைகள் உண்டாகுமென்பது எமது எண்ணம்.

ஆப்கன் அமீர்

16.02.1907 இந்தியா இதழில் பாரதி எழுதுகிறார்.

*ஆப்கானிய அமீரிடம் ஒரு பெங்காளிப் பிராமணர் தாம் மிகவும் ஏழையென்பதாக ஒரு விண்ணப்பம் கொடுத்தார். அதன் பேரில் அந்த பிராமணருக்கு தமது ராஜ்யத்தில் 50ரூ மாதச் சம்பளமுள்ள ஒரு உத்தியோகம் கொடுத்திருப்பதாக அறிகிறோம். அந்தப் பிராமணர் ஆப்கானிஸ்தானம் போய்ச் சேர்வதற்குள்ள படிச்செலவும் கொடுத்திருக்கின்றாராம். 'ஹிந்துக்கள் வேறு. நாம் வேறு' என்று எண்ணியிருக்கும் பேதை மகமதியர்கள் முஸ்லிம் சக்ரவர்த்தியாகிய அமீரின் செய்கைகளை கிரமமாக கவனித்துவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.**

23.02.1907

ஆப்கன் அமீர் இந்தியச் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு திரும்புகிற வேளையில் 'இந்தியா' இதழில் பாரதி 23.02.1907-இல் எழுதியது இதோ . . .

இவர் அடுத்த வாரம் தமது சுதேசத்திற்கு திரும்பச் செல்லுகின்றார். இவர் இந்நாட்டிற்கு வந்ததிலிருந்து இங்குள்ள மகமதிய ஜனங்களுக்கும் ஹிந்து ஜனங்களுக்கும் எத்தனையோ விதமான நன்மைகள் விளையக் கூடுமென ஊஹிக்கின்றோம்.

அமீர் இங்கு வந்திருந்து வரை இவ்வளவு ஜாஸ்தியான சாமர்த்தியமுடையவரென்பதை நாம் அறிந்திருக்கவில்லை.

ஆப்கன் அமீர் மகாராஜாவும் டக்கா நவாபும்

16.03.1907 'இந்தியா' இதழில் மகாகவி பாரதி எழுதுகிறார்.

ஆப்கன் அமீராகிய ஹபிபுல்லா மகாராஜா இந்தியாவுக்கு வந்திருந்தபோது ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும்

---

* இளசை மணியன், முற்கூறிய நூல், பக். 186, 187.

சமாதான பங்கம் ஏற்படக்கூடிய காரியம் ஏதேனும் நடக்கும் பக்ஷத்தில், டெல்லி நகரத்திற்குள்ளே காலை எடுத்து வைக்க முடியாதென்று சொல்லிவிட்டார்.

ஹிந்துக்களும் மகமதியர்களும் சினேகம் தவறாமல் அண்ணனும் தம்பியும் போல ஒத்து வாழ வேண்டுமென்பது ஹபிபுல்லா அரசரின் முக்கியச் சிந்தனையாகும்.

ஹிந்து ஜனங்களுக்கும். மகமதிய ஜனங்களுக்கும் விரோதம் ஏற்படுத்தி, இருவர்களையும் பலஹீனத்திற்குள்ளாக்கி வைத்திருக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணம் கொண்ட பொது எதிரிகளின் ஏமாற்றிலே அகப்பட்டிருக்கும் டக்கா நவாப் போன்றவர்கள் ஆப்கன் அரசரின் பெருந்தன்மையையும், தீர்க்காலோசனையையும் இன்னும் அறியாதவர்களாயிருக்கிறார்கள்.

டக்கா நவாப் கோமில்லா ஊருக்குள் காலெடுத்து வைத்தவுடனே, அங்கே ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் இடையே குத்தும், சண்டையும், கலகமும் கொள்ளையுமாக முதிர்ந்து விட்டன.

முதல் நாள் வரை அன்பும் ஆதரவுங் கொண்டு வாழ்ந்தவர்கள் இந்த நவாப் போய்ச் சேர்ந்தவுடனே ஓநாயும் ஆடும் போலாகி விட்டார்கள்.

நவாப்பின் காரியதரிசியாகிய மிஸ்டர் கர்ஸெட்ஜியிடமிருந்து ‘இங்கிலீஷ்மான்’ பத்திரிகைக்கு ஹிந்துக்களைப் பழி கூறி அனுப்பப் பெற்றதாகப் பிரசுரமுற்ற தந்திகள் இப்போது யதார்த்தத்திலே மிஸ்டர் கர்ஸெட்ஜியால் அனுப்பப்படவில்லையென்று வெளியாகிறது. இந்தப் பொய்த் தந்திகள் பிரசுரித்த ‘இங்கிலீஷ்மான்’ பத்திரிகை இப்போது வெட்கமில்லாமல் அவை பொய் என்பதைத் தானே வெளியிடுகின்றது.

ஹிந்துக்கள் சொல்வதை நோக்குமிடத்து டக்கா நவாபின் தூண்டுதலின் பேரில் மகமதியர்களாலேயே கலகம் ஆரம்பமாயிற்றென்று தெரிகிறது.

டக்கா நவாபோ முதற் குற்றம் ஹிந்துக்களுடையதே என்று சொல்லுகிறார்.

ஸர்க்கார் அறிவிப்பைப் பார்த்தால் அது மேற்கூறிய இரண்டு அறிவிப்புகளினின்றும் மாறுபடுகிறது. இன்னும் கலக விவரங்கள் நன்கு விசாரணை செய்யப்படுமென நம்புகிறோம்.

கோபமில்லா கலகத்தைப் பற்றிய ஸர்க்கார் அறிக்கை

ஸர்க்கார் அறிவிப்பிலே குற்றம் ஹிந்துக்களின் மீது சாரும்படியாகவே எழுதப்படுகின்றது.

'ஹிந்துக்கள் பெங்காளப் பிரிவுக்கு விரோதமாகப் பொதுக்கூட்டங்கள் நடத்தி வந்தார்கள். அதற்கு எதிரான கூட்டங்கள் நடத்தும் பொருட்டுக் கோமில்லாவுக்கு டக்கா நவாப் வந்தார்.

அப்போது ஹிந்துக்கள் சிறிது அவமதிப்புகள் செய்தார்கள். அதன் பேரில் சொற்பக் கலவரைகள் ஏற்பட்டன. எவ்விதமான கொள்ளைகளும் கிடையா. ஒரு மகமதிய ரொட்டி வியாபாரி சுடப்பெற்றது போன்ற ஒரு சில விஷயங்களைத் தவிர மற்றப்படி பலமாக ஒன்றும் நடந்து விடவில்லை.' என்பது ஸர்க்கார் அறிவிப்பின் சுருக்கம்.

ஸர்க்கார் அறிவிப்பு இவ்வாறு இருக்குமென்பது நாம் முன்னமே நினைத்த விஷயந்தான். கோர்ட்டிலே மாஜிஸ்ட்ரேட் இந்தக் கலவரை விஷயமான ஒரு கேஸிலே தீர்ப்புச் சொல்லும் போது தமது அந்தரங்கத்திலிருப்பதை வெளிப்படுத்தி விட்டார்.

ஸ்ரீ விபினசந்திரபாலரைப் போன்ற ஹிந்து உபந்நியாசகர்களின் போதனைகளினால்தான் இந்தக் கலகங்கள் ஏற்பட்டனவென்றும், குற்றமெல்லாம் ஹிந்துக்களிடமிருந்தே தொடங்கியதென்றும் அந்த மாஜிஸ்ட்ரேட் சொல்லினராம்.

இதைக் கேட்டவுடனே ஸ்ரீ விபின சந்திர பாலர் பின்வருமாறு மறுமொழி பிரசுரித்திருக்கின்றார்:

'நான் கோமில்லாவுக்குப் போயிருந்த பொழுது சுமார் 6 முகம்மதி கனவான்கள் நான் ஒரு பிரசங்கம் செய்ய வேண்டுமென்று விரும்பினார்கள். அவ்வாறே செய்யப்பட்ட பிரசங்கத்தில் ஒரு மகமதிய ஜமீன்தார் அக்கிராசனம் வகித்தார். சென்ற வாரத்தில் செய்த பிரசங்கத்தில் எத்தனையோ கோமில்லா மகமதியர் வந்திருந்தார்கள். அதற்கு மிஸ்டர் ரஸுல் சபாநாயகராயிருந்தார். மகமதிய பொது ஜனங்களும் அநேகர் வந்திருந்தார்கள். ஆதலால் நான் செய்த பிரசங்கங்கள் இந்துக்களுக்கும் மகமதியர்களுக்குமிடையில் ஒற்றுமையை உண்டாக்கினதேயன்றி விரோதத்தை உண்டாக்கவில்லை.

இந்தக் கலகங்களுக்குக் காரணம் நான்தானென்று ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டு சொல்வது பெரிய பொய்.'

கலகத்தைத் தூண்டுவோர் ஒருபுறமிருக்க, இரு ஜாதியார்களுக்குமிடையே மீண்டும் அமைதியும் அன்பும் ஏற்படச் செய்ய வேண்டுமென்று ஹிந்துக்களுக்குள்ளேயும், மகமதியருக்குள்ளேயும் உண்மையான ஜனத்தலைவர்கள் முயற்சி செய்து வருகின்றார்கள்.

முக்கியமாக, விபின சந்திர பாலர் ஹிந்து ஜனத்தலைவர்களைச் சமாதானஞ் செய்து கொள்ளும்படி தூண்டுதல் செய்கின்றார்.

கோமில்லா கலவரையைப் பற்றிக் கேள்வியுற்ற நிமிஷமே ஸ்ரீ விபினசந்திரபாலர் ஹிந்து ஜனத்தலைவர்களுக்கு அனுப்பிய தந்தியைச் சென்ற வாரமே மொழிபெயர்த்தெழுதத் தவறிவிட்டோம். இந்தத் தடவையில் மொழிபெயர்த் தெழுதுகின்றோம்.

'சகோதரர்களே! நீங்கள் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களிடம் பிரியாது கொடுக்க வேண்டாம்.

அவர்கள் இவ் விஷயத்தில் நீதியைச் செலுத்த மாட்டார்கள். கட்டாயம் நமக்குப் பிரதிகூலம்தான் செய்வார்கள். நம்முடைய வழக்குகளை நாமே தீர்த்துக் கொள்வோம். இந்த விஷயத்தை விசாரிப்பதற்காக, ஒரு கமிட்டி நியமிக்க வேண்டும். அதில் மிஸ்டர் மோல்வி மகமது யூஸப் தலைவராயும், மிஸ்டர் ரஸூல் ஸ்ரீ கோகலே, அஸூவினி பாபு, சந்த்ர மோகன பாபு இவர்கள் மெம்பர்களாயுமிருப்பார்கள். இந்தச் சபையார் கோமில்லாவுக்கு வந்து இரண்டு கக்ஷியாரையும் விசாரித்து வேண்டிய ஏற்பாடு செய்து கலகத்தை அமர்த்துவார்கள். இதுவே சரியான யோசனை. **கோர்ட்டுகளுக்கு இனிப் போக வேண்டாம். அங்கே நியாயம் கிடையாது.'**

ஹிந்துக்களுக்குள்ளே ஸ்ரீ விபினசந்திரபாபு, மகமதியருக்குள்ளே மிஸ்டர். ரஸூல் முதலிய நல்லோர்கள் இருக்குமட்டில், நாம் அதிக மனஸ்தாபங்கள் ஏற்பட்டுவிடுமோ என அஞ்ச வேண்டுவதில்லை.

நமது மகமதிய சகோதரர்களும் ஆப்கன் அரசராகிய ஹபிபுல்லாவைப் போன்ற மேன்மக்களின் குணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும், கடன்பட்டு மதிப்பற்று மூளை மயங்கிப் போயிருக்கும் டக்கா ஸலிமுல்லாவைப் போன்றவர்களைக் கவனிக்கலாகாதென்றும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

04.05.1907

இந்தியா இதழில் பாரதி எழுதுகிறார்.

ஆப்கானிஸ்தானத்திலே சுதேசீயம்

கீழ் பெங்காளத்திலே சில சுயபுத்தியில்லாத மகமதியர்கள் மட்டும் சுதேசிய முயற்சிக்கு விரோதமாக இருக்கிறார்களே அல்லாமல், மற்றபடி இந்தியாவில் பெரும்பான்மையான மகமதியர்கள் நம்முடன் பொது நோக்கமுடையவர்களாகவே இருக்கிறார்களென்பது யாவரும் அறிந்த விஷயம். ஈஜிப்ட்

தேசத்து மகமதியர்களெல்லாம் நமது முயற்சி விஷயத்திலே மிகவும் அனுகூல சிந்தை கொண்டவர்களாக இருக்கிறார்கள். இப்போது ஆப்கானிஸ்தானத்திலேயும் முல்லாக்கள் என்று சொல்லப்படும் குருக்கள் ஆகியோரால் கொண்டு வரப்படும் சர்க்கரை முதலிய எல்லா பரதேசி சாமான்களையும் பஹிஷ்காரம் செய்துவிட வேண்டுமென்று சபைகள் கூடி தீர்மானம் செய்து கொள்கிறார்கள்.

ஆப்கன் அமீர் ஆங்கிலேய வஸ்துக்களிடம் பிரியம் வைத்திருப்பது பிழையென்று இவர்கள் கண்டனை புரிந்து பேசுகிறார்கள்.*

காஜா அதிருல்லா

'நவாப் ஸாலி முல்லாவின் திவ்ய சரித்திரம்' என்று 22.06.1907 இந்தியா இதழில் டாக்கா நவாப் பொலி முல்லாவின் திவ்ய சரித்திரத்தை எழுதிய பாரதி, அவரது பிரிட்டிஷ் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார். நவாபின் தம்பியாகிய காஜா அதிருல்லா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். சுதேச விரோதிகளுடன் சேர்வதில் விருப்பமில்லாமல் தமது குலப்பெருமையைக் காப்பாற்றி வருகிறார் என்று காஜா அதிருல்லாவைப் பாராட்டி பாரதி போற்றியுள்ளார்.

துருக்கியின் நிலமை

17.10.1908 இந்தியா இதழில் மகாகவிபாரதி எழுதுகிறார்.

சில நாட்களுக்கு முன்னேதான் துருக்கியானது கொடுங்கோல் அரசினின்றும் விடுபட்டது. மாட்சிமை தாங்கிய துருக்கி சுல்தான் 'இளந் துருக்கர்' என்ற கட்சியாரின் செல்வாக்கிற்கு உட்பட்டு, தன்னுடைய அரசாட்சியை ஜன சமூகத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக்கினார். அப்படிச் செய்ததோடுகூட தன்னுடைய நோக்கம் ஆதிமுதல் தன் தேசத்தை மகோன்னத ஸ்திதிக்குக் கொண்டு வரவேண்டுமென்றிருந்ததே ஒழிய வேறில்லை என்றார். அந்த

---

* இளசைமணியன், முற்கூறிய நூல், ப. 191.

நோக்கம் நிறைவேறாமல் நாளுக்கு நாள் தேசமானது பலஹீனமடைந்து வந்ததற்கும், தன்னுடைய அரசாட்சி எல்லாராலும் அவமதிக்கப்பட்டு வந்ததற்கும், தன்னை ஐரோப்பிய வல்லரசுகள் சொல்லி முடியாத நஷ்டங்களுக்கும் அவமானங்களுக்கும் உட்படுத்தியதற்கும் காரணம் தன்னைச் சுற்றியிருந்த மந்திரிகளினுடையவும், பாரம்பரியமான பிரபுக்களினுடையவும் சுயநலமான கொள்ளைச் சிந்தனையேயென்றும் பகிரங்கமாய்ச் சொல்லிவிட்டார்.

இளந் துருக்கர்வசம் அதிகாரம் போய்ச் சேரவே அந்த சுயநலமுள்ள தேசத்துரோகிகள் போனவிடம் தெரியாமல் பறந்தோடி விட்டார்கள். சுல்தானின் பிரஜைகள் ஜாதி பேத மத பேதமின்றி ஒருங்கே ஒரே வாக்காய் அவரை வாழ்த்தினார்கள். உலகமெங்கும் இவ் விஷயம் மகத்தான ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் உண்டுபண்ணிற்று.

ஏனெனில், ஒரு ஜாதியார் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு சுயாதீனத்தை அடைய ஒரே ஒரு மார்க்கந்தான் உண்டு. அதாவது, அவர்கள் தங்களிடத்தில் உள்ள மகா புருஷர்களையும் வீராதி வீரர்களையும், சொத்து சுகங்களையும் பலிகொடுத்துக் கொண்டு உதிர வெள்ளத்தில் நீந்தி சுயாதீனமாகிய அக்கரையை அடைய வேண்டும். இதைவிட வேறே மார்க்கமில்லை. இதுதான் பல தேசச் சரித்திரங்களும் படிப்பிற்கும் படிப்பினை. அடிமைத்தனம் ஒரு ஜன்மம் சுயாதீனம் வேறு ஜன்மம்.

இப்படி உலகநீதி இருக்க இந்த துருக்கர் மட்டும் அதர்ம ராஜ்யத்திலிருந்து விடுபட்டு தர்ம ராஜ்யத்தை ஒரு சொட்டு இரத்தம்கூடச் சிந்தாமல் எப்படி அடைய முடியும்! இப்பொழுது துருக்கியினுடைய நிலமை மிகப் பயங்கரமாய் இருக்கிறது. சுற்றிலுமுள்ள ஐரோப்பிய வல்லரசுகளின் பொறாமையால் துருக்கிக்குப் பலவித ஆபத்துக்கள் நேரிட்டுக் கொண்டிருக்கின்றன.

இதுவரை துருக்கி மேற்பார்வையிலிருந்த ஒவ்வொரு மாகாணமும் சுயாதீனம் பாராட்டத் தலைப்படுகிறது.

ஆஸ்ட்ரியா தேசத்துச் சக்கரவர்த்தி போஸ்னியா, ஹெர்ஸகோவினா என்ற இரண்டு மாகாணங்களையும் தன்னுடைய ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டு விட்டார். முன்காலத்தில் ருஷியாவிற்கும் துருக்கிக்கும் நடந்த யுத்த முடிவில் பெர்லின் என்னும் நகரத்தில் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அந்த உடன்படிக்கைப்படி துருக்கி சுல்தானின் ராஜ்யத்திலிருந்து சில மாகாணங்கள் புதிதாய் ஏற்படுத்தப்பட்டன. அவற்றைச் சுல்தானும் ஐரோப்பிய வல்லரசுகளில் சிலரும் மேற்பார்த்து வரவேண்டுமென்று உடன்படிக்கை ஏற்படலாயிற்று. போஸ்னியா, ஹெர்ஸகோவினா என்ற இரண்டு மாகாணங்களையும் ஆஸ்திரியா கவனித்து வரவேண்டுமென்று அந்த உடன்படிக்கையில் இருக்கிறதே அல்லாது ஒரே அடியாய் வாயில் போட்டுக் கொண்டுவிடலாமென்பதில்லை.

அப்படி இருந்தும் ஆஸ்திரியாவானது உடன்படிக்கைக்கு விரோதமாய் அந்த இரண்டு மாகாணங்களையும் முழுங்கி விட்டது. மற்ற ஐரோப்பிய வல்லரசுகளாகிய ஜெர்மனியும், ருஷியாவும், இங்கிலாந்தும் மற்ற அரசுகளும் வாய் பேசாமல் இருக்கின்றன. துருக்கியின் ஆதீனத்தில் கப்பங் கட்டிக் கொண்டிருந்த பல்கேரியா என்ற மாகாணம் சுயாதீனம் கூறிவிட்டது. இளந் துருக்கர் என்ற கக்ஷியார் மிகவும் சாமர்த்தியமாயும் நிதானமாயும் காரியத்தை நடத்தி வருகிறார்கள். தங்களுக்குச் சுயாதீன தாகம் இருந்தது போலவே மற்றவர்களுக்கும் இருக்கும் என்றெண்ணியே அவர்கள் இந்தக் குழப்பத்திற்கூட சித்த சுகத்தோடும், பெருந்தன்மையாயும் ராஜ்ய விவகாரங்களை நடத்தி வருகிறார்கள்.

பிறர் சுயாதீனமடைவதிற் பொறாமை கொள்பவர்கள் கிழக்கத்தியராகிய நாமல்லர். தங்களைத் தவிர மற்றவர்கள் அடிமைகளாய்த்தான் இருக்கவேண்டும் என்பது பல ஐரோப்பிய ஜாதியார்களின் கொள்கையாய் இருக்கிறது. துருக்கிக்குள்ளேயே அதிகாரமிழந்த பழைய கட்சியாரின் ஏவுதலால் அனேகக் குழப்பங்கள் நேரிட்டிருக்கின்றன.

சமீபத்தில் ஏதோ புயல் போன்ற யுத்தங்கள் நேரிடத்தக்க சின்னங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. எல்லாம் அறிய வல்ல கடவுளின் சித்தம் எப்படியோ! **என்னவானாலும், அடிமையில் திருப்தியடைந்திருப்பதைவிடச் சுதந்திரத்தை அடைய போராடி மாய்வது நல்ல தர்மமாகும். அதுவே சர்வேஸ்வரனின் சம்மதமுமாகும்.** *துருக்கிக்கு ஜயம் பெருகுவதாக!*

'பாரஸீகத்தில் ஓர் அதோமுகமான சம்பவம்', 'பாரஸீக விஷயங்கள்' என்ற தலைப்புகளில் 5.12.1908 இந்தியா இதழில் பாரதி எழுதியுள்ளார்.

12.12.1908 இந்தியா இதழில் 'துருக்கியில் வர்ஜனம்' என்ற தலைப்பில் சிறு கட்டுரையினை பாரதி வரைந்துள்ளார்.*

துருக்கி தேசத்தில் ஓர் புதிய நாடகம்

லண்டனிலிருந்து பிரசுமாகும் 'வெஸ்ட் மினிஸ்டர் கெஜட்' என்ற பத்திரிகையிலிருந்து எடுத்து தமிழாக்கி, 'துருக்கி தேசத்தில் ஓர் புதிய நாடகம்' என்ற கட்டுரையை இந்தியா 16-1-1909 இதழில் 2 - 4 பக்கங்களிலும், 23.1.1909 இந்தியா இதழில் இரண்டாம் பக்கத்திலும் பிரசுரித்தார் பாரதி.

ஹிந்து – மகமதியர்கள்

30.1.1909 இந்தியா இதழில் பக்கம் 2 இல் பாரதி இந்துக்கள் - முஸ்லிம்கள் குறித்து எழுதிய கட்டுரை இதோ.,

ஹிந்து – மகமதியர்கள்

கல்கத்தாவில் சில பெரிய மனிதர்களும் ஜனத்தலைவர்களும் சேர்ந்து பெங்காளத்தில் ஹிந்து-மகமதியர்களுக்குள்ளே அடிக்கடி கலகங்கள் நிகழாதவண்ணம் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று யோசிக்கிறார்கள். இது மிகவும் அவசியமான விஷயம். இரண்டு வருஷங்களாகப் பெங்காளத்தில் மகமதியர்கள் ஹிந்துக்களிடம் அதிக

---

* வர்ஜனம் – விலக்கி வைத்தல்.

விரோதம் பாராட்டுவதற்கு என்ன முகாந்தரமென்று நேயர்களுக்குத் தெரியாத விஷயமன்று.இதிலிருந்து பரஸ்பரம் மத விரோதங்களும் கொஞ்சம் ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

சில தினங்களின் முன்பு ‘தித்தகர்’ என்ற இடத்தில் ‘ஈது’ பண்டிகையின்போது, ஹிந்து - மகமதியர்களுக்குள் நடந்த கலகத்தைப் பற்றி, ஏற்கெனவே நமது பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறோம். வருமுன் காப்பதே அறிவு. ஆதலால் மேற்கூறப்பட்ட **மட விரோதங்கள் தமிழ் நாட்டிலேயும் பரவ விடாதபடி தடுத்தல் நம்மவர்களின் முக்கியக் கடமையாகும்.**

பல நூற்றாண்டுகளாக அண்ணன் தம்பிபோல ஒத்து வாழ்ந்தவர்கள், திடீரென்று நிஷ்காரணமாகச் சண்டை”கள் போட்டுக் கொள்வது நமது ஜாதீய வாழ்வுக்கே பெரியதோர் அவமதிப்பாகும்.

இப்போது, நமக்குமுன் நிற்கும் இப் புதிய விபத்திற்கு உபாயம் வின்வருமாறு?

ஹிந்துக்கள் தமது சபைகளிலும், பொதுக் கூட்டங்களிலும், ஆடல் பாடல் கச்சேரிகளிலும், பாடசாலைகளிலும், உத்தியோகச் சாலைகளிலும், மகமதியர்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். மகமதியர்களும் இவ்வாறே ஹிந்துக்களிடம் நேசம் பாராட்டுதல் தகும்.

சமீபத்தில், லார்டு மார்லி சீர்திருத்தக் கதை ஒன்று வெளியிட்டாரல்லவா? அதிலிருந்து ஏற்கெனவே காங்கிரஸ் கட்சியாருக்கும், ‘இந்தியன் முஸ்லிம் லீக்’ என்ற சங்கத்தாருக்கும் பரஸ்பர மாற்சரியங்கள் உண்டாகி விட்டன. முஸ்லிம் சங்கத்தார் இன்னின்ன விஷயங்களில் தமது வகுப்பினரைக் காட்டிலும், இந்துக்களுக்கு அதிக நன்மைகள் கொடுக்கப்பட்டு விட்டன என்று முறையிடுகிறார்கள். அதற்குள் தர்மாவதாரமாகிய அலஹபாத்துப் ‘பயோனீர்’ பத்திரிகை ஐயோ, பாவம்! லார்டு மார்லி ஹிந்துக்களுடன் சேர்ந்து கொண்டு மகமதியர்களுக்கு விரோதம் செய்கிறார்.

மகமதியர்களுக்கு இப்படி கவர்ன்மெண்டார் வஞ்சகம் செய்வது நியாயமே இல்லை என்று சொல்லி ஓநாய்க் கண்ணீர் வடிக்கின்றது.

லண்டனிலே ஸ்ரீமான் அமீர் ஆலி முதலிய சில மகமதிய கனவான்கள் சீர்திருத்தங்களின் சம்பந்தமாக லார்டு மார்லியைச் சந்தித்து விண்ணப்பம் செய்ததாகத் தெரிகிறது. **இந்த மாதிரியான விஷயங்களில் பெரும் பகுதியாரான ஹிந்துக்கள் சிறுபகுதியாரான மகமதியர்களின் இஷ்டப்படியே நடந்து கொள்ளுதல் நேச வளர்ச்சிக்கு மிகவும் நியாயமாகும்.** *இதில் இகழ்ச்சி நேரிடமாயின், அதிலிருந்து பெருங் கெடுதிகள் விளைவதற் இடமுண்டு என்ற போதிலும் ஒருபோதும் வரப்போகாதனவும், வரினும் பயனற்றனவுமாகிய மார்லியின் சீர்திருத்தங்களுக்கு இந்த ஜனங்கள் ஒருவரை ஒருவர் முட்டிக் கொள்வது வியப்பைத் தருகிறது. 'பிறவாத பிள்ளையை ஸ்வீகாரம் கேட்டுப் பிரமாதச் சண்டை வளர்த்தல்' என்ற வேதநாயகம் பிள்ளை கதை நினைப்பிற்கு வருகின்றது.**

'பாரஸீகத்துச் சக்கரவர்த்தியின் விகடம்' எனும் கட்டுரையை 30-1-1909 இந்தியா இதழில் பக்கம் 3 இல் எழுதியுள்ளார்.

27.2.1909 இந்தியா இதழில் 'பாரஸீகத்தின் நிலைமை' என்ற கட்டுரை தந்துள்ளார் பாரதி.

ஹிந்து – மகமதியர்கள்

20.03.1909 இந்தியா இதழில் பாரதி ஹிந்து - மகமதியர்கள் என்ற கட்டுரை தந்துள்ளார்.

ஹிந்துக்களும் மகமதியர்களும் ஆயிரம் வருஷங்களாகத் தலைமுறை தலைமுறையாய் இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். ஒரே நிலத்தில் பிறந்தவர்கள், ஒரே நீர் அருந்துபவர்கள், வியாபாரம், வர்த்தகம், தொழில், நடை

---

* சீனிவிசுவநாதன், கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், தொகுதி – 4, சென்னை, 2003, பக். 154 – 155.

இவற்றால் பிணைக்கப்பட்டவர்கள். ஒரே பாஷை பேசுபவர்கள். ஹிந்துஸ்தானி பாஷையை வடநாட்டில் கோடிக்கணக்கான ஹிந்துக்கள் பேசுகிறார்கள். அது ஹிந்துக்களுடைய பாஷையே. பெரும்பான்மையான மகமதியர்களின் உடலத்துள்ளே ஹிந்து ரத்தந்தான் ஓடுகின்றது.

ஹிந்துக்களுடைய உற்சவங்களில் மகமதியர்களும், மகமதியருடைய பண்டிகைகளில் ஹிந்துக்களும் சேர்ந்து கொண்டாடுகின்றார்கள். இந்த இரண்டு மதத்தையும் சேர்த்து சமரசப்படுத்திய கபீர்தாஸ் முதலிய பெரியோர்களை இரு திறத்தாரும் குருவாக வணங்குகிறார்கள்.

தென்னாட்டில் குணங்குடி மஸ்தான்சாமி என்ற மகமதிய பரதேசியை ஹிந்துக்கள் எல்லாம் தாயுமானவருக்கு சமானமாக மதித்து வணங்குகிறார்கள். நாகூரில் ஹிந்து யாத்திரிகள் எத்தனை ஆயிரம் பேர் வருஷந்தோறும் சென்று தொழுது வருகிறார்கள் என்பதைத் தென்னாட்டில் அறியாதவரில்லை.

அடடா! இதைக்கூட விஸ்தாரமாகக் காரணங்கள் கூறி எழுதும்படியான காலம் நமக்கு வந்துவிட்டதே!

நாம் பிரிவுப்பட்டவர்கள் என்று சிலர் சொல்லும் பேச்சைக் கேட்டுக் கொண்டு நம்மிலேயே சில மூடர்கள் திரும்பிச் சொல்லுகிறார்களே என்ற வருத்தத்தினால்தான் இதை எழுத நேரிட்டது. இல்லாவிட்டால் இத்தனை ஸகஜமான் விஷயத்தை பற்றி நாம் பேசவே இடமிருந்திராது.

*உள்ளங்கை நெல்லிக்கனியைப் பார்ப்பதற்கு யாரேனும் தூரதிருஷ்டிக் கண்ணாடி கொண்டு காட்டுவார்களா?**

மகமதியர்களுக்குப் புது சினேகிதர்கள்

'மகமதியர்களுக்குப் புது சினேகிதர்கள்' என்ற கட்டுரையை 24.04.1909 இல் 'இந்தியா' இதழில் பக்கம் 3-இல் .பாரதி எழுதியுள்ளார். அதே இதழில் அதே பக்கத்தில் 'துருக்கியின் நிலைமை' குறித்தும் பாரதி குறிப்பிட்டுள்ளார்.

---

* முற்கூறிய நூல், பக். 385 – 386.

பாரஸீகத்திற்கு விமோசனம்

29-5-1909 இந்தியா இதழில் பக்கம் 3 இல் 'பாரஸீகத்திற்கு விமோசனம்' என்ற கட்டுரை தந்துள்ளார் பாரதி. அதில்,

'துருக்கியின் எழுச்சி முகமதிய உலக முழுமைக்கும் ஓர் புதிய உயிர் கொடுத்திருக்கின்றது. பாரஸீகத்திற்கு விமோசனம் ஏற்பட்டுவிட்டது. மற்ற கீழ்த்திசை நாடுகளிலுள்ள முகமதியர்களுக்கு இனிச் சிறிது சிறிதாக ராஜ்ய உணர்ச்சி உண்டாகும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

பால முஸ்லிம் (Young Muslim)

8-5-1909 இந்தியா இதழில் வீரவிளக்கு வ.வே.சு. ஐயர் இலண்டனில் பிரசுரமாகும் 'பாலமுஸ்லிம்' பத்திரிகை குறித்துப் பாராட்டி எழுதியபோது,

"அறிவிலும் அபிமானத்திலும் சிறந்த முஸ்லிம் ஒருவர் மேற்கூறிய பத்திரிகைக்கு ஆசிரியர்,

முக்கியமாய் மகமதியர்கள் ராஜரீக விஷயங்களில் நடந்து கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் ஒழுங்குகளைப் பற்றியும், இந்து - முஸ்லிம் என்னும் இரு கட்சிகளும் பொது விஷயங்களிற் ஜாதி பேதங்களின்றி நடந்து கொள்ளும் விஷயங்களைப் பற்றியும் இன்னு மற்றுமுள்ள இவ்விடத்திய இந்தியாவைப் பற்றி நடக்கும் சங்கத்திகள் யாவும் பிரசுரிக்கப்படும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

26.6.1909 இந்தியா இதழில் பக்கம் 3 இல் பாரதி அது குறித்து எழுதியிருப்பதாவது,

இப்பொழுது லண்டன் நகரத்தில் 'பால முஸ்லிம்' (யங் முஸ்லிம்) என்று ஒரு மாதாந்தப் பத்திரிகையை ஆரம்பித்திருக்கிறார். ஹிந்துக்களும், முஸ்லிம்களும், ஐக்கியமாய் வாழ வேண்டுமென்பதுதான் இப் பத்திரிகையின் கருத்து.

பிரிடிஷ் கவர்ன்மெண்டார் பிரித்து ஆளும் தந்திரத்தை யாசரித்து வரும் இக்காலத்தில் பால முஸ்லிமைப் போன்ற

பத்திரிகைகள் இந்தியாவில் அத்தியாவசியமாய் வேண்டிதாயிருக்கின்றன.

மேற்படி பத்திரிகையின் ஆசிரியராகிய ஜனாப் ஸயித் ஹைதர் ராஜா என்பவர், முன்பு டில்லி பட்டணத்தில் 'அப்தாப்' என்றொரு பத்திரிகையைப் பிரசுரித்து வந்தார். இந்திய ஜாதியத்வம் அபிவிருத்தியாகி, ஜனங்கள் தாய்நாட்டின் பொருட்டுத் தொழில் புரியுமாறு மேற்படி தேச பக்தர் பஞ்சாபிலும், ஐக்கிய மாகாணங்களிலும் அநேக காரியங்களைச் செய்திருக்கிறார்.

இப்பொழுது இத் தேசபக்தர் லண்டன் நகரத்தில் பிரசுரித்து வரும் 'பால முஸ்லிம்' பத்திரிகையில் இந்தியாவைப் பற்றிய விஷயங்கள் அடங்கியிருப்பதுமன்றி வெகு உபயோகமான துர்க்கி முதலிய அரசாங்கங்களைப் பற்றிய வர்த்தமானங்களுமிருக்கின்றன. இப் பத்திரிகையை ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்க வேண்டியது. இதன் வருஷச் சந்தா ரூ. 1-8-0 பத்திரிகை வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்,
நெ.34, அடால்பர் ரோட்,
பின்ஸ்டர் பார்க்கு, லண்டன்.

துர்க்கிதேசத்தின் அபிவிருத்தி

3-7-1909 இந்தியா இதழில் பக்கம் 5 இல் 'துர்க்கி தேசத்தின் அபிவிருத்தி' என்ற கட்டுரையை பாரதி எழுதியுள்ளார்.

ஹிந்து – முஸ்லிம்களின் ஐக்கியம்

10-7-1909 இந்தியா இதழில் பக்கம் 2-இல் ஹிந்து-முஸ்லிம்களின் ஐக்கியம் குறித்து பாரதி எழுதியுள்ளார்; அவை இதோ,

"முஸ்லிம்களும், ஹிந்துக்களும் ஒற்றுமையாய் வாழும் பொருட்டு கல்கத்தாவில் செய்துவரும் சில ஏற்பாடுகளைக் கேட்க மிகவும் ஸந்தோஷ முண்டாகின்றது.

வங்காளத்தில் ஸ்வதேச பாஷையில் அச்சிட்டிருக்கும் சில புத்தகங்கள் சிறிது முஸ்லிம்களுக்கு விரோதமாயிருக்கின்றன. தவிர, அங்கு ஆடிவரும் சில நாடகங்களும் முஸ்லிம்களின் கோபத்தை யுண்டாக்கத்தக்கவையா இருக்கின்றன. மேலும் 'பக்ரீத், தஸரா' முதலிய பண்டிகைகளில் ஹிந்து முஸ்லிம்களுக்குள் எங்கிருந்தோ சண்டையுண்டாய் விடுகிறது. இச் சண்டை சச்சரவுகள் நீங்கி இரு மதஸ்தர்களும் ஒற்றுமையாய் வாழும் பொருட்டு, முஸ்லிம்கள் ஒரு சபை கூடி, ஹிந்துக்களோடு ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறார்கள்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை நடந்தேறிய ஸங்கத்தில் கீழ்வருமாறு தீர்மானஞ் செய்தார்கள், அவை,

1. நாம் ஐக்கியமாய் வாழும் பொருட்டு ஹிந்து ஜனத்தலைவர்களோடு ஒன்றுசேர்ந்து தொழில் புரிந்து வரவேண்டியது.

2. நாடகங்களிலும், இதர புஸ்தகங்களிலும் நமக்கு விரோதமாயுள்ள விஷயங்களை எல்லாம் அவர்களுக்கு (ஹிந்துக்களுக்கு)த் தெரியப்படுத்தி ஓர் ஸமாதானம் செய்து கொள்ள வேண்டும்.

இத் தீர்மானங்கள் மிகவும் வியக்கத்தக்கவைகளா யிருக்கின்றன.

*இந்தியா முழுவதும் இவ்வித ஏற்பாடுகளைச் செய்து வந்தால் மிகவும் நலமாக இருக்கும். வேற்றுமை நீங்கி ஒற்றுமை பொங்குக.**

10.07.1909 இந்தியா இதழில் 'ஆப்கானிஸ்தானத்தில் சதியாலோசனை' என்ற கட்டுரையைத் தந்துள்ளார் பாரதி.

---

* சீனி.விசுவநாதன், கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புக்கள், தொகுதி – 5, சென்னை, 2004, பக். 78 –79.

பாரஸீகத்தில் ராஜ்யக் குழப்பம் தேசபக்தர்கள் வெற்றி

7.08.1909 இந்தியா இதழில் பக்கம் 3 இல் 'பாரஸீகத்தில் ராஜ்யக் குழப்பம் தேசபக்தர்கள் வெற்றி' என்ற நீண்ட கட்டுரையை பாரதி எழுதியுள்ளார்.

மஹம்மதியர்களுக்கோர் மதி

7.8.1909 இந்தியா இதழில் பக்கம் 4-இல் பாரதி எழுதியுள்ளது இதோ,

உலகத்தில் இப்போது மஹம்மதியர் நாடெங்கும் ஸ்வதந்திர ஸித்திக்குப் பாடுபட்டு வருகையில் இந்திய மஹம்மதியர்களுக்கு மாத்திரம் இச்சகம் பாடுவதிலும், கொத்தடிமைத்தனம் செய்வதிலும் ஏன் புத்தி செல்கிறதோ தெரியவில்லை.

வீணான இந்த - மஹம்மதிய விசாரம் என்ற பல வீண்பிளவுகளை இந்தியர்களுக்குள் உண்டாக்கி வருவது இந்திய மஹம்மதியர்கள் முன்யோசனை யில்லாமையே.

ஐக்கியமே பலம் என்பதை அவர்கள் கையாடி வருமாறு ஸ்ரீ பாரததேவி அருள் புரிவாளாக! **அல்லாஹோ அக்பர்!** வந்தே மாதரம்!

பாரஸீகத்தில் ஸ்வராஜ்யம்

14-8-1909 இந்தியா இதழில் பக்கம் 3,4 களில் பாரதி பாரஸிகத்தில் ஸ்வராஜ்யம் ஜயமடைந்த தேசபக்தர்களால் நியமிக்கப்பட்ட முதல் ஷா-இன்-ஷா பற்றி விரிவாகவே எழுதியுள்ளார். இதில் ஓரிடத்தில் பாரதி,

"இப்போது உலகெங்கும் கொடுங்கோலரசை அடக்கி ஸ்வதந்திரமடைய விசேஷமாய் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இந்த ஸ்வதந்திர உணர்ச்சியின் பலமான அலைகளில் ஒன்று ஐரோப்பாவிலுள்ள துருக்கி தேசத்திய கொடுங்கோலரசின் மேல் மோதியடித்தது. அலை தணிந்த பிறகு பார்த்தால் பழைய ஸுல்தானை ஸிம்மாஸனத்தில் காணோம்.

தங்கள் இஷ்டப்படி நடந்து நாட்டிற்கு நன்மை பயக்கக்கூடிய ஒருவரை ஸுல்தானாகத் தேச பக்தர்கள் ஏற்படுத்தினார்கள். நாட்டில் ஸ்வதந்திரத்தை நாட்டினார்கள்.

இதன் பிறகு ஸ்தம்பூலில் உண்டான அந்த அலை மெள்ள மெள்ள வந்து பாரசீகத்தின் மேல் வீசியது. இது பாரஸீகக் கொடுங்கோலரசை அடித்துக்கொண்டு போய்விட்டது. தேச ஜனங்கள் தங்கள் வார்த்தையைக் கேட்டுத் தங்களிஷ்டப்படி நடக்கக்கூடிய ஒரு சிறுவரை ஷா இன் ஷாவாக ஏற்படுத்தினார்கள். இவர்தான் மாட்சிமை தங்கிய ஸுல்தான் அஹ்மத்ஷா மிர்ஜா என்னும் பாரஸீகத்தின் புதிய சக்ரவர்த்தி' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதே கட்டுரையில்,

*இந்த ஸ்வதந்திர அலையானது பாரஸீகத்தின் மேற்கிலுள்ள எகிப்திலும், கிழக்கிலுள்ள ஆப்கானிஸ்தானத்திலும் பரவ ஆரம்பிக்கிறது. இந்த இரண்டும் மஹம்மதிய ராஜ்யங்களே. இந்த ஸத்விஷயமானது தற்காலத்தில் ஸ்வதந்திர தேவியை ஸ்வராஜ்ய ஸிம்மாசனத்தில் எழுந்தருளப் பண்ணப் பெரு முயற்சியுடன் தேசத் தொண்டு பூண்டு உழைத்து வரும் நமது பாரத தேசபக்த இயக்கத்திற்கு விசை கொடுத்து நடத்த ஒரு உயர்ந்த ஹேதுவாகும். ஆனால், இஸ்லாம் அபிவிருத்தியானது இந்தியா அபிவிருத்திக்கு இடைஞ்சலாய் இராதென்று நம்புகிறோம். என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

விஜயா

பாரதி ஆசிரியராக விளங்கிய ஒரே நாளேடு விஜயா. 1909 - 1910-களில் பாண்டிச்சேரியிலிருந்து வெளியான இந்த நாளேட்டில் 1909-களில் பாரதி எழுதிய கட்டுரை 'மொகலாய ராஜ்யத்தின் அழிவு' அது 'இந்தியா' இதழில் 09.10.1909 பக்கம் 4, 5-இல் மறு பிரசுரமாயிற்று; அக்கட்டுரையின் சில பகுதிகள் இதோ . . .

---

* முற்கூறிய நூல், பக். 238, 243.

மொகலாய ராஜ்யத்தின் அழிவு

ஆங்கிலேயர்களுக்கு முன்பு பாரத தேசத்தை ஏக சக்ராதிபத்யமாக மொகலாயர் ஆண்டு வந்தனர். தில்லி நகரமே அவர்களுடைய ராஜதானி. **உலகெங்கும் கீர்த்தியிலும் பெருமையிலும் அக்காலத்தில் மொகலாய ராஜ்யத்துக்கு நிகராக வேறொன்றுமேயில்லை.** 'தில்லீசுவரோ ஜகதீசுவரோவா' (தில்லி சக்ரேசனோ, உலகத்திற்கரசனோ) என்று அக்காலத்தில் வசனம் சொல்லுவார்கள். ஒரு சிறிய மலைக்கோட்டைக்கு அரசனாயிருந்து தனது சொந்த வலிமையாலும் திறனாலும் ஹிந்துஸ்தானத்தை வென்று தன்னுள்ளே அடக்கியாண்ட பாபர் சக்கரவர்த்தி - உலகமுள்ள வரை தனது கீர்த்தியழியக் கூடாதவனும், பிரமஞானியும், மஹாதீரனும், மஹாசாந்தனும், ஹிந்து மகமதிய வகுப்பினரை ஒரு ஜாதீய ஐக்கியத்துக்குட்படுத்துவதாகிய மஹாப் பிரயத்னம் தொடங்கியவனுமாகிய அக்பர் சக்கரவர்த்தி 'பளிங்கினால் செய்யப்பட்டதோர் இன்பக் கனவு' என்றும், அழகின் கடலென்றும், கல்லிலே புனைந்த கவிதை என்றும் உலகனைத்தும் கண்டு வியப்போடு புகழும் 'தாஜ்மஹால்' கட்டித் தனது காதலை நித்யமான ஒளியுடையதாகச் செய்த ஷாஜஹான் - இவர்களெல்லோரும் மொகலாய சக்ரவர்த்திகள். இவ்வளவு பெருமை கொண்ட சந்ததி, இவ்வளவு கீர்த்தி கொண்ட ராஜ்யம் - அக்பர் சக்ரவர்த்தியென்றால் இன்று வரை ஞானமுள்ள ஒவ்வொரு ஹிந்துவும் விக்ரமார்க்கன் பெயரைக் கேட்டது போலப் புளகமடைவான்.

கால கதியில் எல்லா விஷயங்களுக்கும் அழிவுண்டு. மொகலாய ராஜ்யம் அழிவடையத் தொடங்கிற்று. அதன் உள்ளுயிரை அரித்து, வெளியுடலை மட்டும் சில தினங்கள் நிறுத்தி வைக்க வேண்டுமென்ற எண்ணம் கால சக்திக்குண்டாயிற்று. அவுரங்கசீப் பெரிய பண்டிதன்; கூர்மையான அறிவுடையவன்; சோம்பரென்பதே அறியாதவன்; எப்போதும் ஊக்கம், எப்போதும் செய்கை. 'அரசர்களும், தண்ணீரும் ஒரேயிடத்தில் தங்கியிருக்கலாகாது.

அப்படியிருந்தால் தண்ணீர் அழுகிப் போய்விடும்; அரசன் கையிலிருந்த அதிகாரம் நழுவிவிடும்' என்று அவுரங்கசீப் தனது மக்களிடம் அடிக்கடி சொல்வதுண்டு. இதை அவன் தனது ஜீவ தர்மங்களிலொன்றாகக் கொண்டிருந்தான். இப்படி எத்தனையோ விதமான நற்குணங்களிலிருந்தும் பயனில்லை. பாரத ராஜ்யம் மொகலாயர் கையினின்றும் நழுவ வேண்டுமென்று கால சக்தி நிர்ணயம் செய்துவிட்டது. அவுரங்கசீப் தனது அரிய திறமைகளையும், சிறந்த குணங்களையும் துணையாக வைத்துக் கொண்டு எப்படியேனும் பாரத நாட்டை மொகலாய அதிகாரத்தின் கீழ் சாசுவதமாக ஒருமைப்படுத்தி வைக்க வேண்டுமென்று முயற்சி செய்தான். 1658-ம் வருஷம் முதல் 1707-ம் வருஷம் வரை அவன் ஆட்சி புரிந்த ஐம்பரு வருஷ காலத்திலும் ஒவ்வொரு கணமும் 'மொகலாய ராஜ்யம் ஒருமைப்பட வேண்டும்; பலப்பட வேண்டும்; சாசுவதப்பட வேண்டும்' என்ற கருத்துடன் பாடுபட்டான் . . .

ஓர் பெரிய ராஜ்யம் அழிவதென்றால் அது ஸாமான்யமான சம்பவமன்று. கடைசிப் பொழுதிலேதான் காலசக்தி ஓர் மனுஷ்யாவதாரமாகத் தோன்றி அதை முடித்து வேறு சகம் தொடங்கச் செய்துவிட்டுப் போகிறதாயினும், அதற்கு முன்னிட்டே நெடுங்காலமாகக் கால சக்தி பதினாயிர வழிகளிலே மறைவாக அதனை அரித்துக் கொண்டு வருகின்றது. ஒரு ராஜ்யத்தின் மரணத்தை நினைக்கும்போது மிகப் பரிதாபமுண்டாகிறது. நேற்று வரை கல்லைப் போலிருந்த அதன் சரீரத்திலே மறைவாகப் பதினாயிரம் புண்களுண்டாகின்றன. அந்தப் பதினாயிரம் புண்களின் வழியாகவும் யமன் உள்ளே நுழைகிறான். ஒவ்வொரு புண் இலேசாக வெளிக்குத் தென்படும். பார்ப்பவர்கள் 'ஆ! இவ்வளவு வலிமையுடைய சரீரத்தை இச்சிறிய புண் என்ன செய்துவிடும்?' என்று யோசிப்பார்கள். முடிவில் திடீரென்று அந்தப் பெரியவுடல் மலை சரிவது போலச் சரிந்து விழும்போது உலகத்தாரெல்லாம் கண்டு வியப்படைவார்கள்.

*மொகலாய ராஜ்யத்தின் சரீரத்திலே தோன்றிய கணக்கற்ற புண்களை இங்கே விஸ்தரித்து முடியாது. ஒன்றா? இரண்டா? . . . . . முதலாவது அதர்மம். இரண்டாவது சமுசயம். மூன்றாவது வினாசம். இப்படி மொகலாய அரசு வீழ்ந்தது.**

ஆப்கானிஸ்தானத்தில் இராணுவப் பயிற்சி

09.10.1909 இந்தியா இதழில் பாரதி ஆப்கானிஸ்தானத்தில் இராணுவப் பயிற்சி என்ற கட்டுரை எழுதியுள்ளார். இதோ அக்கட்டுரை . . .

துருக்கி எழுச்சி பெற்றதினின்றும், மற்ற கீழ்த்திசை நாடுகளுக்கெல்லாம் ஓர் புதிய உற்சாகம் பிறந்திருக்கிறது. அதிலும் முக்கியமாக முகம்மதிய நாடுகள் அரிய ஊக்கத்துடன் க்ஷேம வழிகளை நாட்டி வருகின்றன. இஹ லோகத்துப் பெருமை முதலாவது சரீர சக்தியையும் ராணுவ பலத்தையும் பொறுத்ததாகையால் இந்த நவீன உற்சாகம் ஆப்கானிஸ்தானம் முதலிய இடங்களிலே இராணுவப் பயிற்சியிலே திரும்பியிருக்கிறது.

சில மாதங்களாகவே ஆப்கானிஸ்தானத்தில் ராணுவங்களைப் புதுப்பிப்பதிலும், விருத்திப்படுத்துவதிலும், நல்ல பயிற்சி தருவதிலும், நவீன ஆயுதங்கள் தருவித்துக் கொடுப்பதிலும் மிகுந்த சிரத்தையுடன் வேலை நடந்து வருகின்றது.

சில தினங்களுக்கு முன் காபூலுக்கருகே ஓரிடத்தில் அமீர் தமது சேனைகளைச் சேகரித்து வைத்து யுத்த நடைகள் செய்து காட்டச் சொல்லிப் பார்த்தார். ஸர்தார் இனாயதுல்லாகானுடைய ஸேனாபத்யத்தின் கீழ் மேற்படி யுத்த நடைகள் மிக நன்றாக நடத்திக் காட்டப்பட்டன. துருக்கிய ராணுவ வழிகளைத் தமது சைநியத்தார் நன்கு கற்றுக் கொண்டிருப்பது கண்டு அமீர் மிகத் திருப்தியடைந்தார்.

---

* **ஆ.இரா.வேங்கடாசலபதி, பாரதி, விஜயா கட்டுரைகள், நாகர்கோவில், 2004, பக். 56, 57, 59.**

பீரங்கித் துப்பாக்கிகள் செய்யும் தொழிற்சாலைகள் பல ஆப்கானிஸ்தானத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றின் மேற்பார்வைக்குத் துருக்கியிலிருந்து உத்தியோகஸ்தர்கள் தருவிக்கப்பட்டிருக்கின்றனர்.

அந்த உத்தியோகஸ்தர்கள் தமது கடமையை நன்கு செலுத்தி வந்திருப்பது பற்றி மகிழ்ச்சி கொண்டு அமீர் அவர்களுக்குப் பொற் பதக்கங்கள் சன்மானம் செய்திருக்கிறார்.

ஆப்கானிஸ்தானம் முற்காலத்தில் பாரத தேசத்தின் ஓர் பகுதியாக இருந்தது. அதற்குக் காந்தார நாடு என்று பெயர். அங்கே நெடுங்காலம் ஹிந்து ராஜாக்களே அரசாண்டு வந்தனர். அக்காலத்தில் அந்நாட்டில் ஆண்மக்கள் மட்டுமேயன்றி பெண்கள்கூட மிகுந்த வீரத்தன்மை கொண்டவர்களாயிருந்தனரென்று நமது சரித்திரங்களிலே படிக்கிறோம்.

காபூலின் அபிவிருத்தி

25.12.1909 இந்தியா இதழில் 'காபூலின் அபிவிருத்தி' என்ற கட்டுரையை எழுதியுள்ள பாரதி அதில் தெரிவித்துள்ள சில செய்திகள் இதோ . . .

காபூலின் அபிவிருத்தி

அமீர் ஹபிபுல்லா இரண்டு வருஷங்களின் முன்பு இந்தியாவுக்கு வந்திருந்தபோது 'ஹிந்துக்களும் மகமதியர்களும் ஒற்றுமையுடன் வாழுங்கள். உங்களில் ஒருவருக்கு வரும் நன்மை - தீமைகள் மற்றொருவருக்கும் உண்டென்பதை அறிந்து கொள்ளுங்கள்' என்று உபதேசம் செய்ததை வடநாட்டு மகமதியர்களிலே சிலர் மறந்து விட்டார்கள். ஹிந்துக்களையும் மகமதியர்களையும் பிரித்து மகமதியர்களிடம் விசேஷ அன்பு பாராட்டுவதாக அதிகாரிகள் செய்யும் ஜாலத்தில் அவர்கள் மயங்கி விழுந்து விட்டார்கள்.

'ஒற்றுமையே ஓர் தேசத்துக்குப் பலம். பரஸ்பர அன்பே ஒரு ஜாதியின் மார்பில் எவ்வித அம்பும் பாயாதபடி காக்கும்

கவசம்' என்ற உண்மையை ஹபிபுல்லா வாயினால் மட்டும் சொல்கிறவரல்லர். தமது ராஜ்யத்தில் அனுபவத்திற்குக் கொண்டுவந்த ஸமர்த்தர். ஆதலால் அவர் சொல்லை நாம் ஏதோ சாதாரணமாகக் கருதி விட்டுவிடுதல் தகாது . . .

ஜனங்களைக் கொடூரச் செய்கைகளால் பயமுறுத்தி அடக்கி ஆட்சி புரிந்து வரலாமென்ற நம்பிக்கை இப்போதுள்ள அமீர் ஹபிபுல்லாவுக்கில்லை. ஜனங்களுக்கு ஹிதமான காரியங்கள் செய்து, அவர்கள் அன்பை வசப்படுத்துவதே ஆட்சி நீடித்திருப்பதற்குரிய உபாயமென்பதை ஹபிபுல்லா நன்கு தெரிந்திருக்கிறார். ஸகல அம்சங்களிலும் ஆப்கானிஸ்தானத்து ஜனங்களுக்குள் செல்வமும் தர்மமும் அபிவிருத்தியடையும் பொருட்டாக அமீர் இரவு பகலாக உழைத்து வருகின்றார் . . .

சாலைகள் ஏற்படுத்தியும், பாலங்கள் கட்டியும் ஜனங்களுக்கு வியாபார விஷயத்திலும் யாத்திரை விஷயத்திலும் எண்ணிறந்த சவுகரியங்களுண்டாகும்படி செய்கிறார். கைத்தொழிலபிவிருத்தி விஷயத்தில் மிகுந்த கவலை செலுத்தி வருகிறார். தக்க கல்வியும், நிபுணத் தன்மையும் பெற்ற வைத்தியர்களை இடத்துக்கிடம் அமைத்து ஜனங்களின் தேக சுகத்தைக் கவனித்து வரும்படி செய்கிறார்.

மேலும் இச்செய்கைகளால் மாத்திரமே தேசத்தின் க்ஷேமம் உறுதியாக விடமாட்டாதென்பதையும், படைவன்மையில்லாவிட்டால் அரசன் எவ்வித நலங்கள் செய்யினும் அவை அன்னியர்கள் புகுந்து எளிதில் அழித்துவிடத் தக்கவையாகுமென்பதையும் நன்குணர்ந்து அமீர் தமது ஸைநியத்தை முதல் தரமான நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறார். துருக்கியிலிருந்து மிகத் திறமையுடைய ஸர்தார்களைத் தருவித்துத் தமது படைக்கு நவீன முறைகள் பழக்கியிருக்கிறார்.

ஸைநியம் மாத்திரம் செம்மையாக இருப்பினும் போதாது. தேச ஜனங்களுக்கே பொதுவாக க்ஷத்திரிய இயற்கையும் ஆயுதப் பயிற்சியும் இருக்க வேண்டும். ஆதலால் தமது

தேசத்திலுள்ள எல்லா வகுப்பினரும் துப்பாக்கி சுடுவதில் தேர்ச்சியடைவதற்குரிய சூழ்ச்சிகளையெல்லாம் செய்திருக்கிறார். ஸஹாய விலையில் துப்பாக்கி முதலிய ஆயுதங்கள் ஸகல ஜனங்களுக்கும் கிடைப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. படைத்தொழில் மறந்த குடி மடைத் தொழிலுக்குத்தான் உதவும்.

சுருங்கச் சொல்லுமிடத்து, தமது தேச அபிவிருத்திக்கு வேண்டிய ஒவ்வொரு அமிசங்களிலும் தாமே நேராக சிரத்தை எடுத்துக் கொண்டு பாடுபடுகிறார். இந்தியாவிலுள்ளவர் களுக்கு இதுவெல்லாம் ஆச்சரியமாகத் தோன்றும் அது நிற்க.

ஆப்கானிஸ்தானம் இந்த மாதிரியே செம்மைப்பட்டுக் கொண்டு செல்லுமானால் இன்னும் 10 வருஷங்களில் ஆசியா கண்டத்துத் தலைமை வல்லரசுகளில் அதுவொன்றாய் விடும்.*

மஹமதியர்களுக்கோர் மதி

25.12.1909 இந்தியா இதழில் ‘மஹமதியர்களுக்கோர் மதி’ எனும் தலைப்பில் பாரதி எழுதியுள்ளார்.

முஸ்லிம்களின் சபை

01.02.1910 ‘விஜயா’ பத்திரிகையில் ‘முஸ்லிம்களின் சபை’ எனும் தலைப்பில் பாரதி எழுதியுள்ள கட்டுரையின் சில பகுதிகள் இதோ . . .

ஹிந்துக்களும் முஹம்மதியர்களும் இந்தியாவின் இரு கண்கள்

காங்கிரெஸில் ஜனாப்களான காலம் சென்ற ஸயானி, பதர்உமன், தயாப்ஜீ முதலானவர்களும், இப்போது இருக்கும் பாரிஸ்டர்களான அப்துல் ரஸுல் மஹமத் கித்வாய், ஸையத் யூஸப், லியாகத் ஹுஸேன் ரிஷி, நவாப் காஜா அட்டிகுல்லா, ஸைபத் அலி இமான், ஜின்னா முதலான பல முஹம்மதிய

---

* சீனி.விசுவநாதன், கால வரிசைப்படுத்தப்பட்ட படைப்புக்கள், 6–ம் தொகுதி, சென்னை, 2005, பக். 261, 263, 264.

மேதாவிகளும், ஸ்ரீ நவுரோஜி முதலானவர்களும் ஹிந்துக்களும் முஹம்மதியர்களும் ஒத்துழைப்பது தான் இந்தியாவிற்கு நன்மை உண்டாகும். இவ்விருவரும் இந்தியாவின் கண்கள். ஒரு கண்ணை நொள்ளையாக்க முயன்றால் மற்றதும் நொள்ளையாகிவிடும். ஐக்கியமே பலம். பிரிவே பலவீனம் என்று அடிக்கடி வற்புறுத்திச் சொல்லி வந்தனர். அப்போதெல்லாம் இந்த மஹம்மதீயத் தலைவர்கள் யாது காரணத்தினாலோ இந்த உண்மையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனபோதிலும் இப்பொழுதாவது இதன் உண்மையைத் தாங்கள் ஒப்புக்கொண்டு, தங்கள் அபிப்பிராயங்களைப் பின்பற்றி நடப்பவர்களெல்லாம் நன்கு அறிந்து கொள்ளுமாறு, அந்த ஹிந்து மஹம்மதிய ஐக்கியத்தின் ஆவசியகத்தை வெளிப்படையாய்த் தெரிவித்ததற்காக நாம் மனமார வந்தனம் செலுத்துகிறோம்.

இந்தியாவிலுள்ள மஹம்மதியர்கள் யார்? இவர்களெல்லாம் ஹிந்துக்களாய் இருந்து, பிறகு முஹம்மதிய துரைத்தன நாளில் இஸ்லாம் மதத்தைத் தழுவினவர்களே. அப்படியிருந்தும், மதம் வேறுபட்டபோதிலும், நடை, உடை, பேச்சு, பழக்க வழக்கங்கள், இவைகள் இன்னும் மாறவேயில்லை. மஹம்மதியச் சக்கரவர்த்திகள் அரசாண்ட டில்லி மாநகரில் இம்மூன்று முஹம்மதியத் தலைவர்கள் ஹிந்து முஸ்லீம்களின் ஐக்கியத்தைப் பற்றி வற்புறுத்திப் பேசியது யாவரும் கொண்டாட்டத் தக்கினதே. அதன்படி மஹம்மதியர்கள் நடந்து கொள்வார்களாக.*

துருக்கி சிம்மாஸனத்தின் வல்லமை

11.02.1910 ‘விஜயா’ பத்திரிகையில் பக்கம் 2-இல், ‘துருக்கி சிம்மாசனத்தில் வல்லமை’ என்ற கட்டுரையை பாரதியார் எழுதியுள்ளார்.

ஒரு மகமதிய ஸாது

18.02.1910 விஜயா இதழில் ஒரு முகமதிய ஸாது - என்ற கட்டுரையை எழுதியுள்ளார்; இதோ அக்கட்டுரை . . .

---

* பா.இறையரசன், பாரதியாரின் விஜயா சூரியோதயம் இதழ்கள் (1909 – 1910), சென்னை 2009, பக். 26 – 27.

கம்பளி ஸ்வாமி என்று இமயமலைப் பக்கங்களில் ஒரு ஸ்வாமி இருப்பதை நம் நேயர்களில் அநேகர் கேட்டிருக்கலாம். அவர் சில காலமாகத் தென் இந்தியாவிற்கு வந்து அநேக இடங்களில் உபன்னியாசம் செய்து கொண்டிருக்கிறார்.

இப்போது பெங்களூரில் உபன்னியாசம் செய்தார். அதில் ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் ஒத்துமை இருக்க வேண்டுமென்றும், இருவர்களின் மதமும் ஒன்றையே குறிக்கிறதென்றும், நம் மதக் கொள்கையைச் சரியாக அனுசரிக்க வேண்டுமானால் எல்லோரையும் சகோதரர்களாகக் கண்டாலொழிய முடியாதென்றும் பேசினார்.

இவருடைய உபன்னியாசத்தைக் கேட்க அநேக ஹிந்துக்களும் மகமதியர்களும் கணக்கில்லாமல் வந்திருந்தார்கள். இவர் பேசிய ஒவ்வொரு பேச்சும் கேட்பவர்களுக்கு வெகு ஆனந்தத்தையும் ஊக்கத்தையும் கொடுத்தது. அங்கிருந்தவர்களெல்லோரும் அவர் பேச்சையே எதிர்பார்த்துக் கொண்டு வேறு எண்ணமில்லமலிருந்தார்கள்.

இந்த ஸ்வாமி ஹைதராபாத்தில் ‘குடுகொண்ட’ என்னும் கிராமத்தில், ஒரு பெரிய மகமதிய குலத்தில் பிறந்தவர். சையத் மகமத் என்பவரிடத்தில் சிறு வயதில் படித்தார். இவருக்கு மத விசாரணையில் ருசி யுண்டானது இவர் தகப்பனாரால்தான். இவருக்குக் கொஞ்சம் சமஸ்கிருதமும் தெரியும். அமரகோசம், ஸ்ரீபகவத் கீதை இவைகளைச் சிறுவயதிலேயே வாய்ப்பாடம் செய்தார்.

கபீர், நானக், கனகா முதலிய மகாத்மாக்களின் கீதங்களை வெகு ஆவலோடு படித்தார். இதே விஷயங்களில் மனதைச் செலுத்திக் கொண்டு வந்தமையால் இவருக்குச் சமுசாரத்தில் வெறுப்பு உண்டாய்விட்டது. தம்மிடத்தை விட்டுவிட்டு அநேக ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்து கடைசியாக இமயமலைப் பக்கங்களில் வெகுகாலம் வாசம் செய்தார். இவருக்குக் கம்பளி ஸ்வாமி என்ற பெயர் இப்போதுதான்

கிடைத்தது. இவருக்கு இவ்வுலகத்திலுள்ள ஆஸ்தி ஒரு கம்பளிதான். இதைப் போர்த்திக் கொண்டு மலைச் சிகரங்களிலெல்லாம் சுற்றித் திரிவார். எங்கேயாவது ஒரு சாதுவைக் கம்பளியில்லாமல் கண்டால் தன் கம்பளியையும் அவருக்குப் போர்வையாகப் போட்டுவிட்டுப் போய்விடுவார்.

இவர் தானாகவே பிரயாசப்பட்டுக் கொஞ்சம் பணம் சம்பாதித்து ஒரு பெரிய இரும்புப் பாலம் கட்டியிருக்கிறார். இந்தப் பாலத்தினால் இமயமலை ஒரு சிகரத்திலிருந்து மற்றொரு சிகரத்திற்குப் போக ஒரு சுலபமான குறுக்கு வழியாயிருக்கிறதாம். இவருடைய பெருமையைக் குறித்து ஸ்வாமி விவேகானந்தரும் அநேக இடங்களில் சொல்லியிருக்கிறார். இவருடைய சரித்திரம் தெரிந்தவர்கள் யார்தான் இவரைப் புகழ மாட்டார்? தன்னலமென்பதே தெரியாத இவர் நாடெல்லாம் சுற்றித் திரிந்து ஸத்தியத்தைக் கைப்பற்றி அன்னியர்களுக்கு அதை யூட்டுவதற்கு உலகத்தில் சீவித்திருப்பவரைக் கண்டால் யார் தான் மெச்சார்?

இப்பேர்ப்பட்ட மகான்கள் ஹிந்து - முஸ்லீம்களுக்குள் ஐக்கியத்தை யுண்டாக்கக் கருதினால் அது அதிசீக்கிரத்தில் நடைபெறும். இந்தியாவில் மதக் கோட்பாடுகளை நன்றாயறிந்த ஸாதுக்கள் வந்து ஒரு சீர்திருத்தம் செய்ய வேண்டுமானால் அதைத்தான் ஹிந்துக்களும் மகமதியர்களும் அக்கறையோடு கேட்டு அனுசரிக்க எத்தனிப்பார்கள்.

அதில்லாமல் ஆங்கிலேயர்களின் நடவடிக்கையைப் புஸ்தகத்தில் படித்துவிட்டு இங்கிலாந்தில் நடைபெறும் வழக்கங்களையெல்லாம் இங்கு அனுசரிக்க வேண்டுமென்று சில போலி சீர்திருத்தக்காரர்கள் (Social reformers) கூத்தாடினால், இந்தியாவில் ஒருவரும் மதிக்க மாட்டார்கள். இவர்கள் எவ்வளவு பொதுக்கூட்டம் கூடினாலும், எவ்வளவு பெரிய பெரிய உத்தியோகஸ்தரை உதவிக்குச் சேர்த்துக் கொண்டாலும் நமது பழைய ஆசாரங்களில் ஒரு அணுவேனும் மாறுபடாது. சமுசாரத்தைத் துறந்து கோமணாண்டியா இருந்தாலும் அவர் பேச்சுக்கு நம் ஜனங்கள் செய்யும்

கௌரவம் எவ்வளவு பெரிய கனவனாயிருந்தாலும், உலக வாழ்க்கையில் பெருமை பெற்றிருந்தாலும் இவர் பேச்சுக்குக் கிடைக்காது.

பொதுஜன நோக்கம் இவ்விதமிருக்கிறபடியால்தான் இந்தியாவில் இந்த இழிவான தசையிலும் கம்பளி ஸ்வாமி முதலியவர்களைப் போன்ற பெரிய பெரிய மகான்கள் நமது தேசத்தில் உதிக்கிறார்கள்.[*]

சுதேசமித்திரன்

கி.பி.1882 மார்ச்சு மாதத்தில் சுப்பிரமணிய ஐயரால் 'சுதேசமித்திரன்' வாரப் பத்திரிகையாகத் துவங்கப்பட்டது.[**] *1889 இல் சுதேமித்திரன் நாளிதழ் ஆனது*[***] *1904 நவம்பர் முதல் 1906 ஆகஸ்ட்வரை சுதேசமித்திரனில் பணியாற்றிய பாரதி, 1915-1920 வரை வெளி எழுத்தாளராக இருந்த அவ்வப்போது சுதேசமித்திரனில் எழுதி வந்தார். 1920 ஆகஸ்ட் முதல் தனது வாழ்நாள் இறுதிவரை சுதேசமித்திரனில் பாரதி உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்*[****]

30.10.1917 சுதேசமித்திரன் இதழில் மகாகவி பாரதி சக்தி தாஸன் என்ற புனைப் பெயரில் ஹிந்துக்களும் மஹம்மதியரும் என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை இதோ . . .

ஹிந்துக்களும் மஹம்மதியரும்

ஆப்கனிஸ்தானத்து அமீர் தமது நாட்டில் வாழும் ஹிந்து பிரஜைகளுடைய மதக் கொள்கை ஆசாரங்களுக்கு எவ்விதமான இடையூறும் செய்யாமல், ஹிந்துக்களுக்குப் பல உயர்ந்த

---

* முற்கூறிய நூல், பக். 65 – 67.

** மா.ரா.இளங்கோவன், முதல் நாளிதழ்கள் மூன்று, சென்னை, 1982. ப, 368, பெ.சு.மணி, கார்ல்மார்க்சின் இலக்கிய இதயம், சென்னை, 1989, ப. 26.

*** சுதேசமித்திரன், 18.01.1908, பக். 2 – 3.

**** இ.சுந்தரமூர்த்தி, மாரா.அரசு, இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள், தொகுதி – 3, சென்னை, 2004, ப. 168. (இதழாளர் பாரதியார் பா.இறையரசன் கட்டுரை)

உத்தியோகங்கள் கொடுத்து ஆதரிக்கிறார். ஹைதராபாத் நிஜாம் அவர்கள் ஹிந்து ஆலயங்களை ஆதரிப்பதும், ஹிந்துக்களுக்கு முதல் மந்திரி ஸ்தானம் வரை கொடுத்து மேன்மைப்படுத்துவதும் ஸகலருக்கும் தெரிந்த விஷயம்.

தென்னாட்டில் ஹிந்து- மஹமதிய விரோதங்கள் கிடையாது. கிராமங்களில் ஹிந்துக்களும், மகமதியர்களும் அண்ணன், தம்பி, மகன், மருமகன், அத்தான் என்று பரஸ்பரம் உறவு கொண்டாடிக் கொள்ளுகிறார்கள்.

ஹிந்துக்களும் மஹமதியரும் சகோதரர்

ஹிந்துக்களும் மஹமதியரும் சகோதரர், இந்தியா ஜனங்களுக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமா என்பதை ஆராய்ச்சி செய்யும் பொருட்டாக மந்திரி மாண்டேகு வரப்போகிற ஸமயத்தில் அவருக்கு உபத்திரவம் இல்லாமல் இருக்கும் பொருட்டாகத் தேசத்தல் ஸமாதானம் நிறைந்திருக்கும்படி செய்யவேண்டுமென்று ராஜாங்கத்தார் நம்மை வேண்டுகிற தருணத்தில் நாம் சில அற்பர்களின் வார்த்தையைக் கேட்டு மோசம் போகாமல், மத பேதங்கள், ஜாதி பேதங்கள், குல பேதங்கள் முதலியன உலகத்தில் வேறு தேசங்களில் இருப்பதுபோலே நமது நாட்டிலும் இருப்பது மெய்யே. ஆயினும் அதையொட்டி நாம் முப்பது கோடிப் பேரும் ஒரே தேசத்தார் என்பதையும், நமது பின் தலைமுறையார் ஒற்றுமைப்பட்டு அண்ணன் தம்பிகளைப் போலே வாழ்வதற்குரிய ஏற்பாடுகள் நாம் அத்தனை பேரும் ஒருமனப்பட்டுச் செய்துவைத்துவிட்டுச் செத்தாலொழிய நாம் ஸந்ததித் துரோகம் செய்த பாவிகள் ஆவோம் என்பதையும் யாரும் மறக்கக்கூடாது.

ஹிந்து முஸல்மான் ஏக் ஹை
மில்கே ஜீனா நேக் ஹை
(ஹிந்து - முஸல்மான் ஒன்றுகூடி வாழ்தலே நன்று)*

சுதேசமித்திரன் 3.5.1918 இல் சி. சுப்பிரமணிய பாரதி என்ற பெயரில் 'அந்தரடிச்சான் ஸாஹப் கதை' எனும் கதையை பாரதி எழுதியுள்ளார். இதோ அந்தச் சிறுகதை . . .

அந்தரடிச்சான் ஸாஹப் கதை

மொகலாய ராஜ்யத்தின்போது, தில்லி நகரத்தில் அந்தரடிச்சான் ஸாஹப் என்ற ஒரு ரத்ந வியாபாரி இருந்தான். அவனுக்குப் பிதா பத்து லக்ஷம் ரூபாய் மதிக்கத் தகுந்த பூஸ்திதியும் பணமும் நகைகளும் வைத்துவிட்டுப் போனார். அவன் அவற்றை எல்லாம் பால்யத்தில் சூதாடித் தோற்று விட்டான். அந்தரடிச்சான் ஸாஹபுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அவனுக்குச் செத்தான் ஸாஹப் என்று பெயர். இந்தப் பிள்ளையும் அவன் மனைவியாகிய வில்ரீல்லாப்பா என்பவளும், அவனுடைய சிறிய தகப்பன், ஒரு கிழவன், அவன் பெயர் மூர்ச்சே போட்டான் ஸாஹப் ஆகிய மேற்படி கிழவனுமாக, இத்தனை பேர் அடங்கிய பெரிய குடும்பத்தை அவன் புகையிலைக் கடை வைத்து ஸம்ரக்ஷரணை செய்து வந்தான்.

இப்படியிருக்கையில் அந்தரடிச்சானுக்குத் தீரா வயிற்று வலி வந்தது. அத்துடன் கண்ணும் மங்கிவிட்டது. எட்டு யோசனை தூரத்துக்கப்பால், ஒரு அதிர் வேடிச் சத்தம் கேட்டால், அவன் இங்கே பயந்து நடுங்கிப்போய், நூறு குட்டிக்கரணம் போடுவான்.

தலைக்குமேலே காக்கை பறக்கக் கண்டால், தெருவிலே போகையில் ஆந்தை கத்தினால், பூனை குறுக்கிட்டால், வண்டி எதிரே வந்தால், சிப்பாயைக் கண்டால், இப்படி எவ்வித அபாயக் குறி நேரிட்டாலும் ஒவ்வொரு முறையும் நூறு நூறு குட்டிக்கரணம் போடுவது அவனுடைய வழக்கம்.

இங்ஙனம் தெருவில் போகும்போதும், வீட்டில் இருக்கும் நேரத்திலும் குட்டிக்கரணம் போட்டுப் போட்டு அவனை நெட்டைக் குத்தலாக நிறுத்துவதே கஷ்டமாய் விட்டது.

ஒருநாள் மேற்படி அந்தரடிச்சானிடம் அவனுடைய பிள்ளையாகிய செத்தான் ஸாஹப் வந்து பின்வருமாறு சொல்லலானான்.

‘பப்பாரே! சுத்தமாக ரஸமில்லை. காசு கொண்டா, காலையில் நம்கீ ரொட்டி ஜாஸ்தி, மீன் இல்லை. சாப்பாட்டுக் கஷ்டம், நமக்கு எதுவும் கைகூடவில்லை. ஹிம் ஹூம் ஹூகும்! நீ ரொம்ப கெட்டிக்காரன் என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய் உம் ஹூம், உன்னிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும். நாளை கேட்கிறேன். ஹிக்கா! ஹிக்கிம்! ஹிக்கீம்; இப்போதே கேட்டு விடட்டுமா? ஹ்ம், ஹ்ம், ஜிம், ப்ஸ்ஸ்ஸ். நீ யன்றோ இந்த நிலைமையே குடும்பத்தைக் கொண்டு விட்டாய். ஒய்யோம்! ப்யோம்! ப்யோம், நம்கீ ரொட்டி ஜாஸ்தி; மீன் இல்லை சாப்பாட்டுக்குக் கஷ்டம்! பாலா, மணிலாக்கொட்டை வாங்கிக் கொடு’ என்றான்.

அப்போது அந்தரடிச்சான் சொல்லுகிறான்.

‘க்யாரே? நம்கீ ரொட்டி இல்லை. நீ மீனில்லை யென்று நம்மிடத்தில் கோபிக்கிறாயே! அந்தக் கிழ மூர்ச்சே போட்டான் ஸாஹப் இருக்கிறார். அவராலே வீட்டுக்கு ஒரு தம்பிடி வருமானம் கிடையாது. ஹாம்! என்ன சொன்னாயடா! நானா சூதாடினேன்? என்னையாடா சொன்னாய்? என்று கேட்டான். உடனே முந்நூறு பல்டி யடித்துச் செத்தான் ஸாஹப் மேலே விழுந்தான்.

இப்படி இருக்கையில் அந்த வூர் பாத்ஷாவுக்குப் பிறந்த நாள் பண்டிகை வந்தது. பெரிய கூட்டம். தோரணங்கள், டால்கள், பந்தர்கள், மாலைகள், விளக்கு வரிசைகள், புலி வேஷங்கள், பெரிய பெரிய வஸ்தாதுகள் வந்து குஸ்திச் சண்டைகள், அதிர்வெடி ஜமா!

அதுக்கு நடுவே அந்தரடிச்சான் ஸாஹப் போய் நுழைந்தான். இத்தனை ஜமாவையும் பாத்ஷா ஏழாம் உப்பரிகையின் மேலே இருந்து பார்த்துக் கொண்டிருந்தான். ஓரிடத்தில் கத்திச் சண்டை நடந்துகொண்டிருந்தது.

காலை ஏழு மணி முதல் பகல் பத்து மணி வரையில் மூன்று மணி நேரமாக ஒரு க்ஷணம்கூட சிரம பரிஹாரமில்லாமல் அங்கு இரண்டு பெரிய பயில்வான்கள் கத்திப் போர் செய்து

கொண்டிருந்தனர். போர் வெகு ஜீமுதமாக நடக்கிறது. அந்த இடத்தில் பெரிய கும்பல் கலையாமல், அத்தனை பேரும் சித்திரப் பதுமைகள்போலே அசையாமல் மேற்படி பயில்வான்களின் சண்டையைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றனர்.

பல இடங்களில் அந்தரடிச்சான் ஸாஹப் தட்டுண்டு கொட்டுண்டு அங்கே வந்து விழுந்தான். கூட்டம் பளிரென்று விலகிற்று. ஒருத்தன் ஹோ! என்று கத்திக் கொண்டோடிப் போனான். அத்தனை கூட்டமும் ஹோ, ஹோ, ஹோ, என்று கத்திக்கொண்டு ஓடிப்போயின. அவன் பட படவென்று குட்டிக்கரணம் போட்டுக் கொண்டே கத்திச் சண்டை செய்த வஸ்தாதுகளின் மேலே போய் விழுந்தான். அவர்கள் ஹோ என்று கதறி ஒருவர்வாள் ஒருவர்மீது பாய இரத்தம் பீறிட்டுக் கீழே சாய்ந்தனர்.

இதையெல்லாம் ஏழாம் உப்பரிகை மேலேயிருந்து பார்த்துக் கொண்டிருந்த பாத்ஷா, 'ஹோ, ஹோ, இவனை யன்றோ நமது ஸேனாபதியாக நியமிக்க வேண்டும்! என்று கருதி அவனை அழைத்து ' நீ நமது ஸேனாபதி வேலை தரித்துக் கொள்' என்றான்.

ஞாபகம்

இவன் அந்த வார்த்தையைக் கேட்டவுடன் ஸேனையென்ற ஞாபகமும் சண்டையென்ற நினைவும் அதிலிருந்து மரணமென்ற ஞாபகமும் மனதில் தோன்ற உடனே பயந்து நடங்கிப்போய் முப்பது குட்டிக்கரணம் போட்டுப் பாத்ஷாவின் மேலே போய் விழுந்தான்.

'ஒஹோ! இவன் தனது வணக்கத்தையும், பராக்ரமத்தையும் நம்மிடத்தில் நேரே காண்பித்தான்' என்று பாத்ஷா ஸந்தோஷத்துடன் வியந்து அவனுக்கு லக்ஷம் மோஹரா விலையுள்ள ஒரு வயிர மாலையை ஸம்மானம் கொடுத்து, ஸேனாபதி நியமன உத்தரவும் கொடுத்தனுப்பினார்.

அந்த பாத்ஷாவின் காலத்தில் எங்கும் சண்டையே கிடையா தாகையால், அந்தரடிச்சான் ஸாஹப் போரில் தனது திறமையைக் காட்ட ஸந்தர்ப்பமே வாய்க்காமல் சாகுமளவும் ஸேனாபதி என்ற நிலைமையில் ஸௌக்யமாக நாளொன்றுக்கு லக்ஷம் குட்டிக்கரணங்கள் போட்டுக் கொண்டு இதனாலேயே எட்டுத் திசைகளிலும் கீர்த்தி யோங்க மிகவும் மேன்மையுடன் வாழ்ந்தான்.*

ரெயில்வே ஸ்தானம்

22.5.1920 சுதேசமித்திரனில் சி. சுப்பிரமணியபாரதியின் 'ரெயில்வே ஸ்தானம்' ஒரு சிறிய கதை பிரசுரமாகியுள்ளது.

வஸந்த காலம் காலை நேரம். தென்காசி ஸ்டேஷன், இது பிரிட்டிஷ் இந்தியாவைச் சேர்ந்தது. இதற்கு மேற்கேயுள்ள அடுத்த ஸ்டேஷன் செங்கோட்டை. இது இரண்டு மைல் தூரத்தில் மிகக் கீர்த்திபெற்ற குற்றாலத்தருவி விழுகிறது. பக்கமெல்லாம் மலைய கிரிச்சாரல், கொஞ்சம் மேற்கே போனால், செங்கோட்டை ஸ்டேஷன் முதல் திருவனந்தபுரம் வரை பாதையிலே பத்து ஸ்டேஷன் மட்டும். இரண்டு பக்கங்களிலும் செங்குத்தான மலைகளும், ஆழமான பள்ளங்களும், மலையை உடைத்து ரயில் வண்டி ஊடுருவிச் செல்லும் பொருட்டாக ஏற்படுத்தப்பட்ட நீண்ட மலைப் புழைகளும் இரு பாரிசத்திலும் இயற்கையைாய்ப் பச்சை உடுத்து, சாலமிகப் பெருஞ் செழிப்புடனே களிகொண்டு நிற்கும் பல வகைப்பட்ட வனக்காட்சிகளும் ஒருமுறை பார்த்தால் பிறகு எக்காலத்திலும் மறக்க முடியாதன.

இந்தத் தென்காசி ஸ்டேஷன் வெளி முற்றத்தில் காலை நேரத்திலே திருநெல்வேலிப் பக்கம் கிழக்கே போகும் ரயில் வரப்போகிற சமயத்தில் சுமார் நூறு பிரயாணிகள் வந்து கூடி இருக்கிறார்கள்.

---

* பாரதியார் கதைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1977, பக். 273 – 276.

இவர்களிலே சிலர் பிராமண வைதீகர். நீர்க்காவி அழுக்கு நிறமாக ஏறிப்போன மிகப் பழைய வெள்ளைத் துணி உடுத்து உடல் வேர்க்க உட்கார்ந்துக் கொண்டு, இன்ன ஊரில், இன்ன தேதி, இன்னாருக்குச் சீமந்தம் என்ற விஷயங்களைப் பற்றி சம்பாஷணை செய்து கொண்டிருக்கிறார்கள்.

பிராமண விதவைகள் பலர் ஒரு புறத்திலே இருந்து தமக்குள் ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். சுமங்கலிப் பிராமணத்திகள் ஒரு பக்கத்தில் தலைகுனிந்து நின்றுகொண்டு, போவோர் வருவோரை கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு சில உத்தியோகஸ்தர் தலைப்பாகை, கோட்டு, கெடியாரச் சங்கலி சகிதமாக உலாவுகிறார்கள். சில போலீஸ்காரர்கள் சக்கிரவர்த்திகளைப் போலத் தலைநிமிர்ந்து நடக்கிறார்கள்.

சில முகம்மதிய ஸ்திரீகள் முட்டாக்குப் போட்டு தலையையும் முகத்தையும் மூடிக்கொண்டு திசைக் கொருத்தியாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுருட்டு, பீடி, பொடிப்பட்டை, முறுக்கு, தேங்குழல், சுகியன், காப்பி முதலியன வியாபாரம் செய்யும் ஒரிரண்டு பிராமணரும் சூத்திரரும் பகற்கொள்ளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதாவது காசு பெறாத சாமான்களுக்கு மும்மடங்கு நான்கு மடங்கு விலை வைத்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

ரயில் வண்டி அன்றைக்கு ஒரு மணி நேரம் தாமஸமாக வந்தது. எனக்குப் பொழுது போகவில்லை. தண்டவாளத்தின் ஓரமாகச் சிறிது தூரம் உலாவி வரலாமென்று கருதித் தென்புறமாகக் கூப்பிடும் தூரம் போனேன்.

அங்கு ஒரு மரத்தடியிலே மிகவும் அழகுள்ள ஒரு மகம்மதிய கனவான் உட்கார்ந்திருக்கக் கண்டேன். சரிகைத் தொப்பி, சரிகைக் கரைகள் தைத்த மஸ்லீன் சட்டை, சரிகைக் கரை போட்ட நிஜார், சரிகை போட்ட செருப்பு, பூர்ணச் சந்திரன் போன்ற முகம், செழித்து வளர்ந்த மீசை, அவனைப் பார்த்த மாத்திரத்திலே அவன் பிரபுக் குலத்தில்

பிறந்தவனென்று எனக்கு நிச்சயமாகி விட்டது. அவன் கண்களினின்றும் தாரை தாரையாகக் கண்ணீர் ஊற்றுகிறது.

இதைப் பார்த்து எனக்கு மிகவும் பரிதாப முண்டாயிற்று. நான்போய் அவனை 'ஏன் அழுகிறாய்?' என்று கேட்டால், அதினின்றும் அவனுக்கு ஒருவேளை கோபம் உண்டாகுமோ என்பதைக்கூட யோசனை செய்யாமல் சரெலென்று அவன் முன்னே போய் நின்று கொண்டு, 'தம்பி ஏன் அழுகிறாய்?' என்று கேட்டேன்.

அவன் என்னை ஏற இறங்க ஒருமுறை பார்த்தான். அவனுக்கு 25 வயதுக்குமேல் இராது. அவன் தலையைக் குனிந்து அழுது கொண்டிருந்தபோதே மிகவும் சுந்தரபுருஷனாகக் காணப்பட்டான். பிறகு அவன் என்னைப் பார்த்தவுடன் கண்ணைத் துடைத்துக்கொண்டு என் இரண்டு கண்களுடனே அவனிரண்டு கண்களும் பொருந்த நோக்கிய காலத்தில் அவன் ரூபம் எனக்கு சாட்சாத் மன்மத ரூபமாகவே தென்பட்டது.

என்னை உற்று நோக்கியதினின்றும் அவனுக்கு எப்படியோ என்னிடத்தில் நல்லெண்ணம் உண்டாய் விட்டது. சற்றேனும் என்னிடம் கோபம் கொள்ளாமல் 'ரயில் எப்போது வரப்போகிறது?' என்று கேட்டான்.

'இன்றைக்கு ஒரு மணி நேரம் ரயில் தாமதித்து வரப்போவதாக ஸ்டேஷன் மாஸ்டர் சொன்னார்' என்றேன்.

எனக்கு ஹிந்துஸ்தானி அல்லது உருது பாஷை நன்றாகத் தெரியும். ஆதலால், நான் அவனிடம் உருது பாஷையிலே ஆரம்ப முதல் பேசினேன்.

'உங்களுக்கு உருது எப்படித் தெரியும்? உங்களைப் பார்த்தால் ஹிந்துக்கள்போலத் தோன்றுகிறதே?' என்று கேட்டான்.

அதற்கு நான், 'சிறு பிராயத்திலேயே நான் காசிப்பட்டணத்தில் கல்வி பயின்று கொண்டிருந்தேன். அங்கு எனக்கு ஹிந்துஸ்தானி பாஷை பழக்கமாயிற்று' என்றேன்.

'காசியில் ஹிந்தி பாஷை அன்றோ பேசுகிறார்கள்?' என்று அந்த முஸல்மான் கேட்டான்.

அதற்கு நான், 'ஹிந்தி? உருது, ஹிந்துஸ்தானி எல்லாம் ஒரே பாஷைதான். முகலாய ராஜாக்கள் பாரசீக பாஷையிலேதான் பெரும்பாலும் ஆரம்பத்திலே விவகாரம் நடத்தி வந்தார்கள். பின்னிட்டு அவர்கள் தமக்கும் தம்முடைய பரிவாரங்களுக்கும் இந்த தேசத்துப் பாஷையாகிய ஹிந்தியையே பொது பாஷையாகக் கைக்கொண்டார்கள். ஹிந்தி பாஷை ஸம்ஸ்கிருதத்திலிருந்து பிறந்தது. அது ஸம்ஸ்கிருத பாஷையின் சிதைவு. அதை ஹிந்துக்கள் தேவநாகரியில் எழுதி ஸ்வயம்புவாகப் பேசுகிறார்கள். அதையே பார்ஸி லிபியில் எழுதிக் கொண்டு பல பார்ஸி அரபி மொழிகளைக் கலந்து முஸல்மான்கள் பேசியபோது அதற்கு ஹிந்துஸ்தானி அல்லது உருது என்று பெயர் வழங்கினார்கள். உருது என்றால் கூடார பாஷை என்று அர்த்தம். அதாவது, மொகலாய் ராஜ்யத்தின் சேனைகள் கூடாரம் அடித்துக்கொண்டு பல தேசத்தப் போர் வீரர்கள் கலந்திருக்கையில் அங்கு தோன்றிய கலப்புப் பாஷை என்று பொருள். எனக்கு ஹிந்திதான் மிகவும் நன்றாகத் தெரியும். எனிலும் ஹிந்துஸ்தானி அல்லது உருது மேற்படி ஹிந்தி பாஷையில் பார்ஸி அரபிச் சொற்கள் சேர்ந்தேயாகு மாதலால்தான் இதிலும் நல்ல பழக்கமுடையவனானேன்' இது நிற்க.

'நீ வருத்தப்பட்டுக் கொண்டிருந்த காரணம் யாது?' என்று மறுபடியும் என்னை அறியாமலே கேட்டேன்.

இது கேட்டு அந்த முகம்மதியப் பிரபு சொல்லுகிறான். சுவாமி, உங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே எனக்கு உங்களிடம் விசுவாசம் உண்டாகிறது. உங்களிடம் சொன்னால் என் துக்கத்திற்கு நிவர்த்தி உண்டாகுமென்று என் மனதில் ஒருவித நிச்சயம் தோன்றுகிறது. என் துயரம் சாதாரணமாக மற்றவர்களிடம் சொல்லக்கூடியதன்று. எனினும், உங்களிடம் சொல்லலாமென்று நினைத்துச் சொல்லுகிறேன். என்

துயரத்தைத் தீர்த்துவிட்டால் உங்களுக்கு மிகுந்த புண்ணிய முண்டு. இந்த உபகாரத்தை நான் இறந்து போகும்வரை மறக்க மாட்டேன். என்றான்.

'முதலாவது உம்முடைய கஷ்டத்தைச் சொல்லும் தீர்க்க வழி கிடைத்தால் தீர்த்து விடுகிறேன்' என்றேன்.

அப்போது அம் முகம்மதியப் பிரபு. பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

எங்கள் ஜாதியில் சிறிய தகப்பனார், பெரிய தகப்பனார் மக்களை விவாகம் செய்து கொள்ளலாமென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கக் கூடும். நான் பிறந்தது வடக்கே ஹைதராபாத் நகரம், சிந்து மாகாணத்து ராஜதானியாகிய ஹைதராபாத் அன்று, நிஜாம் அரசரின் ராஜதானியாகிய ஹைதராபாத் நகரம்.

நான் என் பிதாவுக்கு ஒரே பிள்ளை. நான் பிறக்கும்போது என் பிதா மிகவும் ஏழையாக இருந்தார். நான் பிறந்து சில வருஷங்களுக்குப் பின் எங்கள் ராஜ்யத்தில் ஒரு பெரிய 'லாட்டரி' ஏலச் சீட்டுப் போட்டார்கள். அந்தச் சீட்டுக்கு என் பிதா யாரிடதிருந்தோ 10 ரூபாய் கடன் வாங்கி அனுப்பினர். அதிர்ஷ்டம் அவருக்கிருந்தது. அவருடைய தரித்திரத்தை நாசம் பண்ணிவிட வேண்டுமென்று அல்லா திருவுளம் பற்றினார். ஒரு கோடி ரூபாய் சீட்டு அவருக்கு விழுந்தது.

பிறகு அவர் அதைக்கொண்டு சில வியாபாரங்கள் நடத்தினார். அந்த வியாபாரங்களிலும் அவருக்கு மிதமிஞ்சிய லாபம் கிடைக்கத் தொடங்கி, சில வருஷங்களுக்குள்ளே ஏழெட்டுக் கோடிக்கு அதிபதியாய் விட்டார். அப்பால் சற்றே நஷ்டம் வரத்தொடங்கிய மாத்திரத்திலே திடீரென்று வியாபாரங்களை எல்லாம் நிறுத்திக்கொண்டு, பணங்களைத் திரட்டி ஏராளமான பூஸ்திதிகள் வாங்கி அவற்றினிடையே மாளிகை கட்டிக்கொண்டு தம்மால் இயன்ற வரை பரோபகாரத்தல் ஈடுபட்டவராய் வாழ்ந்து வந்தார்.

நான் பதினைந்து வயதாக இருந்தபொழுது அவர் இறந்து போய்விட்டார். நான் ஒரே பிள்ளையாதலால் அவர் சொத்தெல்லாம் என்கு வந்து சேர்ந்தது. என் வீட்டு மேற்பார்வை செய்ய எனது சிறிய தகப்பனார் நியமிக்கப்பட்டிருந்தார். என் தந்தை இறக்குந் தறுவாயில் சிறிய தகப்பானருக்குச் சில லக்ஷங்கள் பெறக்கூடிய பூமி இனாம் கொடுத்ததும் அன்றி, என்னைப் பராமரித்து வரும் கடமையையும் அவருக்கே சார்த்திவிட்டுப் போனார்.

எனது சிறிய தகப்பனார், முதலாவது வேலையாக, தம்முடைய குமாரத்திகளை எனக்கே மணம் புரிவித்தார். என் பிதா இறந்து இரண்டு வருஷங்கள் ஆகுமுன்னரே, மேற்படி விவாகம் நடைபெற்றது. என் சிறிய தகப்பனாருக்கு ஆண் குழந்தை கிடையாது. மூன்று பெண் பிரஜைதான் அவருக்குண்டு. ஆகவே என்னுடைய சொத்து வெளிக் குடும்பங்களுக்குப் போய்விடக்கூடாதென்று உத்தேசித்து அவர் இங்ஙனம் செய்தார்.

இந்த விவாகம் என் தாயாருக்குச் சம்மதம் இல்லை. அவள் தன்னுடைய வகையில் ஒரு அழகான பெண்ணை எனக்கு மணம் புரிவிக்க விரும்பினாள். அதை விட்டு நான் சிறிய தகப்பனாரின் பெண்களை விவாகம் செய்துகொண்டாலும் அவர்களில் யாரெனும் ஒரு பெண்ணை மாத்திரம் மணம் செய்துகொள்வதே சரியென்று, ஒரேயடியாக மூவரையும் மணம் புரிவது கூடாதென்றும் என் தாய் வற்புறுத்தினாள். இதினின்றும் என் தாயாருக்கும் சிறிய தகப்பானாருக்கும் மனஸ்தாபம் மிகுதியாக ஏற்பட்டது.

சிறிய தகப்பனார் என்னைத் தனியாக வேறே ஊருக்கு அழைத்துக் கொண்டுபோய் அங்கு என் தாயாருடைய அனுமதி இல்லாமலே விவாகத்தை முடித்து வைத்து விட்டார். சிறிது காலத்துக்கெல்லாம் என் தாயார் என் செய்கையாலே ஏற்பட்ட துக்கத்தைப் பொறுக்க மாட்டாமலே உயிர் துறந்து விட்டாள்.

சிறிய தகப்பனார் இட்டதே என் வீட்டில் சட்டமாய் விட்டது. சொத்து விஷயங்களை நான் கவனிப்பதே கிடையாது. எல்லாம் அவர் வசத்தில் விட்டு விட்டேன். அவரும் என் சொத்தில் தம்மால் இயன்ற வரை இரண்டு மூன்று வருஷங்களுக்குள்ளே அறுபத்தேழு லக்ஷம் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் வரை தாஸிகளின் விஷயத்திலும், குடியிலும் நாசம் பண்ணிவிட்டு, கடைசியில் குடி மிகுதியால் குடல் வெடித்துச் செத்துப்போனார்.

பிறகு என் சொத்தை எல்லாம் நிர்வகிக்க வேண்டிய கடமை என்னைப் பொறுத்ததாயிற்று. சரி, இந்த விஷயத்தை விஸ்தாரமாகச் சொல்லுவது என்னுடைய நோக்கமன்று, சொத்துக் கொஞ்சம் நஷ்டமானதில் எனக்கு அதிகக் கஷ்டமில்லை. இதனிடையே என்னுடைய மூன்று மனைவிகளால் நான் படும் பாடு சொல்லுந்தரமன்று.

அதோ - பார்த்தீர்களா? ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் முகம்மதிய ஸ்திரீகள் உட்காந்திருக்கும் கூட்டம் தெரிகிறதென்றோ? நடுவே யிருக்கும் மூன்று பேரும் என் பத்தினிமார். சுற்றி உட்கார்ந்திருப்போர் வேலைக்காரிகள். அந்த மூன்று பேரும் மூலைக் கொருத்தியாக முகத்தைத் திருப்பிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்த மாத்திரத்திலேயே அவர்களுக்குள்ளே மன வொற்றுமையில்லை என்பது பிரத்யக்ஷமாக விளங்கவில்லையா? இவர்களில் மூத்தவள் பெயர் ரோஷன், அவளுக்கு வயது இருபத்திரண்டு, அடுத்தவள் பெயர் குலாப் பீவி, அவளுக்கு வயது பத்தொன்பது, அதற்கடுத்தவள் பெயர் ஆயிஷா பீவி. அவளுக்கு வயது பதினாறு.

ரோஷனிடத்தில் நான் பேசினார் குலாப் என்னை வெட்டலாமென்று கருதுகிறாள். குலாபிடம் வார்த்தை பேசுவது ஆயிஷாவுக்குச் சம்மதமில்லை. அவளுக்கு ஒரு நகை வாங்கிக் கொடுத்தால் இவள் ஒரு நகையை உடைத்தெறிகிறாள். இவளுக்கொரு பட்டுச்சட்டை வாங்கிக் கொடுத்தால் அவளொரு சட்டையைக் கிழித்தெறிகிறாள்.

இங்ஙனம் ஒவ்வொரு விஷயத்திலும் அம் மூவரும் முரண்பட்டு என் பிராணனை வதைக்கிறார்கள். ஒரு நாளா, இரண்டு நாளா, ஒரு வருஷமா, இரண்டு வருஷமா, என் வாழ்நாள் முழுவதும் இவர்களால் நரகமாக்கப்படுகிறது. நான் என்ன செய்வேன்?

இதனிடையே நேற்றிரவு ஒரு கனாக் கண்டேன். அதில் முகம்மது நபி வந்து என்னை நோக்கி 'அடே இஸ்மேல்கான், நீ உன் பத்தினிமார் மூவரால் மிகவும் கஷ்டப்படுகிறாய். யாரேனும் இருவரைத் தள்ளி வேறு விவாகம் செய்துகொள்ள விட்டுவிடு. ஒருத்தியை மாத்திரம் வைத்துக்கொள், உன் துக்கம் தீரும்' என்றார். நான் அந்தக் கனவைத் தெய்வ சாசனமாகவே நம்புகிறேன். நம்முடைய மனத்தில் தோன்றுதுதான் கனவாக வருகிறதென்பதை நான் அறிவேன். ஆனாலும் நம்முடைய ஆத்மாவிலும் அல்லாவே இருக்கிறாராதலால் இந்தக் கனவை அல்லாவின் கட்டளை யென்று நான் கருதுகிறேன்.

ஆனால், இந்த மூன்று ஸ்திரீகளிடமும் ஸமானமான பிரியம் இருக்கிறது. அவர்களும் என்னிடம் ஸமமான காதல் கொண்டிருக்கிறார்களென்றும் நினைக்கிறேன். யாரைத் தள்ளுவது, யாரை வைத்திருப்பது என்று என் புத்திக்குத் தென்படவில்லை. அதற்காகத் துக்கப்படுகிறேன் என்று முகம்மதியப் பிரபுவாகிய இஸ்மெல்கான் சொன்னான்.

இதற்குள் ரயில் ஸ்டேஷனுக்குள் வருகிற சத்தம் கேட்டது. அவன் திடுக்கென்றெழுந்து 'ஸலாம்! ஸலாம்!' என்று சொல்லிவிட்டு ஸ்டேஷனை நோக்கி ஓடினான்.

நானும் 'நல்ல வேளை இந்தக் கடினமாக விவகாரத்துக்குத் தீர்ப்புச் சொல்லுமுன் ரயில் வந்ததே' என்ற மகிழ்ச்சி கொண்டு ரயிலிலேறப் போய்விட்டேன்.

முகம்மது நபி கனவில் செய்த கட்டளைப்படியே அவன் நடந்து கொள்வானென்று நம்புகிறேன்.*

---

* ஸ்ரீ.சி.சுப்பிரமணிய பாரதி, பாரதி நூல்கள், கட்டுரைகள், சென்னை, 1950, பக். 271 – 281.

இந்தக் கதை வெளிவந்ததைத் தொடர்ந்து பத்து நாட்கள் கழித்து 2.6.1920 சுதேசமித்திரனில் சி. சுப்பிரமணியபாரதி எழுதுகிறார்

மஹமதிய ஸ்திரீகளின் நிலைமை

இரண்டு தினங்களின் முன்பு என்னுடைய மஹமதிய நண்பரொருவர் என்னைப் பார்க்கும் பொருட்டு வந்திருந்தார். இவர் இஸ்லாம் மார்க்கத்தில் ஆழ்ந்த பற்றுதலுடையவர். **எதிர்காலத்தில் இஸ்லாம் மதம் மிகுந்த மஹிமையும் ஒளியும் உடையதாய் உலகத்துக்கு எண்ணிறந்த நன்மைகள் செய்யப் போகிறதென்று இவர் உறுதியாக நம்புகிறார். இவரது நம்பிக்கை நிறைவேறுமென்பதற்குப் பல அடையாளங்கள் இக்காலத்தில் உலகமெங்கும் தோன்றுவதால், நானும் இவருடைய கருத்தை அங்கீகாரம் செய்கிறேனாதலால் இவருக்கும் எனக்கும் மிகுந்த நட்பேற்பட்டு வளர்ந்து வருகிறது.**

இவர் அன்று காலை என்னிடம் முதலாவது கேட்ட கேள்வி, சென்ற 22-5-20 இல் சுதேசமித்திரன் பத்திரிகை 7-ஆம் பக்கத்தில் 'ரெயில்வே ஸ்தானம்' என்றொரு கதை எழுதியிருக்கிறீர்களே! அது மெய்யாகவே நடந்த விஷயமா? வெறும் கற்பனைக் கதைதானா? என்றார்.

'வெறுங் கற்பனை' என்று நான் சொன்னேன்.

'என்ன கருத்துடன் எழுதினீர்?' என்று அவர் கேட்டார்.

அதற்கு நான், 'பொதுவாக நான் கதைகளெழுதும் போது, வெறுமே கற்பனை நயத்தைக் கருதி எழுதுவது வழக்கமே, யன்றி, ஏதேனும் ஒரு தர்மத்தைப் போதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதும் வழக்கமில்லை. தர்ம போதனைக்கு வ்யாஸங்க ளெழுதுவேன். கதை யென்றெடுத்தால் கற்பனைப் புனைவையே அதில் நான் முக்கியமாகக் கருதுவேன். எனிலும், என்னை மீறியே கதைகளிலும் பெரும்பாலும் தர்ம போதனைகள் வந்து நுழைந்து விடுகின்றன. அவ்வாறே இந்த 'ரெயில்வே ஸ்தானம்' என்ற கதையிலும் ஒரு தர்மக் கொள்கை இருக்கத்தான் செய்கிறது. ஒருவன் பல மாதரை மணம்புரிந்து கொண்டால், அதினின்றும், அவனுக்குக் கஷ்டந்தான்

விளையுமென்பதும், விவாகத்தில் ஒருவன் இன்பங் காண வேண்டினால் அவன் ஒருத்தியை மணஞ்செய்துகொண்டு அவளிடம் மாறாத தீராத உண்மைக் காதல் செலுத்துவதே உபாயமாகும். என்பதும், மேற்படி கதையினால் குறிப்பிடப்படும் உண்மைகளாகும்' என்றேன்.

அப்போது அந்த முஸ்லிம் நண்பர், 'அந்தக் கதையில் ஒரு பிழை இருக்கிறது' என்றார்.

'என்ன பிழை?' என்று கேட்டேன்.

அக்கதையில் ஒரு மஹமதியப் பிரபு மூன்று ஸஹோதரிகளை மணம் செய்வதாக எழுதி இருக்கிறீர்கள். அப்படி ஸஹோதரமான மூன்று பெண்களை மணம் புரிந்து கொள்ளுதல் மஹமதிய சாஸ்த்ரப்படி 'ஹராம்' (பாதகம்) ஆகக் கருதப்படுகிறது. 'தன் மனைவி உயிருடனிருக்கையிலே, அவளுடன் பிறந்த மற்றொரு ஸ்திரீயை ஒரு முஸ்லிம் மணம் புரிந்து கொள்ளக் கூடாதென்பதே எங்களுடைய சாஸ்த்தரங்களின் கொள்கை' என்று அந்த மஹமதிய நண்பர் சொன்னார்.

இதைக் கேட்டவுடன் நான், 'சரிதான். எனக்கு அந்த விஷயந் தெரியாது. மனைவி ஒருத்தியின் சகோதரிகளை மணம் புரியும் வழக்கம் ஹிந்துக்களுக்குள்ளே உண்டாதலால், அதுபோலே முஹமதியர்களுக்குள்ளேயுமிருக்கலாமென்று நினைத்து அங்ஙனம் தவறாக எழுதி விட்டேன். எனவே, அந்தக் கதாநாயகனாகிய மஹமதியப் பிரபுக்கு அவனுடைய சிற்றப்பன் தன் மூன்று குமாரத்திகளையும் மணம் புரிவித்தானென்பதை மாற்றித் தன் இனத்தைச் சேர்ந்த மூன்று பெண்களை மணம் புரிவித்தானென்று திருத்தி வாசிக்கும்படி 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் எழுதி விடுகிறேன் என்றேன்.

இதிலிருந்து ஸம்பாஷணை பொதுவாக மஹமதிய விவாகங்களின் விஷயத்தைக் குறித்து நடைபெறலாயிற்று. அப்பால், மஹமதிய மாதர்களின் ஸ்தானத்தைக் குறித்துப் பேசலானோம்.

என்னுடனே ஒரு ஹிந்து நண்பர் இருந்தார். அவர் அந்த முஸ்லிம் நண்பரை நோக்கி, 'உங்களுக்குள்ளே ஸ்திரீகளை அந்தப்புரத்தில் மறைந்து வைப்பதாகிய கோஷா வழக்கம் எக்காலத்தில் ஏற்பட்டது' என்று கேட்டார்.

அது கேட்டு அந்த மஹமதிய நண்பர், 'முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைகி வஸல்லம்) அவர்கள் காலத்திற்கு நெடுங்காலம் முன்னே இந்த வழக்கம் அரேபியாவில் இருந்தது இடையே மாறிப்போய்விட்டது. பிறகு முஹம்மது நபி அதை மீளவும் விதியாக்கினார்' என்றார்.

அப்போது நான், மத விஷயங்களை அதாவது அல்லாவிடம் செலுத்த வேண்டிய பக்தி முதலிய விஷயங்களைத் தவிர, விவாகம், ஸ்திரீகளை நடத்த வேண்டிய மாதிரி முதலிய ஜன ஸமூஹத்தின் ஆசார நியங்களில் காலத்துக்குத் தக்கபடி புதிய மாறுதல்கள் செய்து கொள்ளலாமன்றோ?' என்று கேட்டேன்.

'அங்ஙனம் ஆசார விஷயங்களிலேகூட மாறுதல்கள் செய்ய எங்கள் சாஸ்த்ரங்கள் இடங்கொடுக்கவில்லை!' என்று அந்த முஸ்லிம் நண்பர் சொன்னார்.

'எந்த சாஸ்த்ரங்களுமே ஆசார நியமங்களில் அதாவது தம்மால் விதிக்கப்பட்ட புதிய ஆசார முறைகளில் அதற்குப் பிறகு யாதொரு மாறுதலும் நேரிடக்கூடாதென்று விதிப்பதுதான் வழக்கம். ஆனால், அந்தப்படி எங்கும் நடப்பதில்லை. எல்லா ஜாதிகளிலும், எல்லா ஜன ஸமூஹங்களிலும், எல்லாத் தேசங்களிலும், எல்லா மதஸ்தர்களுக்குள்ளும் காலத்துக்கு காலம் ஆசாரங்களில் புதிய மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டுதான் வருகின்றன' என்று நான் சொன்னேன்.

'புராதன நபிகளால் விதிக்கப்பட்ட ஆசாரங்களில் சில முஹம்மது நபியின் காலத்தில் மாறவில்லையோ? அதுபோல் முஹம்மது நபியின் காலத்தில் ஏற்பட்ட ஆசாரங்களை அதன் பிறகு மாற்றக் கூடாதோ?' என்று என் ஹிந்து நண்பர் கேட்டார்.

முஹம்மதுதான் கடைசி நபி

அது கேட்ட என் முஸ்லிம் நண்பர், **‘கூடாது, ஏனென்றால், முஹம்மதுதான் கடைசி நபி. அவருடைய உத்தரவுகள் கடைசியான உத்தரவுகள். அவற்றை மாற்றுதற் கிடமில்லை’ என்றார்.**

‘முந்திய நபிகளின் கட்டளைகளும், கடவுளுடைய நேரான கட்டளைகளேயன்றி அந்தந்த நபிகளின் சொந்தக் கருத்துக்களல்ல என்பதை இஸ்லாமானவர்கள் அங்கீகாரம் செய்கிறார்கள். காலத்தின் மாறுதலுக் கிணங்க, அல்லா தன் பழைய கட்டளைகளை மாற்றி ஒவ்வொரு புதிய நபி மூலமாகவும் புதிய கட்டளைகள் பிறப்பித்துக் கொண்டு வந்திருக்கிறார். எனவே, முஹம்மது நபியிருந்த காலத்துக்கும் தேசத்துக்கும் பொருந்த அவர் மூலமாகப் புதிய கட்டளைகள் கொடுக்கப்பட்டன. மதக் கொள்கைகள் எக்காலத்துக்கும் எந்த தேசத்திற்கும் பொது. ஆதலால், அவற்றை மாற்றக்கூடாது. வெறுமே ஜனக்கட்டு ஸம்பந்தமாக ஆசார விவகாரங்களைக் காலதேசங்களுக்குப் பொருந்தும்படி மாற்றலாமென்று முஹம்மது நபி சொல்லவில்லையே!’ என்று அந்த ஹிந்து நண்பர் கேட்டார்.

‘அங்ஙனம் எங்கள் நபி நாயக மவர்கள் உத்தரவு கொடுக்கவில்லை’யென்று என் முஸ்லிம் நண்பர் தெரிவித்தார்.

உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமோ? நீங்கள் குரான் முழுதும் வாசித்திருக்கிறீர்களோ, என்று நான் கேட்டேன்.

அதற்கு என் முஸ்லிம் நண்பர், ‘நான் குரான் முழுதும் ஓதியதில்லை. என் சுற்றத்தாரில் சிலர் குரான் முற்றிலும் ஓதி யிருக்கிறார்கள். இந்த விஷயத்தைப் பற்றி அவர்களிடம் கேட்டுத் தெரிவிக்கிறேன்’ என்றார்.

பிறகு இந்த விஷயத்தை விட்டுவிட்டோம்.

அப்பால் நான் என் முஸ்லிம் நண்பரை நோக்கி, ‘தென் ஜில்லாக்களில் தமிழ் பேசும் முஸ்லிம் (ராவுத்தர்),களுக்குக்ளே, கோஷா வழக்கம் காணப்படவில்லையே. அதன் காரணம் யாது?’ என்று கேட்டேன்.

‘இங்கும் சிலர் அந்த வழக்கத்தைப் பரிபாலிக்கத்தான் செய்கிறார்கள்’ என்று என் முஸ்லிம் நண்பர் சொன்னார்.

‘எனினும் பலர் அதைப் பரிபாலிக்கவில்லையே! அதன் முகாந்தரம் யாது?’ என்று கேட்டேன்.

‘வேத சாஸ்த்ர விதிகளில் அவர்கள் செலுத்தக் கடமைப்பட்ட அளவு பயபக்தி செலுத்தாம லிருப்பதே அதற்கு முகாந்தரம்’ என்று என் முஸ்லிம் நண்பர் தெரிவித்தார்.

அப்படியிருந்தும், தென் ஜில்லாக்களிலுள்ள இந்த முஸ்லிம்கள் மற்றப் பக்கத்து முஸ்லிம்களைக் காட்டிலும் அல்லாவின் பக்தியிலும் மதப் பற்றுதலிலும் சிறிதேனும் குறைந்தவர்களில்லை என்பது ப்ரத்யக்ஷமன்றோ? அங்ஙனமாக, இவர்கள் குரான் விதிகளில் போதிய அளவு பயபக்தி செலுத்தாம லிருக்கிறார்களென்று சொல்லுதல் நியாயமன்று. இந்த கோஷா விஷயத்தில் மாத்திரம் இந்த தேச ஸம்ப்ரதாயங்களைத் தழுவி நடக்கிறார்கள். இவர்களுடைய கூட்டத்தில் எத்தனையோ ஞானிகளும், பக்திமான்களும் அவதாரம் செய்திருக்கிறார்கள். அவர்கள் இந்த கோஷா விஷயத்தை இக் கூட்டத்தின் மீது வற்புறுத்தாமலேதான் இருந்திருக்கிறார்கள். ஆதலால் மத பக்தி முதலிய விஷயங்களில் மாறுதல் கூடாதே யொழிய, ஆசாரங்களில் காலத்துக்குத் தகுந்த, இடத்துக்கத் தகுந்த மாறுதல்கள் செய்துகொள்ள இஸ்லாம் சாஸ்த்ரங்களே அனுமதி தரக்கூடுமென்று நினைக்கிறேன்’ என்று நான் சொன்னேன்.

இது கேட்டு அந்த முஸ்லிம் நண்பர் மீளவும், ‘நான் நன்றாகக் குரான் ஓதியவர்களை விசாரித்து இந்த விஷயத்தில் முடிவு சொல்லுகிறேன்’ என்றார்.

‘‘இடைக்காலத்து சாஸ்த்ரங்கள் இந்த விஷயத்தில் அதிக முரண்டு செலுத்தக் கூடும். ஆதலால், ஸாக்ஷாத்குரான் வேதத்தையே நன்றாகப் படித்துணர்ந்தவர்களிடம் விசாரணை செய்யுங்கள்’ என்றேன்.

‘சரி அங்ஙனமே செய்கிறேன்’ என்று என் முஸ்லிம் நண்பர் சொன்னார்.

பிறகு துருக்கி தேசத்தில் ஸ்திரீகளுக்குள்ளே பிரமாண்டமான விடுதலைக் கிளர்ச்சி நடந்து வருவதைப் பற்றியும், அங்கு பல மாதர்கள் கோஷா வழக்கத்தை முற்றிலும் ஒழித்து விட்டுக் கல்வி கேள்விகளில் உயர்ந்த தேர்ச்சி யுடையோராய்த் தங்களுக்குள்ளே சபைகள் சேர்த்தும், தாங்களே உபந்யாஸங்கள் முதலியன நடத்தியும், உலகத்து மற்ற மாதர்களைப்போல் துருக்கியிலுள்ள மாதர் கல்வி, விடுதலை, ஆண்களுடன் ஸமத்வம் இவற்றை யெய்தி மேம்படுமாறு அதி தீவிரமான முயற்சிகள் செய்து வருதைப் பற்றியும் நான் சில வார்த்தைகள் சொன்னேன்.

அப்பால் எங்கள் காலைக்கூட்டம் கலைந்துவிட்டது.

என் முஸ்லிம் நண்பரும் விடைபெற்றக் கொண்டு தம் வீட்டுக்குப் போயினர்.

பாரதி வெளியிட்ட திருத்தம்

சுதேசமித்திரன் 22.5.1920 ஆம் தேதிய இதழில் வெளிவந்த ‘ரெயில்வே ஸ்தானம்’ என்னும் கதையைப் பாரதியின் முஸ்லிம் நண்பர் ஒருவர் படித்தபின் மகாகவி பாரதியைச் சந்தித்து அக் கதையில் நேர்ந்த பிழையைச் சுட்டிக்காட்டினார்.

முஸ்லிம் நண்பர் சுட்டிக்காட்டிய பிழையின் தன்மையை உணர்ந்து, பாரதி வெளியிட்ட திருத்தம் இதோ. . .

‘ரெயில்வே ஸ்தானம்’ என்ற கதையில் நான் மேலே கூறிய ஸாதாரணத் தவறு புகவிட்டது பற்றிப் பத்திராதிபரும் பத்திரிகை படிப்போரும் என்னைப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன். உலகமெல்லாம் மாதர்களுக்கு நியாயம் செய்ய வேண்டுமென்ற கிளர்ச்சி நடப்பதை அனுசரித்து முஸ்லீம்களும் ஏக பத்நீ விரதம் பெண் விடுதலை, ஆண் - பெண் ஸமத்வம் என்ற கொள்கைகளைப் பற்றி மேன்மையடைய வேண்டுமென்பதே என் கருத்து. இந்தக் கருத்து நிறைவேறும்படி பரமாத்மாவான அல்லா ஹீத்த ஆலா அருள் புரிவாராக.*

* முற்கூறிய நூல், பக். 281 – 290.

மணியாச்சியில் ஆஷ் கொலை

*ராபர்ட் வில்லியம் டி எஸ்கார்ட் ஆஷ் எனும் திருநெல்வேலி ஜில்லா ஆக்டிங் கலெக்டரை செங்கோட்டையைச் சேர்ந்த விடுதலை வீரன் வீரவாஞ்சி 1911 சூன் 17-இல் மணியாச்சியில் சுட்டுக் கொன்றார். பாரதி புதுச்சேரியில் தஞ்சம் புகுந்தார். 20.11.1918 அதிகாலையில் பாரதி தன் மனைவி, மைத்துனர் ஆகியோருடன் புதுவை எல்லையைக் கடந்து வரும்போது திருப்பாதிரிப்புலியூரில் கைது செய்யப்பட்டார். பின்னர் கடலூர் நீதிபதி முன் ஆஜர் படுத்தப்பட்டு, சிறை வைக்கப்பட்டார். 14.12.1918-இல் விடுதலை செய்யப்பட்டார்.**

15.12.1918

*15.12.1918-இல் திருநெல்வேலி மாவட்டம் கடையத்திற்கு., தனது துணையியாரான செல்லம்மாளின் ஊருக்கு வந்த பாரதி தனது மைத்துனர் கே.ஆர். அப்பாத்துரை வீட்டில் தங்கினார்.**

முஸ்லிம் நண்பர்கள்

கடையத்தில் பாரதி வாழ்ந்த போது ரவணசமுத்திரத்தைச் சேர்ந்த சில முஸ்லிம் நண்பர்கள் இஸ்லாம் மார்க்கத்தின் பெருமையைப் பற்றி தங்களது ஊரில் ஒரு பிரசங்கம் நடத்துமாறு பாரதியை வேண்டிக் கேட்டுக் கொண்டார்கள்.

07.03.1920

ரவணசமுத்திரம் சின்னப் பள்ளிவாசலுக்கு எதிரே 07.03.1920 ஞாயிற்றுக்கிழமையன்று, ‘இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை’ என்ற தலைப்பில் பாரதி பேசினார்.

ஆண்களும், பெண்களும், முதியோர்களும், இளையோர்களும், குழந்தைகளுமாக நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கூடியிருந்தனர்.

---

* செ.திவான், பாரதியும் காங்கிரசும், சுஹைனா பதிப்பகம், பாளையங்கோட்டை, 1998, பக். 25 – 28.

நிகழ்ச்சி துவங்குவதற்கு முன்பு மௌலவி திருகுர்ஆன் வசனங்களை ஓதினார்.

ஹாஜி முஹம்மது மீரான் ஸாஹிப்

கூட்டத்திற்கு ரவணசமுத்திரம் ஹாஜி முஹம்மது மீரான் ஸாஹிப் தலைமை தாங்கினார்.

அந்தக் கூட்டத்தில் மகாகவி பாரதி உரையாற்றினார். 18.03.1920 சுதேசமித்திரனில் பக்கங்கள் 7, 8-இல் வெளிவந்துள்ள அவரது உரை இதோ . . .

இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை

ஹாஜி ஸாஹப்! ஸபையோர்களே!

இன்றைய உபந்யாஸத்துக்கு 'இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை' என்று மகுடஞ் சூட்டியிருப்பது அத்தனை பொருத்தமுடையதன்று. வெறுமே 'இஸ்லாமின் மகிமை' என்று பெயர் சொல்வதே பொருந்தும். ஏனென்றால், இஸ்லாம் என்பது ஒரு தனி வகுப்பினருக்குரிய கொள்கை அல்லது மதத்தைக் குறிப்பிடுவதன்று.

'இஸ்லாம்'* என்ற அராபிய மொழிக்கு 'பக்தி' என்பது பொருள். ஆதலால், இஸ்லாம் உலக முழுமைக்கும் பொதுவானது. இஃதொரு ப்ரத்யேகமான மார்க்கத்தை மட்டுங் குறிப்பதன்று. முக்திக்கு எல்லா மதங்களும் பக்தியை வழியாகக் காட்டுகின்றன. எனினும், வேறு சில மதங்கள் ஞானத்தையும், சில மதங்கள் வைராக்யத்தையும், வேள்விகளையும் அங்கங்கே பக்திக்கு நிகரான உபாயங்களாகவும், சில இடங்களில் பக்தியைக் காட்டிலும் சிறந்த உபாயங்களாகவும் கருதுகின்றன.

பவுத்த மதம் ஜீவகாருண்யத்தை அழுத்திச் சொல்லுகிறது. வேதாந்தம் ஞானத்தைப் பெரிதாகக் காட்டுகிறது. கிறிஸ்து மதம் அன்பை முக்கியமாகச் சொல்லுகிறது. பக்திக் கொள்கை எல்லா மதங்களுக்கும் பொதுவாயினும், வேறு தர்மங்களையும் தனித்தனியே பரம ஸாதனங்களாகக் காட்டும் மதங்கள் பல.

* இஸ்லாம் – சாந்தி

வைஷ்ணவம், இஸ்லாம் முதலிய சில ஸமயங்கள் மாத்திரமே மற்றெல்லா உபாயங்களைக் காட்டிலும் முக்தி பெறுவதற்குச் சிறந்த உபாயம் தெய்வ பக்தியே என்று உணர்த்தும் இயல்புடையன. **இவற்றுள் இஸ்லாம் ஒன்றுதான் சுத்தமான பக்தி என்னும் பெயரையே கொண்டு நிலவுகின்றது.**

இந்த இஸ்லாமின் பெருமையைப் பற்றிப் பேசப்படுவதன் முன்னே இதைப் பூமண்டலத்தில் ஸ்தாபனஞ் செய்த பரமாசார்யராகிய முஹம்மது நபியின் சரித்திரத்தை மிகவும் சுருக்கமாக எடுத்துச் சொல்லுகிறேன்.

அரபி தேசத்தின் முக்ய நகரமாகிய மக்கா நகரத்தில், கி.பி. 570-ம் வருஷத்தில் ரபீயுல் அவுல் மாஸத்தில் 12-ந் தேதி திங்கட்கிழமை இரவில் மண்டலத்து பக்தர்கள் அனைவரிலுஞ் சிறந்தவராகிய முஹம்மது நபி பிறந்தார். பூமண்டலத்து பக்தர்களிலே முஹம்மது சிறந்தவரென்று நான் எங்ஙனம் கூறத் துணிந்தேன் எனில், என்னுடைய சொந்த அபிப்பிராயத்தை நான் சொல்லவில்லை. அந்தந்த ஆசார்யர் தத்தம் இயல்பைக் கூறியபடியே நானும் நம்புகிறேன்.

வெவ்வேறு மதங்களின் ஸ்தாபகர்களைக் கவனிக்குமிடத்தே புத்தர், தமது பெயரின் குறிப்பின்படி, தம்மை உலகத்துக்குள் மிக உயர்ந்த ஞானியாக வெளிப்படுத்திக் கொண்டார். ஸர்வ ஸமய ஸமரஸவாதியும், எல்லா மதங்களிலும் நம்பிக்கையுடையவனுமாகிய நான் புத்தரை அவர் கூறியபடியே ஞானிகளிற் சிறந்தவராகக் கருதுகின்றேன்.

யேசு கிறிஸ்து தாம் கடவுளுடைய குமாரனென்று கூறினார். ஸ்ரீ கிருஷ்ணன் தாமே கடவுளின் அவதாரமென்று சொன்னார். வேறு எத்தனையோ ஞானிகளும், பக்தர்களும் தம்மை ஸாதாரண ஞானிகளாகவும், பக்தர்களாகவும் வெளிப்படுத்திக் கொண்டனர். **முஹம்மது நபியொருவரே தாம் பக்தர்களுக்குள்ளே மேம்பட்டவரென்றும், பக்தியின் மூலமாக உலகத்தாரை அல்லாவின் திருவடிக் கமலங்களிலே சேர்க்கும் பொருட்டுத் தம்மை அல்லா வழிகாட்டியாக**

நியமித்திருக்கிறாரென்றும் சொன்னார். அதே மதிப்புத்தான் நானும் போடுகிறேன்.

முஹம்மது நபியின் தந்தைக்குப் பெயர் அப்துல்லா; அவருடைய மாதாவின் பெயர் அமீநா.* இவர்கள் குரோஷி என்ற ஜாதி**யைச் சேர்ந்தவர்கள். இந்த ஜாதியார் விக்ரஹாராதனத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்களிலே முகம்மது நபியின் குலத்தார் மகமதுக்குத் தலைமைப் பூஜாரிகளும் குருக்களுமாக விளங்கினர். முகம்மது தாயின் கர்ப்பத்திலிறங்கி ஆறு மாஸத்துக் கருவாக இருந்த காலத்திலேயே இவருடைய பிதாவாகிய அப்துல்லா இறந்து போய்விட்டார். எனவே, நமது நபி சிறிது காலம் தம்முடைய பாட்டனாருடைய போஷிப்பிலிருந்தார். பிறகு பெரிய தகப்பனாராகிய அபூதாலிபால் வளர்க்கப்பட்டார்.

இளம் பிராயத்திலேயே இவருக்கு வியாபாரத் துறையில் மிகுந்த ருசி ஏற்பட்டது. அரபியா முழுதும் பாலைவனங்கள் நிறைந்த தேசம். ஆதலால், வியாபார யாத்திரைகளெல்லாம் பாலைவனங்களிலேயே செய்ய வேண்டும். ஸமீபமான இடங்களுக்குத் தனியே ஒட்டகையின் மீதேறிப் போய் வரலாம். தூரமான பிரதேசங்களுக்குப் பெரிய பெரிய வியாபாரக் கூட்டத்தார் சேர்ந்து போவார்கள். ஒட்டகைகளின் மீது ஸாமான்களை ஏற்றிக் கொண்டு வியாபாரிகள் தாமும் அவற்றின் மீதேறிக் கொண்டு போவார்கள்.

அவற்றின் பெயரை உச்சரித்த நாவிலும் ஈரப்பசை இல்லாமல் வறண்டு போகும்படி அத்தனை உஷ்ணமான கொடிய பாலைவனங்களில் நாட்கணக்காகவும், மாஸக்கணக்காகவும் யாத்திரை செய்ய நேரும். இடையிடையே சில திட்டுக்கள், சில திடர்கள் இருக்கும். அவற்றில் ஓரிரண்டு நீர்ச்சுனைகளும், ஈச்ச மரங்களும் இருக்கும். இந்த வியாபாரிகள் அப்படிப்பட்ட திட்டுக்கள் கிடைத்தால் அவற்றிலிறங்கிப் பேரீச்சம்பழத்தை யதேஷ்டமாக உண்டு, பின்னும் யாத்திரைக்கு அவசியமான

---

* அமீநா – ஆமினா

** ஜாதி – வமிசம்

பழங்களும் ஜலமும் சேகரித்துக் கொண்டு அப்பாற் செல்வார்கள்.

வாரக்கணக்காகவும், மாஸக் கணக்காகவும் திட்டுக்களே அகப்படாமல் ஒரே கொடும் பாலையாய் நீண்டு செல்லும் வழிகளிலே, இவர்கள் ஒட்டகைகளைக் கொன்று அவற்றின் சதையைத் தின்பார்கள். அவை தம் வயிற்றுக்குள் நிரப்பி வைத்திருக்கும் நீர்ப் பைகளைக் கிழித்து, அவற்றிலிருந்து ஏராளமாகக் கிடைக்கும் சுத்த ஜலத்தைக் குடிப்பார்கள்.

நாணயஸ்தர்

இப்படிப்பட்ட பயங்கரமான யாத்திரைகளிலே அடிக்கடி முகம்மது நபி சென்று மிகுந்த கீர்த்தியும், லாபமும் எய்தினார். **இவர் மிகவும் ஸௌந்தரமான புருஷர். பண விஷயங்களில் பரம நாணயஸ்தர். வியாபாரத்திலே மஹா நிபுணர்.**

இத்தனை நல்ல அம்சங்கள் கலந்து வாய்க்கப் பெற்ற இந்த இளைஞரைத் தம்மிடம் கார்யஸ்தராகக் கொண்டால் தமக்கு நல்ல லாபம் கிடைக்குமென்று கருதி, அந்த நகரத்தில் பெரிய சீமாட்டியாக விளங்கிய கதீஜா பீவி என்பவர் இவரைத் தம்முடைய குமாஸ்தாவாக வைத்துக் கொண்டார். அவருக்காக இவர் பாலைவனங்களைக் கடந்து வியாபாரங்கள் செய்தார். அந்த ஸமயங்களில் இவர் வெளிநாடுகளிலே பல பௌத்த ஸந்யாஸிகளையும், கிறிஸ்து மதஸ்தரையும், யூத வித்வான்களையும் கண்டு அவ்வவர் மதக்கொள்கைகளை ஆராய்ந்துணர்ந்தார். **எங்கும் நிறைந்து, எல்லாம் தானாய், எப்போதும் இருப்பவனாய் எல்லாத் தொழில்களும் தானே செய்யும் அல்லா ஒருவன் இருக்கிறானென்று நிச்சயித்தார்.** தம்முடைய மூதாதைகளின் விக்ரஹாராதனக் கொள்கைகளிலே நம்பிக்கையிழந்து விட்டார்.

மேலும், இவர் தனியாக நள்ளிரவு நேரங்களில், நிலா வேளைகளிலே, ஒட்டகையின் மீதேறிக் கண்ணெட்டுமளவும், மேகமற்ற வானமும், தீப்பொழியும் நிலாவும், வயிரப்பொடிகள் போலே சுடரும் ஒரே பெரிய மைதானமாகிய

மணற்பரப்புமன்றி வேறெவ்வித வடிவமும் தோன்றாமல் தம்முடைய ஒட்டகையின் காலடி ஓசையைத் தவிர வேறெவ்வித ஓசையுங் கேட்காமல், செல்லும் சமயங்களிலே கடவுள் இவருக்குப் பலமுறை தரிசனமருளினார்.

இதனிடத்தே, இவர் வியாபாரத் தொழிலிலும் மஹா ஸமர்த்தராக விளங்கினார். இவருடைய குணாதிசயங்களைக் கண்டு வியப்பெய்திய இவருடைய யஜமானியாகிய ஸ்ரீமதி - கதீஜா பீவி இவரைத் தனக்கு நாயகனாகும்படி வரித்தாள். அவளுடைய மேன்மையான குணங்களையும், அற்புதமான அழகையும், நிகரற்ற தெய்வ பக்தியையும் கண்டு மனமகிழ்ந்து முஹம்மது நபி அலைகி வஸல்லம் அவர்களும் அந்த மாதை மணம் புரிய உடம்பட்டார். இந்த மஹா புண்யமான திருமணம் நடக்கையிலே நபியாண்டவருக்கு வயது இருபத்தைந்து; கதீஜா பீவிக்கு நாற்பது வயது.

முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைகி வஸல்லம்) அவர்கள் ஒருநாள் ஹீரா என்ற மலையின் மேல், தவஞ் செய்து கொண்டிருக்கையிலே, ஜிப்ரியீல் என்ற தேவதூதன் வந்து, 'நீர் உம்முடைய நாயகனாகிய அல்லாவின் நாமத்தைத் துதித்து, அவனுடைய வாசகமாகிய குர்ஆன் வேதத்தை ஓதும்' என்று வேண்டியருளினார்.

அல்லாவினால் அனுப்பப்பட்ட நபி

'நான் அதிகப் படிப்புத் தெரிந்தவனல்லேன்' என்று சொல்லி நபியாண்டவர் மூன்று தரம் மறுத்தார். ஜிப்ரியீல் அப்போது தம்முடைய நெஞ்சை ஆண்டவரின் நெஞ்சத்தின் மீது வைத்தழுத்தினார். அதினின்றும் தேவஞானம் பெற்று நபியாண்டவர் தம்முடைய நாற்பதாம் வயதில் தாம் அல்லாவினால் அனுப்பப்பட்ட நபியென்பதை உலகமறிய ப்ரசித்தப்படுத்தினார். இதை உடனே அங்கீகாரம் செய்து கொண்டவர்கள் ஆண்டவனுடைய பத்தினியாகிய கதீஜா பீவியும் மருமகனாகிய அலியும் பிறரும்.

இதில், அலி அங்கீகாரம் செய்து கொண்டதை கதை மிகவும் ஆச்சர்யமானது. **(குறிப்பு: இந்தக் கதைக் குறிப்புக்களும், பிறவும் நான் ஆங்கிலேயரின் எழுத்துக்களில் படித்ததினின்றும் ஞாபகத்தால் எழுதப்படுவனவாதலால், இவற்றில் பல தவறுகளும், மாறுதல்களும் இருக்கக்கூடும். ஆனால், கதையின் முக்யாம்சங்களிலேயும், நபியவர்களின் குண விஸ்தாரங்களிலும் தவறுதலிராது)**

கடவுள் ஒருவரே

மக்காவிலே ஒரு திருவிழாக் காலமாம். அப்போது அங்கே பெரிய குருக்கள் சங்கம் கூடிற்றாம். அந்த ஸங்கத்தில் முக்கியஸ்தர் நபியின் குலத்தவரேயாவர். அந்த ஸபையில் முஹம்மது நபி எழுந்து, விக்ரஹாராதனத்தைக் கண்டித்து சுத்த சைதன்ய ரூபமாகவே கடவுளைப் போற்ற வேண்டுமென்றார். **கடவுள் ஒருவரே யாதலால் பல தேவர்களை வணங்கக் கூடாதென்றார்.** இஸ்லாம் என்ற ஆழ்ந்த பக்தியினாலே அந்தக் கடவுளை உபாஸனை செய்ய வேண்டுமேயல்லாது உயிர்ப் பலிகளிட்டுச் செய்யும் மூடத்தனமான பூஜைகளாலும், பக்தியின்றிச் செய்யப்படும் வீண் புறச் சடங்குகளாலும் அல்லா திருப்தியடைய மாட்டாரென்றும் சொன்னார்.

இந்தப் புதிய கொள்கையை ஜனங்களுக்குச் சொல்லி அவர்களைப் பழைய தவறுதல்களினின்றும் நீக்கி நற்கதி சேர்ப்பிக்கும் பொருட்டுத் தம்மை 'ரஜூல்'* அல்லது விசேஷ தூதனாக அல்லா அனுப்பியிருக்கிறாரென்று தெரிவித்தார். இதைக் கேட்டு அந்த ஸபையில் கூடியிருந்த குருக்களும், பழைய பூஜைகளையே வயிற்று ஜீவனத்துக்கு வழியாகக் கொண்டிருந்த பூஜாரிகளும் பிறரும் இவர் பைத்தியங் கொண்டு பேசுகிறாரென்றெண்ணிக் கொல்லென்று நகைத்தார்கள். அப்போது நபியின் மருமகனாகிய அலி ஸபையின் முன்னே எழுந்து நின்று, 'மாமா, உம்முடைய புதிய

---

* ரஜூல்— ரஸூல்

மதத்தில் வேறு யார் சேர்ந்தாலும் சரி; சேராவிட்டாலும் சரி, நான் சேர்கிறேன்' என்றார்.*

ஒருவன் தன்னை விசேஷ ஞானியென்றும், ஈசுவரனுடைய முக்ய பக்தனாய் உலகத்தாரைக் காப்பாற்றும் பொருட்டுக் கடவுளால் தெரிந்தனுப்பப்பட்ட 'ரஜு'லென்றும் தன்னை முன்னறியாத அன்னியர் நம்பும்படி செய்தல் எளிது. ஆனால், எப்போதும் தன்னுடனே இருந்து பழகும் பந்துக்களை நம்பும்படி செய்தல் மிகவும் அரிது.

ஒருவன் ஜ்வரம் வந்து வாந்தியெடுக்கும்போதும், கடனாளிகளிடத்தில் விவகரிக்கும் போதும், கோபதாபங்களுக்கிடமான குடும்ப விவகாரங்களில் ஈடுபட்டு வேலை நடத்துகையிலும், ஒருவனுடைய **பக்கத்திலேயேயிருந்து அவன் குணங்களையும், சொற்களையும், செயல்களையும் கவனித்து வந்திருக்கும் ஸமீப பந்துக்கள் அவனை நிகரற்ற ஞானியாகக் கருதும்படி செய்தல் மிகவும் மிகவும் மிகவும் அரிது.** இது பற்றியே இங்கிலீஷ் பாஷையிலே 'தன் சொந்த தேசத்தில் எவனுக்கும் தீர்க்கதரிசியென்ற பெயர் வாங்குதல் அரிது' என்றொரு வசனம் ஏற்பட்டிருக்கிறது.

பக்தியும் நேர்மையும் உண்மையானவை

மற்ற பந்துக்கள் ஒப்புக்கொண்ட போதிலும், ஒருவனுடைய சொந்த மனைவி அவனைத் தெய்வ சக்திகளுடையவனென்றும் அங்கீகரித்தல் மஹா துர்லபம். ஏனென்றால், ஒருவனிடமுள்ள குற்றங் குறைகளெல்லாம் மற்றவர்களுக்குத் தென்படுவதைக் காட்டிலும் பெண் ஜாதி பக்கத்திலேயே ஸதா இருப்பவளாதலால் அவள் கண்ணில் ஆயிர மடங்கு அதிகமாக வந்துறுத்தும். எனவே, **முஹம்மது நபியின் நபித்தன்மையை முதன் முதலாக அவருடைய மனைவியும் மருமகனும்**

---

* இந்த வரலாறு இவ்வாறும் உள்ளது. அண்ணலார் (ஸல்) அவர்களும், அன்னை கதீஜா (ஒலி) தரையில் தலையை வைத்து சுஜூது நிலையில் இறைவனை வணங்கிக் கொண்டு இருப்பதைக் காண்கிறார்கள். பிறகு அண்ணலாரின் அறிவுரையை ஏற்று சிந்தித்து இஸ்லாத்தை தழுவிக் கெண்டார்கள். இளைஞர்களிலேயே இஸ்லாத்தை முதன் முதலில் தழுவியவர் அலி (ரலி) ஆவார்.

அங்கீகாரம் செய்து கொண்டது, பூமண்டல சரித்திரத்திலேயே மிகவும் ஆச்சரியமான செய்திகளிலொன்றாம். இதினின்றும் அவருடைய மஹிமையும் பக்தியும் நேர்மையும் எத்தனை உண்மையானவை என்பது வெளிப்படுகிறது.

அப்பால், முஹம்மது நபி குரான் வேதத்தைப்* பகுதி பகுதியாக வெளிப்படுத்தலானார். குரான் வேதம் 114 ஸூராக்கள் அல்லது அத்யாயங்களுடையது. இவை ஈசனருளாலே பிறந்து யோகத்தினாலே தூய்மையடைந்த முஹமது நபியின் அறிவிலே பிரதிபலித்து, நபியால் வெளியிடப்பட்டன. இவற்றின் கவிதையிலேயே உயர்ந்த தெய்வ சக்தி விளங்குகிறது.

அரபி பாஷையிலேயே முஹம்மது நபியின் வாக்கைப் போல் ஆச்சரியத் தன்மையும், அழகுமுடைய கவிதை வேறு கிடையாது. ஒரு ஸமயத்தில் மக்கா நகரத்திலே முஹம்மது நபியிடம் பொறாமை கொண்டவனாகிய ஒரு பெரிய புலவன் இவருடைய கவிதை ஸாதாரண மனிதக் கற்பனையேயன்றி, தெய்வ அருளால் வெளிப்பட்டதென்று சொல்வதற்கு யாதொரு ஆதாரமுமில்லை என்று சொன்னான்.

இதைக் கேட்ட நபியின் சீடர்கள், 'முஹம்மது நபியோ அதிகமான கல்விப் பயிற்சியில்லாதவர். இந்த மக்கா நகரத்திலே அபாரமான கல்வியுடைய வித்வான்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களில் எவனேனு மொருவன் குரானிலுள்ள கவிதையைப் போல நான்கு வரி பாடிக் கொடுத்தானாயில், பிறகு நாங்கள் நபியினுடைய வாக்கு தெய்வவாக்கில்லாமல் ஸாதாரண மனித வாக்கேயென்று அங்கீகாரம் செய்து கொள்வோம்' என்றார்கள்.

குரான் தமிழில் இல்லையே!

இந்தக் குரான் வேதத்திலே வைதீகக் கிரியைகள், லௌகிக தர்மங்கள், ஏவல் விலக்குகள், வணக்கத்தின் இயல்பு, முன் நபிகளின் சரித்திரம், கூர்மை யுபதேசங்கள், ஞானம், பக்தி -

* அல்லாஹ்வின் அருளால் (பதிப்பாசிரியர் குறிப்பு)

இவற்றின் விவரங்கள், ராஜ தண்டனை விதிக்கும் நியமங்கள், பங்கு பாக ஒழுங்கு; விவாக தர்மம், ஸ்திரீ - புருஷர் நடக்க வேண்டிய முறைகள் ஆக ஒன்பது பகுதிகள் சேர்ந்திருக்கின்றன.

இந்நூல் பார்ஸி, மலாய், உருது, லத்தீன், ப்ரெஞ்ச், இ.ங்கிலீஷ், ஜெர்மன் முதலிய அனேக பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. **தமிழில் குரானுக்கு இதுவரை ஒரு மொழிபெயர்ப்பில்லாமலிருப்பது தமிழ்ப் பாஷைக்கே ஒருனமென்று கருதுகிறேன்.*** இது நிற்க.

இங்ஙனமிருக்கையிலே முஹம்மது நபியின் புதிய கொள்கை மக்கத்தில் மேன்மேலும் பரவித் தலைதூக்கி வருவதைக் கண்டு, இதனால் புராதனமான அராபிய மதத்துக்கு பங்கமும், அதன் பூஜாரிகளுக்கும், குருக்களுக்கும் கஷ்டமும் விளையுமென்றஞ்சிப் பல குருக்கள் செய்த போதனைக்கிணங்கி மக்கநகரின் அதிபதி கி.பி. 622-ல் முஹம்மது நபியையும், அவருடைய சீடர்களிற் சிலரையும் பிடித்தடைக்கும்படி உத்தரவிட்டான்.

அப்போது முஹம்மது நபியானவர் அல்லாவின் கட்டளையையும், சில ஆப்த நண்பர்களின் வேண்டுகோளையும் அனுஸரித்து யாவருமறியாமல் ரஹஸ்யமாக ஒரே ஒரு சீடனுடன்** மக்கத்திலிருந்து புறப்பட்டு மதினா நகரத்துக்குப் போனார். மதினா நகரம் வேறொரு அரசனுடைய ஆட்சியின் கீழ் இருந்தது.

எந்தத் தீங்கும் வராது

மக்கத்திலிருந்து நபி புறப்பட்டு விட்டாரென்ற செய்தி தெரிந்த பின் மக்கத்தின் அதிபதி அவரைத் தொடர்ந்து சென்று பிடித்துக் கொண்டு வரும்படி சில குதிரைச் சேவகர்களை அனுப்பினான். குதிரைச் சேவகர்கள் ஸமீபத்தில் வருவதைக்

---

* பாரதியின் கனவு, 1929–இல் நிறைவேறியது. முழு விவரங்களை அறிய செ.திவான் எழுதிய திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள் (1995) நூலைக் காண்க.

** ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்திக் (ரலி) அவர்கள்.

கண்ட நபியும் அவருடைய சீடனும் அந்தக் காட்டுப் பாதையில் ஒரு மரத்தடியிலிருந்த பொந்துக்குள் ஒளிந்து கொண்டனர்.

அப்போது குதிரையின் காலடிச் சத்தம் இவர்களுக்கு மிகவும் நெருக்கத்திலே வந்துவிட்டது. சீடன் பதறிப் போய் ‘ஐயையோ, நாம் இந்தப் புதரில் பதுங்கியிருப்பதை அவர்கள் தெரிந்து கொண்டனர். காலடிச் சுவடு பார்த்து அவர்கள் இந்த இடத்துக்குத்தான் வருகிறார்கள். நாம் அவர்களிடம் கட்டாயமாக அகப்பட்டுக் கொள்ளத்தான் போகிறோம். நம்மைப் பிடித்துக்கொண்டு போய் என்ன தண்டனை விதிப்பார்களோ!’ எனத் தேம்பி அழுதான்.*

அப்படிப்பட்ட நெருக்கடியில் முஹம்மது நபி சிறிதேனும் தைரியம் குறையாமல், பக்தி மங்காமல் அவனை நோக்கி, ‘அப்பா, நீ ஒன்றுக்கும் பயப்படாதே. இந்த உலகத்தில் ஒரு பெரிய தர்மத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு என்னை அல்லா அனுப்பியிருக்கிறார். அந்தக் காரியம் நிறைவேறும் வரை எனக்கு யாதொரு தீங்கும் வராதபடி ஈசன் காப்பாற்றுவார். நீயும் இப்போதென்னுடன் இருக்கிறாய். ஆதலால், உனக்கும் எவ்விதமான ஆபத்தும் நேராது. நீ வீணாகப் பயந்து கூவாதே’ என்று அவனுக்குத் தேறுதல் சொல்லியருளினார்.

சிறிது நேரத்துக்குள் குதிரைச் சேவகரின் கூட்டம் அந்தப் புதருக்கருகே வந்து நின்றது. ஒரு சிப்பாய் சொன்னான்: ‘அடே, அவர்கள் இந்தப் புதருக்குள் ஒருவேளை புகுந்திருக்கக்கூடும். அப்பால் போவதன் முன்பு இங்கு தேடிப் பார்ப்போம்’ என்றான்.

அப்போது அந்தச் சேவகர்களின் தலைவன் சொன்னான்: ‘போடா பரம மூடா, அவர்கள் பெரிய வீரர்கள். வாயு வேகம், மனோ வேகமாகப் பறந்து போகிறார்கள். நாம் இப்படி வழி நெடுக நின்று நின்று தூங்கிக் கொண்டே போனால் அவர்களைக் கண்டுபிடிக்கவே முடியாது. ஆதலால், இங்கு நின்றுகொண்டு வீண் வார்த்தையாடுவதில் பயனில்லை. ஏறு, மேலே போ!’ என்று உத்தரவு கொடுத்தான்.

---

* என்று சொன்னார்கள்.

உண்மையான பக்தி

குதிரைச் சேவகர் அங்கிருந்து உடனே புறப்பட்டு மிகவும் வேகத்துடன் பறந்து விட்டனர். பிறகு நபியும் அவருடைய சீடனும் அப்புதரினின்றும் மெல்ல வெளியேறி மற்றொரு திசையை நோக்கிச் சென்று விட்டார்கள். இத்தனை மிடுக்கான **நிலையில் அகப்பட்டுக் கொண்ட போதிலும், தமக்கு எவ்விதமான ஆபத்தும் வருமென்ற அச்சம் சிறிதேனுமில்லாமல் தெய்வத்தை நம்பியதே முஹம்மது நபியின் விசேஷ லக்ஷணம். அதுவே உண்மையான பக்திக்கு அடையாளம்.**

அல்லாவை ஸாதாரண ஸமயங்களில் நம்பிவிட்டு, ஏதேனும் ஆபத்து வரும் ஸமயங்களில் அல்லாவிடம் நம்பிக்கையிழந்து மனத்தைப் பதறவிடுதல் உண்மையான பக்தியாக மாட்டாது. 'ஸம்சயாத்மா வருச்யதி - ஐயமுற்றான் அழிவுறுவான்'. பக்தியிலே சலனமுற்றவன் முக்தியடைய மாட்டான். சலனமில்லாத பக்தியே பக்தியென்னும் நாமத்துக்குரியது. மற்றது பக்தியே யாகாது.

அப்பால் முஹம்மது நபி (அலைகி வஸல்லம்) மதீனாவுக்குச் சென்றார். இவர் ம.க்கத்திலிருந்து மதீனாவுக்குச் சென்ற வருஷத்தை முதல் வருஷமாகக் கொண்டே இப்போது முஸல்மான்களுக்குள்ளே வழக்கத்திலிருக்கும் ஹிஜிரா சகாப்தம் கணக்கிடப்படுகிறது. அங்கு பல அற்புதங்கள் காட்டினார். அந்த நகரத்தரசனுள்பட ஏராளமான ஜனங்கள் அங்கே இவருக்குச் சீடராயினர். இவருடைய மதம் மதீனாவிலும் சுற்றுப்புறங்களிலும் மேன்மேலும் அபிவிருத்தி பெற்றோங்குவ துணர்ந்த மக்கத்துக் குரேஷிகள் இவர் மீது படைகள் விடுத்தனர். ஓரிரண்டு போர்களிலே முஹம்மது நபிக்குத் தோல்வி உண்டாயிற்று. அப்பால் இவருடைய கூட்டத்தார் போர்த் தொழிலுக்குரிய பயிற்சி அடைந்து விட்டனர். அதன் பிறகு இவருடைய சைந்யங்களுக்கு எங்கு சென்றாலும் வெற்றியே நேரலாயிற்று. **'எடுத்த காரியம் யாவினும் வெற்றி; எங்கும் வெற்றி, எதனிலும் வெற்றி'**

கோழைகூட மஹா வீரனாவான்

முஹம்மது நபியின் அற்புதமான பக்தி ரஸம் ததும்பிய வாக்யங்களைக் கேட்ட மாத்திரத்தில் மிகப்பெரிய கோழை கூட மஹா வீரனாய் விடுவான். *கி.பி. 627*-ஆம் வருஷத்தில் இவர் *1400*** ஜனங்களுடன் மக்க நகரத்தை நோக்கிப் புறப்பட்டனர். 629-ஆம் வருஷம் ரம்ஜான் மாஸத்தில் மக்கத்தைக் கைப்பற்றிக் கொண்டார். பிறகு தம்மையும் தமது மதத்தையும் அழிக்க முயன்ற சுற்றுநாட்டு மன்னர்களையெல்லாம் வென்று பெரிய ஸாம்ராஜ்யம் ஸ்தாபித்துச் சக்கரவர்த்தியாக விளங்கித் தர்மராஜ்யம் நடத்தினார்.

கி.பி. 632*** ஆம் வருஷம் ஜூன் மாஸம் 8-ம் தேதியன்று, தம்முடைய அறுபத்து மூன்றாம் பிராயத்தில் ஆலயத்திலிருந்து வந்தவுடனே இவருக்குக் காய்ச்சல் வந்தது. ரபீயுல் அவ்வல் மாஸம் 12-ந் தேதி திங்கட்கிழமையன்று பூதவுடம்பை விட்டு அல்லாவின் திருவடிக் கமலங்களிலே சேர்ந்து விட்டார்.

ஸஹோதரர்களே, தோட்டத்தில் முக்காற் பங்கு கிணறாகி விட்டது. இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமையைக் கூறுதற்கு ஒரு முகவுரையாக முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைகி வஸல்லம் அவர்களின் சரித்திரத்தைச் சொல்லத் தலைப்பட்டேன். அது நான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் சற்றே அதிக நீளமாய்விட்டது. இருந்தாலும் ஒருவாறு முகம்மது நபியின் சரித்திரத்திலேயே இஸ்லாமின் மூல தத்துவங்கள் பிரகாசப்படுகிறபடியால் நான் அதனை விரித்துரைத்தது விழலாக மாட்டாது. ஏனென்றால், இஸ்லாம் எனும் பதம் நான் மேலே சொல்லியபடி, பக்தி என்ற பொருளுடையது.

இந்த பக்தியின் மஹிமைக்கு முஹம்மது நபியின் சரித்திரத்தைக் காட்டிலும் சிறந்த திருஷ்டாந்தம் வேறு கிடையாது. நாகரிகமற்றுச் சிதறிக் கிடந்த அராபியர்

---

* ஹிஜ்ரி – 8.

** 1400 = 10000 தோழர்கள்

*** ஹிஜ்ரி – 11.

முஹம்மது நபியின் செய்கையால் பூமண்டல நாகரிகத்துக்கு வழிகாட்டிகளாயினர். அராபியர் அக்காலத்தில் ஸ்தாபித்த பயிற்சியே பின்னிட்டுத் தோன்றிய ஐரோப்பிய நாகரிகத்துக்குத் தாய்.

எக்காலத்திலும் இனிக்கும் பெருமை

இன்றைக்கும் இஸ்லாமுடைய ஒளி மங்கவில்லை. இனி, எதிர்காலத்தில் இஸ்லாம் மேன்மேலும் அதிக சக்தியும் மாண்பும் ஓங்கி வளருமேயன்றி, எக்காலத்திலும் இதன் பெருமை இனிக்குன்றாதென்பதற்கு எத்தனையோ உறுதியான அடையாளங்கள் தென்படுகின்றன.

இனி, ஜனத்தொகைக் கணக்குப்படி பார்ப்போமானால், இஸ்லாம் உலகத்துப் பெரிய மதங்களுக்குள்ளே மூன்றாம் ஸ்தானம் பெற்றிருக்கிறது. உலகத்தில் அதிகமான ஜனத்தொகையாரின் மீது ஆட்சி செலுத்தி வரும் மதங்கள் நான்கு. அவையாவன: ஹிந்து மதம், இஸ்லாம், கிறிஸ்து மதம், பவுத்த மதம் என்பவை. இவற்றுள் பவுத்த மதத்துக்கு ஜனங்கள் அதிகம்; அதுவே ஜனத்தொகை விஷயத்தில் முதல் ஸ்தானம் அடைந்தது. அதற்கடுத்தபடி கிறிஸ்துவம்; மூன்றாவது இஸ்லாம்; நாலாவது ஹிந்து மதம்.

ஆனால், பவுத்த மதம் பல பல கிளைகளாகி, ஒன்றுக்கொன்று ஸ்நாநப்ராப்தியில்லாமல் சிதறிக் கிடக்கிறது. சீனத்திலுள்ள பவுத்த மதத்துக்கும், ஜப்பானிலுள்ள பவுத்த மதத்துக்கும், திபத்திலுள்ளதற்கும், பர்மாவிலுள்ளதற்கும், இலங்கைத் தீவிலுள்ளதற்கும் ஒன்றுக்கொன்று ஸம்பந்தம் கண்டுபிடிப்பதே சிரமம்.

கிறிஸ்து மதமும் ஏறக்குறைய இதே நிலைமையிலேதானிருக்கிறது. இதில் சுமார் 250-க்கு மேலான உட் சமயங்களிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. முஹம்மது மதமும் இப்பொழுது பல பிரிவுகளுடையதாய் விட்டது. இதில் 937 வகுப்புகள்* ஏற்பட்டிருப்பதாகச்

---

* வகுப்புகள் – உட்பிரிவுகள்.

சொல்லுகிறார்கள். எனினும், இஸ்லாமில் மற்ற மதங்களைக் காட்டிலும் அதிக ஒற்றுமையிருப்பது ப்ரத்யக்ஷமன்றோ? **உலக முழுதிலும் இஸ்லாமியர் ஒரே கூட்டத்தார் என்ற உணர்ச்சி எல்லா முஸ்லீம்களின் மனத்திலும் மிக ஆழமாக வேரூன்றிக் கிடக்கிறது.** இஸ்லாம் ஒன்று; பிரிக்க முடியாதது.

ஸஹோதரத்வம்

மேலும், உலகத்திலுள்ள மற்றெல்லா மதங்களைக் காட்டிலும் இஸ்லாமில் ஸஹோதரத்வம் அதிகம். மற்ற மதஸ்தர்களெல்லாரும், 'நாம் அத்தனை பேரும் ஸஹேதரர்கள்' என்று வாயினால் மாத்திரம் சொல்லி வருகிறார்கள். முஸல்மான்கள் மட்டுமே ஆதி முதல் அதை அநுஷ்டானத்தில் நடத்தி வந்திருக்கிறார்கள்.

இன்றைக்கு அடிமையாக இருப்பவன் நாளைக்கு ராஜாவானதாக இஸ்லாமின் சரித்திரத்தில் கணக்கற்ற திருஷ்டாந்தங்கள் மலிந்து கிடக்கின்றன. ஜாதி வித்யாஸங்கள், ஏழை, செல்வன் என்பதைப் பற்றிய வேற்றுமைகள் - இவையெல்லாம் இஸ்லாம் என்ற தீயின் முன்னே சாம்பலாய் விடுகின்றன.

18-ம் நூற்றாண்டில் ப்ரான்ஸ் தேசத்தில் நவீன ஐரோப்பிய நாகரிகத்துக்கு ஆதாரமான மஹா ப்ரளயம் (பெரிய ஜன ஸமூகப் புரட்சி) ஏற்பட்டது. அப்போது உலகத்தைப் புதிதாகவும், அநியாயமற்றதாகவும், துன்பமற்றதாகவும் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் பாடுபட்ட அந்தப் புரட்சித் தலைவர்கள் 'ஸ்வதந்த்ரம்', 'ஸமத்துவம்', 'ஸகோதரத்வம்' என்ற மூன்று மந்திரங்களைக் கடைப்பிடித்தனர். அவையே இன்றைக்கும் ஐரோப்பிய நாகரிகத்துக்கு இலக்காகத் திகழ்கின்றன.

இவற்றுள் ஸகோதரத்வம் ஏற்பட்டால் அதினின்று ஸமத்வமும், அதினின்று ஸ்வதந்திரமும் தாமாகவே விளையுமாதலால், மனித ஜாதி மேன்மைப்படுவதற்குரிய நீதிகள் அனைத்திலும் ஸகோதரத்வமே மேம்பட்ட நீதியாம். இது

இஸ்லாம் மதத்தினாலேயே பிரதிஷ்டை செய்யப்பட்டது. மற்றெந்தக் கூட்டத்தாரினும் அதிகமாக முஸல்மான்களாலேயே ஆதரிக்கப்பட்டு வருகிறது.

இஸ்லாம் அல்லது பக்தி இரண்டு வகைப்டும்; 'ஈமான்' அல்லது நம்பிக்கை. 'தீன்' அல்லது உறுதி என; இவற்றுள் 'தீன்' இல்லாவிட்டால் 'ஈமான்' உபயோகப்படாது.

'தீன்' – (மார்க்கம்)

முன்பு நபியவர்களிடத்திலும், அவருடைய முக்ய சிஷ்யர்களிடத்திலும், மற்ற முஸ்லிம் ஸாதுக்கள், ஞானிகள், 'ஒலிமார்' என்ற சித்தர்கள் முதலியவர்களிடத்திலும் 'ஈமான்' எவ்வளவு மேம்பட்டிருந்ததோ அது போல், 'தீனு'மிருந்தது. இக்காலத்தில் முஸல்மான்களிடம் 'ஈமான்' அதிகமாகத்தான் இருக்கிறது. ஆனால், அதற்குத் தக்கபடி 'தீன்' இல்லை. 'நமாஜ்' (அல்லது ஜபம்), 'ஸத்காத்' (தானம்), உபவாஸம் முதலியனவற்றை மாத்திரமே 'தீன்' என்று இப்போதுள்ளவர்கள் நினைக்கிறார்கள். இவை மாத்திரமே 'தீன்' அல்ல.

பக்தியிலே நிச்சயம் தீன். ஸர்வ லோகங்களையும் படைத்துக் காப்பவரும், எங்கும் நிறைந்தவரும், எல்லாம் தாமே யானவரும், ஸர்வ சக்திகளுடையவருமாகிய அல்லா ஒருவர் இருக்கிறார். நாம் அவரைச் சரண் புகுந்தோமானால், அவர் நம்மை எல்லா விதமான துன்பங்களினின்றும், கஷ்டங்களிலிருந்தும், கவலைகளினின்றும், நோய்களினின்றும், மரணத்தினின்றும் மீட்டியருளுவார் என்ற நம்பிக்கையே ஈமானில் முக்கியமான அம்சம். இதை ஒரு க்ஷணங்கூட மறவாமல், எந்தத் தொழில் செய்து கொண்டிருந்தாலும், எந்த அவஸ்தை அல்லது லோகானுபவத்தில் அகப்பட்டிருந்த போதிலும் மாறாத ஆனந்தத்துடன் நிற்பதே உண்மையான 'தீன்'.

ஒருவனுக்கு வயிற்று நோவு வருகிறது. இந்த மனித சரீரம் கருங்கல்லால் சமைக்கப்பட்டதன்று. இரும்பினால்

செய்யப்பட்டதன்று; தோல், சதை, எலும்புகளால் செய்யப்பட்டிருக்கிறது. இதில் மிகவும் நுட்பமான உணர்ச்சி கொண்ட நாடிகள் வ்யாபித்திருக்கின்றன. எனவே, உணவு, உடை, தொழில், காற்று முதலியவற்றில் மிகவும் இலேசான மாறுதல் ஏற்பட்ட போதிலும் இந்த உடம்பில் இலேசான நோவுண்டாகிறது. ஜீர்ணத் தொழில் மிகவும் மேன்மையான கருவிகளைக் கொண்டு நடைபெறுகிறது.

ஆதலால், இவ்வுடம்பில் ஏற்படும் சிறிய நோவுகள் இயற்கையிலேயே நீங்கிவிடுமென்று கருதி அவற்றைப் பொறுத்துக் கொண்டு ஸந்தோஷத்துக் கிடமானவையும் நோயை மறக்கடிக்கத்தக்கனவுமாகிய விருத்திகளிலே மனத்தைப் புகுத்துதல் அறிவாளிகளின் கடமை. அவ்வாறின்றி ஒரு நோய் வந்த மாத்திரத்திலேயே நாம் செத்துப் போவோமென்ற வீண் பயங்கொண்டு மனத்தைப் பதற விடுதல் பெரும் பேதமையாம்.

வியாதிகளால் மனிதர் சாவதில்லை. வியாதிகளைப் பற்றிய பயத்தினால் சாகிறார்கள். பயத்தினாலேதான் வியாதிகள் அதிகப்படுகின்றன.

பக்தியுடையவன் பயப்பட மாட்டான்

அல்லாவிடம் உண்மையான பக்தியுடையவன் எதற்கும் பயப்பட மாட்டான். ஒருபோதும் பயப்படமாட்டான். எதற்கும் கவலையுற மாட்டான். ஒருகாலும் கவலையுற மாட்டான். ஒருவன் உண்மையான பக்தியுடையவனா என்று கண்டுபிடிப்பதற்கு இதுதான் வழி. அவன் எப்போதும் சந்தோஷத்துடன், கவலையில்லாமல், அமைதியுடன் இருக்கிறானா? அவன் முகம் எப்போதும் தெளிவாகவும் ப்ரஸந்நமாகவும் இருக்கிறதா? *என்று பார்க்க வேண்டும். அப்படி இருந்தால் மெய்த் தொண்டன். அழுமூஞ்சியும், கவலைக் கிரையானவனும் பக்தி கொண்டாடினால், அவனுடைய பக்தி உறுதியற்றதென்று தெரிந்து கொள்ள வேண்டும். இந்த உலகத்திலேயே எல்லாத் துன்பங்களும் மரணமும் நீங்கி வலியை அறுத்தெறிந்து மனிதர் தேவர்களைப்*

போல் வாழ மாட்டாமையின் காரணம் பக்திக் குறைவேயன்றி, வேறில்லை.

மேலும், உண்மையான பக்தன் தன்னுயிரில் அல்லா கொலு வீற்றிருப்பது போலவே மற்ற உயிர்களிலும் அவன் நிறைந்திருப்பதால் எல்லா ஜீவர்களும் ஈசுவரனுடைய கலைகளென்றும், ஆதலால் எல்லா உயிர்களும் ஒன்றுக்கொன்று சமானமென்றும் தெரிந்து கொள்ள வேண்டும். அதனின்றும் எல்லா ஜீவர்களிடத்திலும் தீராத அன்பும் பக்தியும் செலுத்த வேண்டும். ஸ்த்ரீகளைத் தாழ்வாக நினைக்கக் கூடாது. ஏக பத்நி விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். மாம்ஸ போஜனம் செய்யக் கூடாது.*

பாரதமாதா நெஞ்சாரத் தழுவிய இஸ்லாம்

ஹிந்துக்களுடைய வேதத்திலும் எத்தனையோ வழிகள் காட்டப்பட்டபோதிலும், எல்லாவற்றைக் காட்டிலும் சிறந்த முடிவான வழி பக்தியே என்று சித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. **இக்காரணம் (பற்றியே) இஸ்லாம் மார்க்கம் இந்தியாவில் ப்ரவேசித்தபோது அதை பாரத மாதா நெஞ்சாரத் தழுவிக் கொண்டாள். இங்ஙனமின்றி இஸ்லாம் மார்க்கம் வெறுமே கொலைத் திறமையால் இந்தியாவில் ஸ்தாபனம் பெற்றதாகச் சிலர் கருதுகிறார்கள். இது மிகவும் தப்பான எண்ணம்.**

திருஷ்டாந்தமாக, அக்பர் சக்ரவர்த்தி காலத்திலேதான் இஸ்லாம் மார்க்கம் இந்தியாவில் வேரூன்றிற்று. அவரோ தம்முடைய முக்ய மந்திரிகளாகவும், ஸேனாதிபதிகளாகவும் ஹிந்துக்களை நியமித்திருந்தார். ஹிந்து வேத சாஸ்த்தரங்களில் அளவில்லாத அபிமானங் கொண்டிருந்தார். அவர் எத்தனை தூரம் ஹிந்துக்களிடம் அன்பு வைத்திருந்தாரெனில், மஹமதியர்களிலே முரட்டு பக்தியுடைய சிலர் அவரை உண்மையான முஸல்மானில்லையென்றுகூடத் தூக்ஷிக்கத் தலைப்பட்டார்கள். அத்தனை தூரம் அவர் ஹிந்து மதத்தில் அபிமானம் செலுத்தினார்.

---

* இதில் மாற்றங்கள் உள்ளது.

தவிரவும், இந்தியாவில் அப்போது தலைமை பெற்றிருந்த மார்க்கங்களுக்குள்ளே வைஷ்ணவ மதம் தனது பக்தி தர்மத்தாலும், சரணாகதி தர்மத்தாலும் இஸ்லாமுக்கு அதிக நெருக்கமுடையதாக இருந்தது. ஆதலால் இவ்விரு மதங்களும் மிகவும் கலப்பெய்தின.

கபீர் முதலிய பக்த சிரோன்மணிகள் இவ்விரு மதங்களுக்கும் பொதுவாகத் தோன்றினர். இன்று வரை அவர்களை முஸல்மான்கள் முஸ்லிமென்றும், வைஷ்ணவர்கள் விஷ்ணுபக்தரென்றும் கொண்டாடி வருகிறார்கள். பின்னிட்டு ஹிந்து மதத்துக்கும் இஸ்லாமுக்கும் அதிக ஸம்பந்த மேற்பட்டு மென்மேலும் அபிவிருத்தியடைந்து வருகிறது. நாகூர் முதலிய முஸ்லிம் க்ஷேத்ரங்களிலே ஹிந்துக்கள் ஏராளமாகப் போய்த் தொழுகிறார்கள்.

மௌலானா முஹமது அலி

ஸமீபத்தில் சிறிது காலத்துக்கு முன்னே ஹிந்து, மஹமதியர்களுக்குள்ளே அன்னியர்களின் தூண்டுதலால் கொஞ்சம் வேற்றுமை ஏற்பட்டது. ஆனால், சென்ற சில வருஷங்களாக ஜனாப் முஹமது அலி முதலிய முஸ்லிம் தலைவர்களின் முயற்சியாலும், ஸ்ரீமான் கோகலே, ஸ்ரீமான் காந்தி முதலிய ஹிந்துத் தலைவர்களின் ப்ரயத்தனத்தாலும் ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை மிகவும் அதிகமாய் விட்டது.

இனிமேல் ஹிந்துக்களுக்கும் முஸல்மான்களுக்குமிடையே மத பேதத்தைப் பற்றிய மனஸ்தாபங்கள் ஒரு போதும் ஏற்படாத வண்ணமாக ஹிந்து - முஸ்லிம் ஸஹோதரத்துவம் அத்தனை உறுதியான நிலை பெற்று விட்டது.

ஸஹோதரர்களே,

நீங்கள் இங்ஙனம் ஹிந்துக்களுடனே ஒற்றுமைப்பட்டது போல், இனிக் கிறிஸ்தவர், பௌத்தர் முதலிய பிற மதஸ்தருடனும் ஒற்றுமைப்பட்டு வாழ வேண்டும். 'தேசந்தோறும் பாஷை வேறு'. அரபி பாஷையில்

கடவுளுக்குப் பெயர் அல்லா. ஸம்ஸ்க்ருதத்தில் கடவுளுக்குப் பெயர் பிரமம் அல்லது ஈசன். யூத பாஷையிலே அவருக்கு யஹ்லே அல்லது யேஹோலா என்றும் பெயர்.

ஆனால், பௌத்தர், கிறிஸ்தவர், ஹிந்துக்கள் முதலிய எல்லா மதஸ்தரும் அல்லாவினுடைய மக்களேயன்றி வேறல்லர். எல்லாரும் அல்லாவைத்தான் வேறு வேறு நாமங்கள் சூட்டிப் போற்றுகிறார்கள். ஆதலால், பிற மதஸ்தரிடம் முஸல்மான்கள் விரோதமேனும் அவமதிப்பேனும் கொள்ளுதல் நியாயமன்று.

எந்தச் சக்தியாலும் அழிக்க முடியாது

உலகத்தில் எல்லா மதஸ்தர்களைக் காட்டிலும் நீங்கள் அதிகமான பலக்கட்டுடையவர்கள். ஆதலால், உங்கள் மதத்தை அழிக்க இனி எந்த சக்தியாலும் முடியாது. எனவே, நீங்கள் யாதொரு பயமுமின்றித் தைர்யத்துடன் உங்களுடைய கொள்கையை ஸமாதான வழிகளிலே, சாந்தமாகவும் அன்புடனும் ஆதரவுடனும் ப்ரசாரம் செய்ய வேண்டும். பகைமை கூடாது. இகழ்ச்சி கூடாது. போர் கூடாது. முஹம்மது நபி (அலைகி வஸல்லம்) அவர்களே தம்மையும்,. தமது மதத்தையும் அழிக்க முயன்றவர்களைப் போர்க்களத்தில் வென்று தமது கொள்கையை அழியாதபடி நாட்டியதின் பின் இனிமேல் இஸ்லாம் மதத்தை ஸாமோபாயங்களாலே பரவச் செய்ய வேண்டுமேயல்லது, மதப் போர்களும் மதக் கொலைகளும் அவசியமில்லை என்று சொல்லிவிட்டார்.

முயலின் தூஷணை – சிங்கத்தின் நகைப்பு

அப்போதைக் கிப்போது உலகத்தின் நிலைமை முற்றிலும் மாறிப் போய் விட்டது. அப்போதைக் கிப்போது இஸ்லாம் உலகத்தில் ஆயிர மடங்கு அதிக சக்தி பெற்று விளங்குகிறது. ஆதலால், இனி அன்பே கைக்கொள்ளத்தக்கது. **பிறர் உங்களைத் தூஷித்த போதிலும், முயலின் தூஷணையைக் கேட்ட சிங்கம் உடனே அதைக் கொல்லாமல் நகைப்பதுபோல் நீங்கள் அவர்களைப் பகைக்காமல் புன்சிரிப்புக் கொள்ள**

வேண்டும்.

நாம் எல்லாரும் ஸஹோதரர்; கிறிஸ்தவர், ஹிந்துக்கள், பௌத்தர், மஹமதியர் எல்லோரும் ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவுமாக இருந்து துணை செய்து எல்லோருக்கும் பொதுவாகிய கடவுளின் பக்தியில் உண்மையான 'தீன்' கொண்டு, அதினின்றும், நோவு, சாவு, துன்பம், கவலை முதலிய அரக்கர்களை வென்று மக்கள் தேவர்களைப் போல வாழும்படி கிருபை செய்ய வேண்டும் என்று நான் அல்லாஹுத்தஆலாவை மிகவும் வணக்கத்துடன், உண்மையுடனும் வேண்டிக் கொள்ளுகிறேன். ஆமீன்.*

ஹாஜி முஹமது மீரான் சாஹிப்

மகாகவி பாரதி 'இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை' பற்றிப் பேசி முடித்ததும், கூட்டத்திற்கு தலைமை தாங்கிய ரவணசமுத்திரம் ஹாஜி முஹமது மீரான் சாகிப் ராவுத்தர் எழுந்து பேசினார்.

'ஸபையோர்களே! இன்று நமக்கு ஸ்ரீமான் பாரதியார் மிகவும் அருமையான உபதேசங்கள் செய்தார். **அவர் சொல்லிய அம்சங்களிலே சரித்திர விஷயங்கள் போன்ற சில ஆங்கிலேயரின் எழுத்துக்களை ஆதாரமாகக் கொண்டபடியால் சிற்சில இலேசான விவரங்களில் மாறுல்கள் இருந்தன.** எனினும், மதக்கொள்கை விஷயமாக அவர் பேசியதில் இஸ்லாம் மார்க்கத்தின் உண்மையான தத்துவத்தை எடுத்துக் காட்டினார். நீங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தின்படி நடந்து அல்லாவின் அருள் பெற்று நித்திய வாழ்வெய்துவீர்களாகுக' என்றார்.

பிறகு மகாகவி பாரதிக்கும், கூட்டத் தலைவருக்கும் பூமாலைகள் போடப்பட்டன. பிறகு இரவு நேரத் தொழுகை (இஷா) நடைபெற்றது. அதன் பின்னர் கூட்டம் நிறைவுற்றது.

---

* **சீனி.விசுவநாதன், கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், தொகுதி – 9, சென்னை, 2008, பக். 399 – 403.**

ஜனாப் எப். முஹம்மது மீரான் சாஹிப் ராவுத்தர்

ரவணசமுத்திரத்தில் பிரபல அரிசி வியாபாரியான எப்.முஹம்மது மீரான் சாஹிப் ராவுத்தர் வீட்டிற்கு பாரதியார் அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு பாரதி இரவு உணவு சாப்பிட்டார்.

கல்வி அபிவிருத்தி

மகாகவி பாரதியின் யோசனைப்படி மார்க்க விஷயமான கல்வியும், பொதுக் கல்வியும், தொழில் கல்வியும், வியாபாரப் பயிற்சியும், அஞ்சுமான் இரவணசமுத்திரம் என்ற சங்கம் அமைப்பதற்குரிய ஏற்பாடு பற்றியும் பாரதியும் ரவணசமுத்திர முஸ்லிம்களும் ஆலோசித்தனர். பின்னர் பாரதி கடையத்திற்குச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, கடையம் சென்றார்.

பொட்டல்புதூர்

20.06.1920-இல் முஸ்லிம் அன்பர்கள், ஆர்வலர்களின் வேண்டுகோளை ஏற்று மகாகவி பாரதி 'இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை' என்ற தலைப்பில் பொட்டல்புதூரில் பேசினார்.

24.06.1920 சுதேசமித்திரனில் பாரதியின் உரை வெளிவந்துள்ளது. அந்த உரையினை 'கதாரத்னாகரம்' எனும் இதழ் 15.07.1920-இல் வெளியிட்டுள்ளது.

பாரதி பொட்டல்புதூரில் ஆற்றிய உரை இதோ . . .

இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை

இன்று மாலை எடுத்துக் கொண்ட விஷயத்தைப் பற்றிப் பேசு முன்பு, நான் அல்லாவின் மீது பாடிக் கொணர்ந்திருக்கும் தமிழ்ப் பாட்டை இங்கு வாசித்துக் காட்ட அனுமதி தரும்படி வேண்டுகிறேன். ஏற்கெனவே அரபி பாஷையில் 'பாத்திஹா' (ஜபம்) ஓதி முடிந்து விட்டது. அதற்கு அனுஸரணையாக இந்தத் தமிழ்ப் பாட்டைப் பாடுகிறேன்.

அல்லா பாட்டு

பாரதியார் பாடிய 'அல்லா' பாட்டில் மூன்று கண்ணிகள் உண்டு; அவ்வாறே முதன் முதலில் வெளிவந்தது. பின்னர், மூன்றாவது கண்ணி விடுபட்டுப் போயிற்று. இப்போதுள்ள எல்லா பாரதி தொகுதிகளிலும் இரண்டு கண்ணிகளே உள்ளன.

மேலும், பாடலைப் பாடுவதற்கு ராகமும் தாளமும் ஸ்வர வரிசைகளும்கூட தந்திருக்கிறார் பாரதி. 'சுதேசமித்திரன்' 24.06.1920 இதழில் வெளியான இந்த முழு வடிவில் உள்ள 'அல்லா' பாட்டு, பிறகு, 'சுதேசமித்திரன்' அலுவலகம் வெளியிட்ட 'கதா ரத்னாகரம்' என்ற மாதப் பத்திரிகையில், 1920 ஜுலை இதழில் மீண்டும் வெளியிடப் பெற்றது.

இந்தப் பாட்டின் முழு வடிவத்தையும், ராகம் தாளம் ஸ்வர வரிசை முதலிய இசைக் குறிப்புக்களையும் தேடி வெளியிட்டவர் 'குமரி மலர்' ஆசிரியர் ஏ.கே. செட்டியாராகும். 'குமரி மலர்' 1972 மே இதழில் இப்பாடலில் முழு வடிவம் கீழே உள்ளபடி வெளிவந்தது.

அல்லா! அல்லா! அல்லா!

பொட்டல்புதூரிலே (20.06.20) மாலையில் ஸ்ரீமான் சி.சுப்பிரமணிய பாரதி ஒரு முஸ்லிம் ஸபையின் முன்னே 'இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை' என்ற தலைப்பில் ப்ரஸங்கிக்கும் போது பாடிய பாட்டு.

அல்லா

சங்கராபரண ராகம் — *திஸ்ர ஏக தாளம்*

ஸ்வர வரிசைகளின் மாதிரி பின்வருமாறு:

பல்லவி

தந்நீ, நிந்நீ, ஸஸ்ஸா

சரணங்கள்

பஸாநிநி, நிநீநித, தாததாத, பாமகா
பஸாநிநி, நிநீநித, தாததாத, பாமகா

பஸாநிநி, நிநீநித, தாததாத, பாமகா
பஸாநீநி, நிநீநித, தாததாத, ஸஸா ஸாஸ –
(தந்நீ, நிந்நீ, ஸஸ்ஸா)

பல்லவி

அல்லா அல்லா அல்லா!

சரணங்கள்

1) பல்லாயிரம் பல்லாயிரங் கோடி கோடியண்டங்கள்
எல்லா திசையினு மோர் எல்லையில்லா வெளிவானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ் செய்த தோர் நாயகன்
சொல்லாலு மனத்தாலுந் தொடவொணாத பரஞ்சோதி (அல்லா)

2) கல்லாத வராயீனு முண்மை சொல்லாதவராயினும்
பொல்லாதவ ராயினுந்தவ மில்லாதவராயினும்
நல்லாருரை நீதியின்படி நில்லாதவராயினும்
எல்லோரும்வந் தேத்துமளவில் யமபயங்கெடச் செய்பவன்
(அல்லா)

3) ஏழைகட்குஞ் செல்வர்கட்கும் இரங்கியருளும் ஓர் பிதா
கோழைகட்கும் வீரருக்குங் குறை தவிர்த்திடும் ஓர் குரு
ஊழி, யூழி, அமரராயிவ் வுலகின் மீதிலின்புற்றே
வாழ்குவீர் பயத்தை நீக்கி வாழ்த்துவீர் அவன் பெயர் (அல்லா)*

எனக்கு முதல் முதல் இஸ்லாம் மார்க்கத்தில் அன்புண்டானதின் காரணம் பின்வருமாறு.

பல வருஷங்களின் முன்பு நான் ஒரு ஆங்கிலேய பண்டிதர் எழுதிய புஸ்தக மொன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் முஹம்மது நபியின் சரித்திரத்தைக் குறித்து சில விஷயங்கள் காணப்பட்டன. அவற்றைப் படித்துப் பார்த்த போது, நான் அற்புதமுண்டாய்ப் பரவசமடைந்னேன்.

மக்கா நகரத்தில், பூஜாரிகளின் ஸபை கூடி யிருக்கிறது. பிரமாண்டமான் ஸபை. நாட்டிலுள்ள பூஜாரிகள் அத்தனை பேரும் கூடும் வருஷாந்தக் கூட்டம் திருவிழாக் காலத்தை ஒட்டி நடந்தது. முஹம்மது நபி மேற்படி பூஜாரிகளின் வம்சத்தில்

* ரா.அ.பத்மநாபன், பாரதி புதையல் பெருந்திரட்டு, சென்னை, 1982, பக். 19 – 20. சுதேசமித்திரன், 24.06.1920.

பிறந்தவர். அரபி தேசத்து ஜனங்கள் அந்தக் காலத்தில் விக்கிரஹாராதனையிலும் பல தேவர் உபாஸனையிலும் தற்காலத்தில் தணிந்த ஜாதி ஹிந்துக்கள் எத்தனை மூழ்கிக் கிடக்கிறார்களோ, அத்தனை மூழ்கிக் கிடந்தார்கள். அவர்களிடையே முஹம்மது நபியின் குடும்பத்தார் கோவிற் குருக்களையும் பட்டர்களையும் ஒத்திருந்தனர்.

இவர்களுடைய வைதிக கோஷ்டியின் ஸபைக்கு நடுவே முஹம்மது நபி எழுந்து நின்று சொல்லுகிறார். '**நான் அல்லாவை நேரே பார்த்திருக்கிறேன். அவர் என்னைத் தமது முக்கிய பக்தராகவும் பிரதிநிதியாகவும் நியமனம் செய்திருக்கிறார். நீங்கள் இனிமேல் இவரைத் தொழுங்கள். அவரை மாத்திரம் தொழுதால் போதும் கடவுள் ஒருவர்தான் இருக்கிறார். பல ஈசுவரர் இல்லை. ஈசனைத் தவிர ஈசன் வேறில்லை. லா இலாஹா இல் அல்லா அல்லாவைத் தவிர வேறு அல்லா கிடையாது. (அரபி பாஷையில் அல்லா என்ற பதத்திற்குக் கடவுள் என்று அர்த்தம்)**

அல்லாஹ்

அவர் நம்மைப்போல் தோலுடம்பும் கைகால் முதலிய உறுப்புகளுமுடையவ ரல்லர். அவரைச் சிலைகள் வைத்துத் தொழுவதிலும் அவருக்கு உங்களுடைய ஆகாரங்களை நைவேத்தியம் பண்ணுவதிலும் பயனில்லை. அவர் எல்லாவற்றையும் படைத்து, எல்லாவற்றையும் இயக்கிக் காத்து எல்லாவற்றையும் வடிவு மாற்றிக் கொண்டிருக்கிறார் அவர் எல்லாவற்றையும் தம்முடைய உடம்புகளாகவும் தம்முடைய ரூபங்களகாவு முடையவர். அறிவு வடிவமாக நிற்பவர். அருள் வடிவமாக நிற்பவர். அவரை மனமாகிய கோயிலில் நிறுத்தி, வீரியம், பக்தி என்ற பூக்களால் அர்ச்சிப்பதே சரியான பூஜை. இடைவிடாமல் அசையாமல் அவரிடம் தீராத மாறாத பக்தி செலுத்துங்கள்.

அவ்விதமான பக்தி 'இஸ்லாம்' என்று சொல்லப்படும் இந்த இஸ்லாமைத் தரித்திருப்போர் நித்தியானந்த வாழ்க்கையாகிய முக்தி வாழ்க்கையை எய்துவார்கள். ஆதலால்,

நீங்கள் இந்தப் புராதனக் கிரியைகளையும் கொள்கைகளையும் விட்டுவிட்டு என் மதத்தில் சேர்ந்து அல்லாவின் திருவடி நிழலை அடைந்து வாழ முதற்பட்டு வாருங்கள்' என்று முஹம்மது நபி யாண்டவர் திருவாய் மலர்ந்தருளினார்.

இதைக்கேட்ட மாத்திரத்தில் அங்கிருந்த பெருச்சாளிக் குருக்களெல்லோரும் தங்கள் சிஷ்யர் ஸஹிதமாக முஹம்மது நபியைப் பரிஹாஸம் பண்ணினார்கள்.

அந்த சமயத்தில் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மருமகனாகிய அலி என்பவர் எழுந்து 'மாமா, உங்கள் கொள்கையை யார் நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும் சரி நான் நம்புகிறேன் லா இலாஹா இல் அல்லா முஹம்மதுர் ரஜுல் உல்லா; அல்லவைத் தவிர வேறு கடவுளில்லை. அவருக்குச் சிறந்த நபி முஹம்மது' என்று பிரதிக்கனை செய்து கொடுத்தார். இது ஒரு செய்தி.

இரண்டாவது செய்தி, முஹம்மது நபியை தமது குமாஸ்தாவாகப் பல வருஷம் வைத்திருந்து பிறகு அவருக்கே மாலையிட்டவராகிய கதீஜா பீவியம்மை அவருடைய மதத்தில் சேர்ந்து கொண்டது.

ஒருவன் தான் நேரே கடவுளைப் பார்த்ததாகவும் அதினின்றும் தெய்வங்கள் தன்னிடத்தில் விளங்குவதாகவும் வெளியூராரிடம் சொல்லி, அவர்களை நம்பும்படி செய்தல் எளிது.

இரவு பகல் கூடவேயிருந்து, நீ நோய் வேதனை பொறுக்கமாட்டாமல் அழுவதையும் இன்னும் உன்னுடைய பலஹீனங்கள், அதைர்யங்கள், அச்சங்கள், அநீதிகள், குரூரங்கள், பொறாமைகள், அதர்மங்கள், குறைகள் எல்லாவற்றையும் ஸஹிப்போராகிய உன் சுற்றத்தாரும், அத்யந்த நண்பர்களும் பக்கத்து விட்டாரும் உன்னைக் கடவுளின் அருளும் அம்சமும் அடைந்த மஹானென்று நம்ப வேண்டுமானால், நீ உண்மையிலேயே தெய்வத்தைக் கண்டால்தான் முடியும்.

மற்றபடி ஏமாற்றலினாலும், வேஷங்களாலும், நடிப்புக்களாலும் இவர்களை நம்பும்படி செய்தல் சாத்தியமில்லை. இதுபற்றியே, இங்கிலீஷில் 'எந்த மனிதனும் தன் சொந்த ஊரில் தீர்க்கதரிசியாக மாட்டான்' என்றொரு வசனம் சொல்லுகிறார்கள்.

நிகரில்லாத ஞானி

முஹம்மது நபியை முதல் முதல் அலியும் அதைக் காட்டிலும் ஆச்சர்யந் தோன்றும்படி, கதீஜா பீவியும் கடவுளின் முக்கிய பக்தரென்றும், தெய்வ அருள் பெற்றவரென்றும், பூமண்டலத்தில் கடவுளுடைய பிரதிநிதியாக அவதரித்த மஹா னென்றும் அங்கீகாரம் செய்து கொண்டதைக் கவனிக்குமிடத்தே, அவர் **நிகரில்லாத ஞானி யென்பதும், பக்த குல சிரோமணி யென்பதும் மிகத் தெளிவாக விளங்குகின்றன.**

மக்கத்தில் முஹம்மது நபிக்கு அநேகர் சீடராகச் சேர்ந்து விட்டார்கள். அவருடைய மதம் நாளுக்கு நாள் பிரபலமாகத் தொடங்கி விட்டது. இதைக் கண்டு பழைய விக்ரஹாராதனைக்காரருக்குப் பொறாமையும் அச்சமும் மிகுதிப்படலாயின.

மக்கத்து அதிபதி, நபி யவர்களையும் அவருடைய முக்கிய நண்பர்களையும் சீடரையும் பிடித்துச் சிறையில் விடும்படி தன் சேவகரிடம் கட்டளையிட்டான். இந்தச் செய்தி நபி ஆண்டவனுடைய செவிக்கு எட்டி விட்டது. இது 622 கி.பி. வருஷத்தில் நடந்தது.

அப்பால், சில நண்பரின் வேண்டுகோளுக்கும் அல்லாவின் உத்தரவுக்கும் இணைந்த முஹம்மது ஒரே ஒரு சீடருடன் மதீனாவுக்குப் புறப்பட்டார். போகிற வழியில் காடு, இவ்விருவரும் தனியே சென்று கொண்டிருந்தனர். இவர்கள் ஊரை விட்டு தப்பிய செய்தியறிந்து, மக்கத்து அதிபதி இவர்களின் பின்னே ஒரு குதிரைப் படையை அனுப்பினான். இவ்விருவரும் காட்டுவழியே போகையில், பின்னே குதிரைப் படை வரும் சத்தம் இவர்களுடைய காதிற் பட்டது. அங்கொரு

புதருக்குள்ளே போய் பதுங்கிக் கொண்டார்கள். குதிரைப் படையின் பாத ஒலி மிகவும் சமீபத்தில் கேட்டது.

அப்போது நபியுடன் இருந்த சீடர், 'ஐயோ, இனி என்ன செய்யப் போகிறோம்? ஏது, நாம் தப்புவது கிடையாது. நம்மை இவர்கள் பார்த்துத்தான் போடுவார்கள். மக்கத்திற்குப் போனால் நம்மை வெட்டிக் கொல்லுவார்களோ, தூக்குத்தான் போடுவார்களோ!' என்று சொல்லி பலவாறு பரிதபிக்கலானான்.

அப்போது முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொல்லுகிறார்.

அல்லா ஸர்வ வல்லமையுடையவர்

'கேளாய் நண்பனே; நான் இந்த உலகத்தில் அல்லாவின் காரியஸ்தனாக வேலை செய்து வருகிறேன். அல்லாவினால் எனக்கு மானுஷ லோகத்தில் நிறைவேற்றும்படி விதிக்கப்பட்டிருக்கும் காரியங்களெல்லாம் நிறைவேறி முடியும், வரை, என்னை உலகத்து மன்னர்களெல்லோரும் ஒன்றுகூடிக் கொல்ல விரும்பினாலும் எனக்கொரு தீங்கும் வரமாட்டாது. என் தலையில் ஆயிரம் இடிகள் சேர்ந்து விழுந்தபோதிலும் எனக்கு மரணம் நேரிடாது. அல்லா ஸர்வ வல்லமை யுடையவர், அவருடைய சக்திக்கு மேற்பட்ட சக்தி இந்த ஜகத்தில் வேறில்லை. ஆதலால், எனக்குப் பயமில்லை. என்னுடன் இருப்பதனால் உனக்கும் ஆபத்து வராது. நீயும் பயப்பட வேண்டிய அவசியமில்லை' என்றார்.

அப்பால் அந்தக் குதிரைப் படை அவர்களைப் பாராமலே போய் விட்டது.

இந்த சமாசாரத்தை நான் வாசித்துப் பார்த்தவுடனே, என் மனத்தில் முஹம்மது நபியிடமிருந்த மதிப்பு ஆயிரம் மடங்கு மிகுதியாயிற்று. ஸாதாரண காலங்களில் தைர்யத்துடனிருப்பது ஸுலபம். ஆபத்து நேரே தலையை நோக்கி வரும்போது 'கடவுள் துணை செய்வார். எனக்குப் பயமில்லை' என்று மனதுடன் சொல்வோன் உண்மையான

தெய்வ பக்தன். தெய்வ பக்தி ஒன்றைத் தவிர வேறெந்த சக்தியும் மனிதக் குண்டின் முன்னே தைர்யம் கொடுக்காது. சீறி வரும் பாம்பை நோக்கி அஞ்சாமல் நகைக்கவல்ல தீரர் கடவுளின் கருணை பெற்றோரே யாவர். மற்றப்படி வேறெந்த பலமும் அவ்விதமான தைர்யத்தைத் தராது.

கலங்காத நெஞ்சம்; ஞானதீரம்

'பாம்பென்றால் படையும் நடுங்கும்' இன்னும், மதீனாவுக்கு நபி சென்ற பிறகு இதுவரை பல தடவைகளில் மக்கத்தாரின் கொரேஷ்* படைகள் எதிர்த்து வந்தன. முஹம்மது நபியிடம் சேர்ந்தவர்கள் தக்க ஸைன்யப் பயிற்சி பெறவில்லை. **பயிற்சி பெற்று வந்த படைகளைப் பயிற்சியற்ற மனிதர்களைத் துணைகொண்டு முஹம்மது நபி வென்றார். கலங்காத நெஞ்சுடைய ஞானதீரமும் அழியாத நம்பிக்கையும், அவரிடத்தேயிருந்தன.** ஆதலால் அவருக்கு,

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி எதனிலும் வெற்றி
விடுத்தவாய் மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டு முன்னர் அருளினர் அல்லா.

இடையிடையே நான் என் மனத்திற்குள் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பற்றிச் சித்திரம் போட்டுப் பார்ப்பது வழக்கம். நடுப்பாலைவனத்தில், நள்ளிரவிலே தனி மணல் வெளியிலே, ஒட்டகையின் மீது தனியாக ஏறிக்கொண்டு போகிறார். அல்லது அங்கொரு குன்றின்மேல் ஏறி நிற்கிறார். கேள்வியாலும், நெடுங்காலத்து பக்தியாலும், நிகரற்ற அன்பினாலும் ஞானத்தாலும் பக்குவப்பட்ட இவருடைய ஹ்ருதயம் அப்படிப்பட்ட இடத்தில் அல்லாவை நாடுகிறது. வேறு நினைப்புக்கு இடமில்லை. அப்போது அங்கு ஞானவொளி வீசிற்று. நபி அல்லாவைக் கண்டார். சுகப்பிரம்ம ரிஷிக்கு நேர்ந்த அனுபவம் முஹம்மது நபிக்கு எய்திற்று.

---

* கொரேஷ் – குறைஷி

அங்கமே நின்வடிவ மானசுகர் கூப்பிடநீ
எங்கும்ஏன் ஏன்என்ற தென்னே, பராபரமே

என்று தாயுமானவர் பாடியிருக்கிறார்.

இந்தக் கதை எப்படியென்றால், சுகப் பிரம்ம ரிஷி காட்டு வழியாகப் போய்க் கொண்டிருக்கையில் கடவுளைப் பார்க்க வேண்டுமென்ற தாகமேலீட்டால், 'கடவுளே கடவுளே' என்ற கதறிக் கொண்டு போனாராம்.

அப்போது காட்டிலிருந்த கல், மண், மணல், நீர், புல், செடி, மரம், இலை, பூ, காய், காற்று, ஜந்துக்கள் எல்லாவற்றினின்றும், 'ஏன் ஏன்' என்ற மறுமொழி உண்டாயிற்று. அதாவது கடவுள் ஞானமயமாய் எல்லாப் பொருள்களிலும் நிரம்பிக் கிடப்பதைக் சுக முனிவர் கண்டார் என்பது இக்கதையின் பொருள்.

மஹா சூரர், மஹா ஞானி

முஹம்மது நபி மஹா ஸுந்தர புருஷர், மஹா சூரர், மஹா ஞானி, மஹா பண்டிதர், மஹா பக்தர், மஹா லௌகிக தந்திரி, வியாபாரமானாலும் யுத்தமானாலும் முஹம்மது நபி கவனித்தால் அந்த விஷயத்தில் வெற்றி மிகவும் உறுதி. ஆதலால் அவர் மிகவும் அபிமானிக்கப்பட்டார்.

எனினும், புதிய மதமொன்று கொண்டு வந்ததினின்றும் அவர் சுற்றத்தாரும் அத்யந்த நண்பர்களும் பகைமை செலுத்தலாயினர். ஆனால், நபி பொருட்டாக்கவில்லை. முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள், உலகத்தின் பொது நன்மைக்கும் தர்மத்திற்கும் நீதிக்கும் ஸத்யத்திற்கும் அல்லாவிற்கும் முன்னே, தம்முடைய சொந்த ஸுகங்களையும், ஸௌகர்யங்களையும், வாழ்வையும், செல்வத்தையும் அதனால் விளையும் பெருமைகளையும், இன்பங்களையும், ரக்ஷணைகளையும், உயிரின் பாதுகாப்பையுங் கூடச் சிறிய பொருளாகக் கருதினர்.

இவரிடத்தில் இத்தனை உறுதியான பக்தி யிருப்பதை நோக்கியே, அல்லா இவரைத் தமக்கு மிகவும் பிரியமான நபியாகத் தெரிந்தெடுத்தார்.

அரபியா தேசத்தில் மக்கா நகரத்தில் அப்துல்லா என்ற மஹானுக்கும் அவருடைய தர்ம பத்தினியாகிய ஆமீனாவுக்கும் குமாரராக கி.பி.570 ஆம் ஆண்டில் நமது நபி ஜனித்தார். புஸ்தகப் படிப்பு கிடையாது. கேள்வியால் மஹா பண்டிதரானார். ஸஹவாஸத்தால் உயர்ந்த ஞானியானார். நிகரில்லாத பக்தியால் அரசனும், கலீபும் தீர்க்கதரிசியுமானார். மக்கத்தில் பெருஞ் செல்வியாகிய கதீஜா பீவியையும் வேறு எட்டு ஸ்திரீகளையும் மணம் புரிந்தார். தம்முடைய ஆயிஷா பீவியைப் பிரதான நாயகியாகக் கொண்டிருந்தார். நாற்பதாம் ஆண்டில் தம்மை ஈசன் நபியாக்கி விட்டதாக உலகத்துக்குத் தெரிவித்தார். கி.பி.632 இல் இந்த மண்ணுலகை விட்டு முஹம்மது நபி வானுலகம் புகுந்தார்.

மக்கத்தை விட்டு, இளமையிலேயே இவர் வியாபாரத்துக்காக வெளி நாடுகளில் ஸஞ்சரிக்கும்படி நேர்ந்த ஸமயங்களில் யூத கிருஸ்தவ பண்டிதர்களைக் கண்டு அவர்களுடைய மதக் கொள்கையைப்பற்றி விசாரணை செய்வது வழக்கம். அதனின்றும் விக்ரஹாராதனை விஷயத்திலும் பல தேவர் வணக்கத்திலும் இவருக்குப் பற்றுதலில்லாமற் போக ஹேது உண்டாயிற்று. ஏகேசுவர மதத்தைக் கைக்கொண்டார். யூதருக்கும், கிருஸ்தவருக்கும் பொதுவாகிய ‘பழைய ஏற்பாடு’ என்ற பைபிளின் பூர்வ பாகத்தை இவர் உண்மையாகவே அங்கீகாரம் செய்து கொண்டார். கிறிஸ்துநாதரையும் இவர் ஒரு சிறந்த நபியாகக் கொண்டார். கடவுளின் அவதாரமாக ஒப்புக்கொள்ளவில்லை. விக்ரஹங்களிடத்தே கடவுளைக் காட்டி வணங்குதல் பொருந்தாத கார்யமென்று யூதருக்கும், கிருஸ்தவருக்கும் தோன்றியது போலவே, ஒரு மனிதன் பக்தி ஞானங்களில் எவ்வளவு சிறப்பெய்திய போதிலும், அவன் கடவுளை நேருக்கு நேரே கண்டறிந்த வரையிலும் அதுபற்றி அவனை மிக உயர்ந்த பக்தரென்றும் முக்தனென்றும் போற்றலாமே யல்லாது, மனித

வடிவத்தில் ஸாக்ஷாத் கடவுளையே சார்த்துதல் பொருந்தாதென்று முஹம்மது நபி எண்ணினார் போலும்.

இந்த அம்சத்தில் என்னுடைய சொந்தக் கருத்து பின்வருமாறு:

இந்த உலகம் முக்காலத்திலும் உள்ளது. இது அசைகிறது. அண்டங்களாக இருந்து சுழன்றோடுகிறது. காற்றாகத் தோன்றி விரைகின்றது. மனமாக நின்று சலிக்கிறது. ஸ்தூல அணுக்களும் ஸூக்ஷ்ம அனுக்களும் ஸதா மஹா வேகத்துடன், மஹா மஹா மஹா மஹா வேகத்துடன் இயங்கிய வண்ணமாகவே இருக்கின்றன. இந்த உலகத்திலிருந்து கொண்டு இதனை அசைக்கிற சக்தியையே கடவுளென்கிறோம். எல்லாம் அவன், உலகத்தின் செயல்களெல்லாம் கடவுளுடைய செயல்கள்.

தீர்க்கதரிசி

அவனுடைய நிஜ வடிவம், அதாவது, பூர்வ வடிவம் யாது? சைதன்யம் அல்லது சுத்தமான அறிவே கடவுளின் மூல ரூபம். மனிதருடைய ஸாதாரணச் செயல்கள் யாவுமே கடவுளின் செய்கைகளேயன்றி வேறில்லை. எனினும், ஜகத்தில் ஞான மயமான கடவுள் எங்கும் நிரம்பிக் கிடப்பதை நேரே ஒருவன் கண்ட பிறகு, அந்த மனிதனுடைய செயல்களிற் பல கடவுளின் நேரான கட்டளையின்படி செய்யப்படுகின்றன. அப்படிப்பட்ட நிலைமையை யெய்தின மனிதனை நபி அல்லது தீர்க்கதரிசி என்கிறோம்.

அப்பால் அல்ல, எப்போதுமே ஒருவனுடைய ஹ்ருதயத்தில் அந்தக்கரணத்துக்கு நன்றாக விளங்கும்வண்ணம் குடி புகுந்து கற்றறிந்தவனுடைய அறிவு முழுவதையும் தாம் விலை கொடுத்து வாங்கிய கருவி போலே யாக்கிக்கொண்டு புறச் செயல்களும் உலகத்தாருக்கு வழிகாட்டிகளாகும்படி பரிபூர்ண சைதன்ய நிலையிலே நடத்திக் கொண்டு வரத் திருவுளம் பற்றுவராயின், அப்படிப்பட்ட மனிதனைக் கடவுளின் அவதார மென்று சொல்லலாம். ஆனால், கிருஸ்து நாதர் இந் நிலை அடைந்ததாக முஹம்மது நபி நம்பவில்லை போலும். இது நிற்க.

இஸ்லாம் மார்க்கத்தின் முதலாவது கலீபாவாக* முஹம்மது நபி அரசாண்டார். அவருக்குப் பின் அபுபகர் அந்த ஸ்தானத்தை ஐந்து வருஷம் வகித்தார். அப்பால் ஏழு வருஷம் உமர் கலீபாவாக ஆண்டார். அந்தக் காலத்திற்குப் பின்பு, முஸல்மான்களிலே, ஷியா, ஸீந்தி** என்ற இரண்டு பிரிவுகள் உண்டாயின.

குரான் இஸ்லாம் மார்க்கத்திற்கு வேதம்

குரான் இஸ்லாம் மார்க்கத்திற்கு வேதம். இதை முஹம்மது நபி தம்முடைய வாக்காகச் சொல்லவில்லை. கடவுளுடைய வாக்கு தேவதூதரின் மூலமாகத் தமக்கு எட்டியதென்றும், தாம் அதை ஒரு கருவிபோலே நின்று உலகத்தாருக்கு வெளியிடுவதாகவும் சொன்னார்.***

எகிப்தின் விடுதலை

01.09.1920 சுதேசமித்திரனில் 'எகிப்தின் விடுதலை' என்ற கட்டுரையை சக்திதாஸன் என்ற பெயரில் எழுதினார் பாரதியார்.

பாரதியின் கடைசி நாட்கள்

திருவண்ணாமலை

02.05.1921-இல் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலின் எதிரில் 'இந்தியாவின் எதிர்கால நிலை' என்ற தலைப்பில் பாரதி பேசினார். 03.05.1921 சுதேசமித்திரனில் அது பற்றிய குறிப்பு காணப்படுகிறது. 03.05.1921-இல் அருணாசலேசுவரர் கோயில் பதினாறுகால் மண்டபத்தில் ஆர்.வி. கிருஷ்ணசாமி ஐயர் தலைமையில் பாரதி பேசினார்.

திருவல்லிக்கேணி யானை

1921, சூன் மாதத்தில் திருவல்லிக்கேணி கோவில் யானை அர்ஜுனனுக்கு 'சகோதரா! இந்தா பழம், தேங்காய்!' என்று

---

* முதலாவது கலீபாவாக – இறுதித் தூதராக.

** ஸுந்தி – சன்னி.

* பாரதி நூல்கள், கட்டுரைகள், சென்னை, 1950, பக். 89 – 102.

*அன்புடன் நெருங்கிக் கையை நீட்டினார். யானை அதை வாங்கத்தான் வந்ததோ, மதத் திமிரில் தட்டி விடத்தான் செய்ததோ தெரியவில்லை. துதிக்கையை விசிறியது. அடுத்த க்ஷணம் பாரதி யானையின் காலடியில் மூர்ச்சித்துக் கிடந்தார்.**

சுதேசமித்திரனில் பணி

1921 சூனில் யானையால் தாக்குண்ட பாரதி குணமாகி ஜூலையில் சுதேசமித்திரன் அலுவலகத்தில் வேலைக்குப் போய் வந்தார்.

பறவைகளின் பாஷை

15.07.1921-இல் கதாரத்னாகரம் இதழில் பாரதியின் 'பறவைகளின் பாஷை' என்ற கட்டுரை வெளிவந்துள்ளது.

*அமெரிக்க மிஷிகன் மாகாணம், தெத்ருவா நகரத்திலுள்ள திருமதி மாட் & ரால்ஸ்டன் ஷர்மன் என்பவர் எழுதிய ஆங்கிலக் கவிதையை மொழிபெயர்த்த பாரதி, 'இந்தியாவின் அழைப்பு' என்ற தலைப்பில் 19.07.1921 சுதேசமித்திரனில் வெளியிட்டார். அதே தேதியில் 'ஐர்லாந்தும் இந்தியாவும்' என்ற கட்டுரையை காளிதாசன்** என்ற புனைப் பெயரில் சுதேசமித்திரனில் எழுதியுள்ளார்.*

பரிமளா

02.08.1921 சுதேசமித்திரனில் பரிமளா என்ற துப்பறியும் நாவலுக்கு பாரதி மதிப்புரை எழுதியுள்ளார்.

விதி நூல்

*03.08.1921-இல் விதி நூல்*** என்ற முற்றுப் பெறாத*

---

* பாரதியின் இந்த நிகழ்வுக்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின் 1923ஆம் ஆண்டில் அர்ஜுனன் என்ற அந்த யானை இறந்து போயிற்று.

** தி.முத்துக்கிருஷ்ணன், மகாகவி பாரதியார் வாழ்க்கைச் சரித்திரம், சென்னை, 1986, ப. 538. பாரதியின் புனைப்பெயர்கள்: சக்திதாசன், காளிதாஸன், ஷெல்லிதாசன், சாவித்திரி என்ற நிருபநேயர், ஒரு உத்தம தேசாபிமானி, நித்திய தீரர்.

*** சீனிவிசுவநாதன், மகாகவி பாரதி வரலாறு, சென்னை, 1996, ப. 515.

கட்டுரையை பாரதி எழுதியுள்ளார். பாரதியின் தம்பி திரு.சி.விசுவநாதன் அளித்த கொடையால், அதனைப் பதிப்பித்து வெளியிட்டவர் பாரதி ஆய்வாளர் திரு.சீனி. விசுவநாதன்.

ஈரோடு பயணம் – மனிதனுக்கு மரணமில்லை

1921 ஆகஸ்டில் முதல் இரண்டு நாட்கள் கருங்கல்பாளையத்திலிருந்த வாசகசாலையின் ஆண்டு விழாவில் 'மனிதனுக்கு மரணமில்லை', 'இந்தியாவின் எதிர்கால நிலை' என்ற தலைப்பில் பாரதி பேசினார்.

என் ஈரோடு யாத்திரை

'சக்திதாஸன்' என்ற பெயரில் 04.08.1921 சுதேசமித்திரனில் 'என் ஈரோடு யாத்திரை' என்ற கட்டுரையை பாரதி எழுதியுள்ளார். 11.08.1921-இல் காந்தியடிகளின் திலகர் நிதி முயற்சி பற்றி 'ஒரு கோடி ரூபாய்' என்ற கட்டுரையை காளிதாசன் என்ற புனைப் பெயரில் சுதேசமித்திரனில் பாரதி எழுதியுள்ளார்.***

ஸ்ரீரவீந்திரர் திக் விஜயம்

1921 ஆகஸ்ட் 25-இல் (துன்மதி ஆண்டு ஆவணி 10-இல்) காளிதாஸன் என்ற பெயரில் (ஸ்ரீ ரவிந்திரர் திக் விஜயம்) என்ற கட்டுரையை பாரதி, சுதேசமித்திரனில் எழுதியுள்ளார்.

*25.08.1921-இல் கடைசியாக சுதேசமித்திரனில் வெளியான பாரதி கட்டுரை இது என்கிறார் பெ. தூரன்.****

1921 செப்டம்பர் 1

1921 செப்டம்பர் முதல் நாள் பாரதிக்கு வயிற்றுப்போக்கு (டயரியா); பூஞ்சை உடல், விரைவில் இரத்தக் கடுப்பாக மாறியது (டிஸெண்டரி) சுதேசமித்திரன் ஊழியர், 'எப்போது

---

* பெ.தூரன், பாரதி தமிழ், சென்னை, 1986, பக். 469 – 471.

** மேலது, பக். 472 – 475.

*** மேலது., ப. 487.

பாரதி வேலைக்குத் திரும்புவார்' என்று கேட்டு வந்தார்கள்.

செப்டம்பர் 12 சுதேசமித்திரன் அலுவலகத்திற்கு வந்துவிடுவேன் என்று பாரதி சொல்லி அனுப்பினார்.

வ.வே.சு.ஐயர்

வீரவிளக்கு வ.வே.சு. ஐயர் 11.09.1921 பகலில் பாரதியைச் சந்தித்துச் சென்றார்.

பரலி.சு.நெல்லையப்பர்

நீலகண்ட பிரம்மச்சாரி, பரலி.சு.நெல்லையப்பர், லட்சுமண ஐயர் ஆகியோர் பாரதியாரின் வீட்டில் கவலையோடு இருந்தனர். ஆந்திர கேசரி டி. பிரகாசத்தின் தம்பியான ஹோமியோபதி டாக்டர் டி.ஜானகிராமை அழைத்து வந்தனர். டாக்டர் பாரதியை நெருங்கி என்ன செய்கிறது? என்று கேட்டார். பாரதி கோபத்துடன் 'யாருக்கு உடம்பு சரியில்லை எனக் கொன்றும் உடம்பு அசௌக்கியம் இல்லை. உங்களை யார் இங்கே அழைத்தது. என்னை சும்மாவிட்டு விட்டுப் போங்கள்' என்று இரைந்தார். வேறு வழியின்றி டாக்டர் போய்விட்டார்.

எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரி

1921 செப்டம்பர் 11 இரவு நண்பர்கள் கவலை சூழ உட்கார்ந்திருந்தனர். பாரதி தம் நண்பர்களிடம் சொன்னதை ஆஷ் கொலை வழக்கில் முதல் எதிரியான எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரி இவ்வாறு கூறுகிறார்.

'அமானுல்லாகானைப் பற்றி ஒரு வியாசம் எழுதி ஆபீஸுக்கு எடுத்துக் கொண்டு போக வேண்டும்' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அமானுல்லாகான்

இந்த நூலின் துவக்கத்திலேயே ஆப்கன் அமீர் குறித்தும் ஆப்கானிஸ்தானம் குறித்தும் பாரதி எழுதிய பல கட்டுரைகளைப் பார்த்தோம்.

1914 - 1918 முதல் உலகப் போரில் அமானுல்லாகான் ஜெர்மானியருக்குச் சாதகமாயிருந்தாரென்று போரில் வெற்றி பெற்ற பிரிட்டிஷார், அவர் மீது கருவிக் கொண்டிருந்தார்கள். பிரிட்டிஷாரின் எதிரியான அமானுல்லாகானைப் பற்றித்தான் பாரதி சொன்ன கடைசி வார்த்தைகளாகும்.

*1921 செப்டம்பர் 12 அதிகாலை 1.30 மணிக்கு பாரதி இவ்வுலக வாழ்வைத் துறந்தார். அவரது கடைசி வார்த்தை '**அமானுல்லாகான்**' என்பது மறக்க, மறுக்க முடியாத வரலாற்று உண்மையாகும்.*

1921 செப்டம்பர் 11 முன் இரவில் பெரும் பகுதி மயக்கத்திலிருந்த பாரதி இறப்பதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்னால் சொன்ன வார்த்தைகளே (அமானுல்லாகானைப் பற்றி ஒரு வியாசம் (கட்டுரை) எழுதி ஆபீசுக்கும் எடுத்துக் கொண்டு போக வேண்டும்) பாரதி பேசிய கடைசி வார்த்தைகளாகும் என்கிறார் நீலகண்ட பிரம்மச்சாரி.[*]

பாரதியும் முஸ்லிம்களும்

தனது வாழ்வில் துவக்கம் முதல் இறுதி மூச்சு வரை இஸ்லாமிய நாடுகளைப் பற்றியும், முஸ்லிம் தலைவர்களைப் பற்றியும் எழுதி வந்த பேசி வந்த பாரதியின் முஸ்லிம் நண்பர்கள் ஏராளம், ஏராளம்.

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி

மகாகவி பாரதியின் துணைவியார் செல்லம்மாள் பாரதிக்கு இரண்டு புதல்விகள். மூத்தவர் தங்கம்மாள் பாரதி. இளையவர் சகுந்தலா பாரதி.[**] *1947-இல் தங்கம்மாள் பாரதி 'பாரதியும் கவிதையும்' என்ற நூலை வெளியிட்டுள்ளார். அதில் அவர் தரும் ருசிகர தகவல் இதோ. . .*

---

* ரா.அ. பத்மநாபன், சித்திரபாரதி, திருத்திய விரிவான இரண்டாம் பதிப்பு, சென்னை, 1982, ப. 175.

** இது குறித்த விவரங்களை நூலாசிரியர் செ.திவான் எழுதிய 'பாரதி செல்லம்மாள் உயில்' நூலில் காண்க.

டில்லி பாதுஷா

ஒரு நாள் மாலை ஐந்து மணி. வாயிற் கதவு தட தடவென்று தட்டப்பட்டது. எங்கள் வீட்டில் எல்லா வேலைகளுக்கும், காரியங்களுக்கும், சட்ட திட்டங்கள் வகுத்திருப்பார் அப்பா. அதன்படிதான் நடக்க வேண்டும். மீறினால் கடுந்தண்டனை விதிக்கப் பின்வாங்கார். யாரேனும் வந்தால் கதவைத் திறந்து, யாரென்று பார்த்து, அவர்களைக் கால் அலம்பச் சொல்லிவிட்டு நான் மாடிக்குப் போக வேண்டும். தந்தையார் மாடியிலிருப்பாரே தவிர அவர் மனம் கீழேதான் இருக்கும். நான் சிறு பெண் ஆனபடியால் எவனாவது வந்து கதவைத் தட்டி, தப்பிதம் ஏதாவது நேராமலிருக்க வேண்டுமே என்று அவர் கவலை. ஆனால், அதற்காகப் பெண்களை உள்ளேயே வைத்திருப்பது என்ற வழக்கம் பிரயோஜனமில்லை என்ற கொள்கையு டையவரானபடியால், என்னைக் கதவு திறக்க வேண்டும் என்பார். கதவுச் சங்கிலியைத் திறந்து பார்க்கையிலேயே, அவர்கள் யார் என்பதைத் தெரிந்து கொண்டு, தெருவில் நடந்து புழுதியோடு மாடியிலேறாதபடி அவரைக் கால் அலம்பும்படி சொல்லிவிட்டு (இவ்வளவும் ஒரு நிமிஷத்திற்குள் செய்ய வேண்டும்) வந்தவர் மாடியேறு முன்பு, அப்பாவிடம் வந்தவரைப் பற்றிய தகவல் சொல்ல வேண்டும். பின்பு அவர் வந்ததும், அவர்கள் சம்பாஷணையைக் கவனித்து அதற்கிசைய நடக்க வேண்டும். வந்தவர் சென்னை ஆசாமியென்று நடையுடை பாவனையிலிருந்து தெரிந்து கொண்டேன். அவர் என்னை வெறிக்கப் பார்த்தார். மாடிக்கு வந்ததும் அவர் தயங்கினார். திணறினார். சுற்று முற்றும் பார்த்து திறுதிறுவென்று விழித்தார். எனக்குப் பெரிய சந்தேகமாய்விட்டது. பின்பு அது பயமாய் மாறிற்று. யாரையோ நன்றாய் விசாரியாமல் விட்டுவிட்டோமே, தந்தை கோபிப்பாரே! என்ன செய்வது? என்று. தந்தையார் மெதுவாக 'என்ன ஸ்வாமி எந்த ஊர்? என்ன விசேஷமாய் வந்தீர்கள்?' என்று விசாரித்தார். அவர் சற்று தைரியமடைந்து 'இது பாரதியார் வீடு தானே?' என்றார். தந்தை 'ஏன் உங்களுக்குச்

சந்தேகம்?' இதுவேதான். அவர் 'இல்லை. பாரதியார் வெளியே சென்றிருக்கலாமோ?' 'ஸ்வாமி நான்தான் பாரதி'. 'விளையாடாதீர்! அவர் எங்கே சொல்லும்!' 'என்ன ஐயா! இது! தர்மசங்கடம்! என்னைப் பாரதியில்லை என்கிறீரே! என்ன காரணம் கொண்டு அவ்வாறு கூறுகிறீர்?' 'பாரதியார் எழுதிய கவிதைகளையும் கட்டுரைகளையும் வாசித்திருக்கிறேன். பாரதியாரைக் கிழவராக, குறைந்தது ஐம்பது வயதாவது உடையவராக எதிர்பார்த்தேன். தாங்கள் முப்பது வயதுடைய யௌவன புருஷராகத் தோன்றுகிறீர்,. தங்களைப் பார்த்தால் டில்லி பாதுஷாவோ அல்லது துருக்கி சுல்தானோ என்று தோன்றுகிறது.'

ஜஹாங்கீர் – நூர்ஜகான்

தந்தை: ஐயா! தாம் என்னைக் கிழவராக மதித்தேன் என்கிறீரே! என் கவிதை என்ன பழமை மிகுந்திருக்கிறதே! என்ன காரணம்?

அவர்: நண்பரே! அங்ஙனமன்று. உங்கள் கவியில் அனுபவம் மிகுந்து விளங்குகிறது. இவ்வளவு அநுபவம் ஏற்பட குறைந்தது. அறுபது வயதாவது ஆகியிருக்க வேண்டும் என்றார் அவர். பிறகு வெகுநேரம் பலவிதமாகச் சம்பாஷித்தனர். அவர் போகும்போது என் தந்தையின் பேச்சிலும் பாட்டிலும் மிகவும் ஈடுபட்டுவிட்டதாகவும், இந்த மாதிரி வர புருஷர் உலகத்தில் அபூர்வமாக அவதாரம் செய்வார்களென்றும் மிகவும் புகழ்ந்து போற்றிவிட்டுப் போனார்.

மேலே கூறிய நண்பர் பாதுஷா என்றதும் தந்தை தானே ஜிஹாங்கீர் என்று பாவித்து, என் தாயாரிடத்தில்,

> மக்கோ கோ ஜாயாங்கே
> மன்னு காயாங்கே. ஹா–ரே
> நூர்ஜகான், ஹா – ஹாரே – நூர்ஜஹான்

என்று பாடினார். பாட்டின் மற்ற அடிகள் எனக்குத் தற்சமயம் ஞாபகமில்லை. ஆனால், அவற்றின் அர்த்தம் மட்டும் ஞாபகமிருக்கிறது. 'அதாவது நான் டில்லிக்கு மட்டும்

பாதுஷா. என் அல்லா எனக்கு மேல் பாதுஷாவாயிருந்து, குடிகளை நன்கு பரிபாலிப்பதால் எனக்குப் பொறுப்புமட்டு. அவன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு அமிருதபானம் செய்து கொண்டு மக்காவிற்குச் சென்று, அல்லாவைத் தியானிப்பேன்!' என் தாயாருக்கு ஹிந்தி தெரியாது. அர்த்தம் சொன்னதும், நானா நூர்ஜஹான்? சரிதான் என்று சிரித்தார்.*

திருக்குர்ஆனும் பாரதியும்

'திருநெல்வேலி ஜில்லா கடையத்தில் இருக்கும் போது அடுத்த சிற்றூரான பொட்டல்புதூரிலிருந்து முஸ்லிம் சகோதரர் வந்து பேசிவிட்டுச் செல்வார்கள்.' 'திருகுர்ஆனை'த் தமிழில் மொழி பெயர்க்கும்படி ஒரு நண்பர் கேட்டுக் கொண்டார். குர்ஆன் சந்தத்திற்கு இணங்க 'விஷ்ணும் பிதரம் சர்ணம்' என்று தொடங்கும் சமஸ்கிருதப் பாடலைப் பாரதி எழுதினார் என்று தங்கம்மாள் பாரதி குறிப்பிட்டுள்ளார்.**

மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்

பாரதி தாம் பாடிய புதிய ஆத்திசூடியில் காப்புச் செய்யுளில், பரம்பொருள் வாழ்த்து என்ற தலைப்பில் கூறியுள்ள வரிகள். **'மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்'***** என்று பாடுகிறார். இக்கூற்று பாரதியார் திருகுர்ஆன் பற்றி மிகவும் நன்றாக அறிந்திருந்தார் என்பதற்குச் சான்றாக உள்ளது. அதே கவிதையில், உருவகத்தாலே உணர்ந்து உணராது பல வகையாகப் பரவிடும் பரம்பொருள் ஒன்றே என்று ஏக இறைக் கொள்கையையும் பாரதி வலியுறுத்தியுள்ளார்.

சகுந்தலா பாரதி

1974-இல் பாரதியின் இளையமகள் சகுந்தலா பாரதி 'என் தந்தை' என்ற நூலை வெளியிட்டார். அதில்

---

* ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி, பாரதியும் கவிதையும், காரைக்குடி, 1947, பக். 76 – 78.

** தங்கம்மாள் பாரதி, ஆனந்த விகடன், தீபாவளி மலர், 1937.

*** பாரதி நூல்கள் (கவிதை), சென்னை, அரசாங்க வெளியீடு, 1954, ப. 245.

பொட்டல்புதூரில் பாரதி உரையாற்றிய நிகழ்ச்சி குறித்து குறிப்பிடும்போது, என் தந்தையாரிடம் பேசுவதற்கு கடையம் அருகிலுள்ள பொட்டல்புதூரிலிருந்து சில முகமதிய நண்பர்கள் வருவதுண்டு. அவர்கள் என் தந்தையின் விசால மனப்பான்மையையும், அவரது சொற்களிலே மிளிரும் உண்மை ஒளியையும் கண்டு, அவர் பிரசங்கத்தைத் தம் ஊர் மக்களும் கேட்டு அனுபவிக்க வேண்டுமெனும் பேராவலினால் அவரைப் பொட்டல்புதூரில் வந்து சில பிரசங்கங்கள் செய்யும்படி வேண்டினார்கள். ஆனால் என் தந்தையாரின் மனப்பான்மையையும், அவரது உன்னத நோக்கங்களையும் அதுவரை அறிந்திராத தமது சமூகத்தார், என் தந்தையை ஒரு ஹிந்து மதத்தவராதலால், தகுந்த மதிப்புடன் வரவேற்று அவரது போதனைகளை பொறுமையுடன் கேட்க மாட்டார்கள் என்ற எண்ணத்தினால், அவர் முதலாவதாக பேசும் விஷயம் அவர்கள் மனத்திற்குகந்த மத விஷயமாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். அவ்வாறே பொட்டல்புதூரில் முகமதிய பொதுச்சங்கமொன்றில் என் தந்தை 'இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை' என்ற விஷயம் பற்றி பிரசங்கம் செய்தார். தாம் அன்று இயற்றிய அல்லாப் பாடலைப் பாடிவிட்டுத் தமது உபன்யாசத்தைத் தொடங்கினார். அவர் அங்கு பேசிய விஷயத்தைத் தாமே எழுதி 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் பிரசுரிக்கும்படி அனுப்பியிருந்தார். இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி முகமதியரிடத்தே பேசும்போதிலும்கூட சிறிதும் மாற்றமில்லாமல் தமக்குத் தோன்றும் கருத்துக்களை, உண்மைகளை வெளியிடத் தயங்குவதில்லை. முகமது நபியைப் பற்றிப் பேசி வரும் போது பின்வருமாறு சொல்கிறார்.

'இடையிடையே, நான், மனதிற்குள் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களைப் பற்றி சித்திரம் போட்டுப் பார்ப்பது வழ்க்கம். நடு பாலைவனத்தில், நள்ளிரவிலே, தனி மணல் வெளியிலே, ஒட்டகையின் மீது தனியாக ஏறிக்கொண்டு போகிறார். அல்லது, அங்கொரு குன்றின்மீது ஏறி நிற்கிறார். கேள்வியாலும், நெடுங்காலத்துப்

பக்தியாலும், நிகரற்ற அன்பினாலும், ஞானத்தாலும் பக்குவப்பட்ட இவருடைய ஹ்ருதயம் அப்படிப்பட்ட இடத்தில் அல்லாவை நாடுகிறது. வேறு நினைப்புக்கு இடமில்லை. அப்போது அங்கு ஞானவொளி வீசிற்று. நபி அல்லாவைக் கண்டார். சுகப்பிரம்ம ரிஷிக்கு நேர்ந்த அனுபவம் முஹம்மதுநபிக்கு எய்திற்று' என்று கூறியுள்ளார்.

மேலும் அந்த நூலில் எட்டயபுரத்தில் உள்ள அல்லா தோட்டம் பற்றிய தகவலையும் தருகிறார்.

அல்லா தோட்டம்

எட்டயபுரத்தில் என் தந்தைக்கு உலாவப் போக நல்ல கண்ணுக்கினிய காட்சிகள் நிறைந்த சோலைகள் புதுவையிலே போலக் கிடையாது. 'அல்லா தோட்டம்' என்ற ஒரு பெரிய தோட்டம் எட்டையபுரத்தில் இருக்கிறது. அங்கு, ஒரு நாள் என் தந்தையார் என்னையும் என் தாயாரையும் அழைத்துக் கொண்டு போனார். புருஷனும் மனைவியும் கைகோர்த்துக் கொண்டு தெருவில் நடந்து போகும் விந்தையைக் கண்டு எட்டயபுரத்தில் பரிகசிக்க ஆரம்பித்தார்கள்.*

பத்ருதீன் டயாப்ஜி

சென்னைக் காங்கிரசில் 1887-இல் தலைமை வகித்த பத்ருதீன் டயாப்ஜி குறித்து பாராட்டி பாரதி எழுதியுள்ளார்.**

ஆக்கூர் அனந்தாச்சாரி

கவிச்சக்கரவர்த்தி 'சுப்ரமண்ய பாரதி சரிதம்' என்ற நூலை ஆக்கூர் அனந்தாச்சாரி செங்கோட்டை கிட்டப்பா மலர்ப் பிரசுராலயம் சார்பில் வெளியிட்டுள்ளார். அதில் அவர் தரும் தகவல் இதோ . . .

---

* சகுந்தலா பாரதி, என் தந்தை, கல்கத்தா, 1974, ப. 61.

** மகாகவி பாரதியார், இந்தியப் பெரியார்கள், சென்னை, 2003, பக். 50, 51.
டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார், பாரதி போற்றிய சான்றோர்கள் சில பார்வைகள், சென்னை, 2007, பக். 198 – 205.

அன்னை கதீஜா (ரலி)

ஓர் நாள் பாரதிக்கு மனோவியாகூலம் ஏற்பட்டிருந்தது. யாரும் தம்மைத் தொந்திரவு செய்யும்படிவிடக் கூடாதெனத் திட்டம் செய்துவிட்டு மாடிக்குச் சென்றார். இரண்டு மணிநேரம் கழிந்தது. பிறகு, கீழே இறங்கி வந்து தமக்குக் கண்ணன் தரிசனமாச்சு என்று மனைவி மக்களிடம் சொல்லி ஆனந்த பாஷ்பத்துடன், தாம் அப்பொழுது தான் எழுதி முடித்த 'தூண்டிற் புழுவினைப் போலே' என்ற கண்ணன் பாட்டைப் பாடிக் காண்பித்தார். சிறிது நேரங்கழித்துக் காலஞ்சென்ற வீரவிளக்கு வ.வே.சு. அய்யர் பாரதி வீட்டுக்கு வந்தார். அய்யரிடம் அப்பாட்டைப் பாடிக் காண்பித்து விட்டுச் செல்லம்மாளிடம் அதை ஏற்கனவே பாடிக் காண்பித்ததாயும், அது நன்றாயிருக்கிறதெனச் சொல்லிவிட்டாள் என்றும் உரைத்தார். அதற்கு அய்யர் முஹம்மத் நபி (ஸல்) கதீஜா(ரலி)வோடு ஆலோசித்தே ஒவ்வொரு காரியமும் செய்ததைப் போன்று நீயும் பாராட்டியிருப்பின் உன் மனைவியின் அங்கீகாரம் பெறுகின்றாய் போலும் என்று கூறினார்.*

மகாகவி பாரதி, தேசபக்தர் வ.வெ.சு. அய்யர் உரையாடலின் போது அண்ணல் நபி (ஸல்), அன்னை கதீஜா (ரலி) ஆகியோர் நினைவைப் போற்றிய சம்பவம் எண்ணி மகிழத்தக்கது.

பாரதி அணிந்த முஹம்மதியர் குல்லா

பாரதியின் மனைவி செல்லம்மா பாரதி 'தவப்புதல்வர் பாரதியார் சரித்திரம்' என்ற நூலை 1941 இல் வெளியிட்டார். அதில் அவர் குறிப்பிடும் சம்பவம் இதோ:

பாரதியார் ஒரு தையற்காரனிடம் தலையில் வைத்துக் கொள்ளு குல்லா தைக்க வேண்டும் என்றார்.

---

* ஆக்கூர் அனந்தாச்சாரி, கவிச்சக்கரவர்த்தி சுப்ரமண்ய பாரதி சரிதம், செங்கோட்டை, 1936, ப. 85.

‘தையற்காரன் சற்றுப் பயந்த அப்பாவிப் பேர்வழி. வேலையிலும் சாமர்த்திய சாலியல்ல; இவர் (பாரதி) சொல்வதற்கெல்லாம் ‘ஆகட்டும்’ என்று தலையசைத்துவிட்டு நான்கு நாட்களில் தைத்துக் கொணர்ந்தபின் மற்றச் சொக்காய்களெல்லாம் ஒரு மாதிரியாகப் போட்டுக் கொள்ள முடிந்தன.

*கோட்டு ரொம்ப பெரிய அளவிலும், குல்லா முஹமதியர் வைத்துக் கொள்ளும் மாதிரியில் அதில் உயரமுள்ளதாயும் இருந்தன. புதிய கோட்டை எடுத்து அணிந்து குல்லாவையும் தலையில் வைத்துக் கொண்டார்; ‘பிறர் மனம் நோகும் வண்ணம் பேசலாகாது’ என்ற கொள்கையுடையவராதலால் ‘தம்பி? ரொம்ப நன்றாயிருக்கிறது’ என்று கூறி மும்மடங்கு கூலி கொடுத்து அவனை அனுப்பினார் பாரதி.**

புதுவையில் ‘காகா’ கடை தேநீர்

*புதுவையில் பாரதியார் வாழ்ந்தபோது ‘காகா’ என்று அழைக்கப்பட்ட முஸ்லிம் ஒருவர் தேநீர்க் கடை வைத்திருந்தார். அந்தக் கடைக்கு இந்துக்கள் செல்ல மாட்டார்கள். ஆனால் மகாகவி பாரதியாரோ பலர் அறியும் வண்ணம் நண்பர்கள் படைசூழ அந்தக் கடைக்குச் சென்று தேநீர் அருந்துவார்.***

பாரதியின் தவறு

தனது ‘முரசு’ பாடலில் பாரதி பாடுவார்...

‘தெய்வம் பலபல சொல்லிப் – பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வதனைத்திலும் ஒன்றாய் எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்’

---

* செல்லம்மா பாரதி, தவப்புதல்வர் பாரதியார் சரித்திரம், சக்தி வெளியீடு, சென்னை, 1941, ப. 112.

** வித்துவான் வீ.ப.நடராசன், ந.ஜவஹர் ஞானையா, பாவலரும் காவலரும், திண்டுக்கல், 1968, ப. 52.

என இறைவன் ஒருவனே என்று பாடிய பாரதி அந்தப் பாடலின் அடுத்த வரியில்,

> ‘தீயினைக்கும்பிடும் பார்ப்பார் – நித்தம்
> திக்கை வணங்கும் துருக்கர்’

என்று பாடியுள்ளார்.

திக்கு – தேசத்திற்கு தேசம் மாறும்

உலக முஸ்லிம்களை அனைவரும் தங்களுடைய தொழுகையை ஒரு கட்டுப்பாட்டான முறையில் நடத்த வேண்டும் என்பதற்காக அவர்கள் அனைவரும் உலகிலேயே மிகப்பழைய இறை இல்லமாகிய ‘கஃபா’ இருக்கிற திசை நோக்கித் தொழ வேண்டுமென்ற நியதி ஏற்பட்டிருக்கிறது.

அந்தத் திசையானது தேசத்திற்கு தேசம் மாறக்கூடியது.

இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுக்கு அரேபியா மேற்கே இருக்கின்றது. மேற்கிலே கஃபா இருக்கின்ற காரணத்தால்தான் இங்குள்ள முஸ்லிம்கள் மேற்கு நோக்கித் தொழுகின்றார்கள்.

அரேபியாவிற்கு மேற்கில் வாழ்கின்ற முஸ்லிம்கள் கிழக்கு நோக்கித் தொழுவார்கள். காரணம் அங்கிருந்து கஃபா கிழக்கில் இருக்கிறது. ரஷ்யாவில் உள்ளவர்கள் தெற்கு நோக்கித் தொழுவார்கள் என்று நீதிபதி எம்.எம்.இஸ்மாயில் விளக்கியுள்ளார்.*

முகம்மதியர் – முஸ்லிம்

முஸ்லிம்களை ‘முகம்மதியர்’ என்ற சொல்லாலேயே தம் கட்டுரைகளில் பாரதியார் குறித்துள்ளார். இதுவும் பாரதியார் புரிந்துள்ள தவறாகும்.

இஸ்லாமிய நெறியைப் பின்பற்றுவோர் ‘முஸ்லிம்கள்’ என்றே அழைக்கப்பட வேண்டும் ‘முகம்மதியர்’ என்ற சொல்லைப் பயன்படுத்துவதுதவறென்று பாரதியாருக்குத்

---

* நீதிபதி எம்.எம். இஸ்மாயில், தமிழகம் தந்த மகாகவி பாரதியார், சர்வ சமயம், கட்டுரை, சென்னை, 1978, ப. 227.

தெரிந்திருக்குமானால் உறுதியாக அவர் தம்மை மாற்றிக் கொண்டிருப்பாரென்று நம்பலாம்.* (ரெயில்வேஸ்தானம் கதையில் பாரதி புரிந்த தவறு அவ்வாறு சுட்டிக்காட்டப்பட்ட போது அதனை ஏற்றுக்கொண்ட முன்மாதிரி உள்ளது.

1981 இல் சிற்பி தொகுத்த 'மகாகவி பாரதி மதிப்பீடுகள்' நூலில் மகாகவி பாரதியாரின் பத்திரிகைப் பணிகள் பற்றிக் கட்டுரை எழுதிய சீனி. விசுவநாதன், 'தவறுகளைக் கண்டித்துச் சுட்டிக்காட்டிய பாரதி அதே நேரத்தில் தாம் செய்த பிழைகளையும் கண்ணியமாக ஒப்புக் கொண்ட பத்திரிகையாசிரியர் என்பதை இங்கே காண்கிறோம்'. தவறினைப் பிறர் சுட்டிக்காட்டிய விடத்து அதைத் திருத்திக் கொண்டு பெருந்தன்மையோடு ஒப்புக்கொண்ட பாரதியின் சான்றாண்மைப் பண்பை இங்கே நாம் காண்கிறோம் என்று குறித்திருப்பது, முண்டாசுக் கவிஞர் பரந்த உள்ளம் படைத்தவர் என்பதை பள்ளிவாசல் நஹரா** ஒலி போல் புரிய வைக்கிறது.

எல்லாரும் ஒன்றென மதித்தல்

"கள்ளங்கபடமற்ற உள்ளம், தவறு செய்தால் வருந்தும் சுபாவம். கையிலிருந்தால் இல்லையென அளிக்கும் குணம், நண்பரிடத்து விசுவாசம் எல்லாரும் ஒன்றென மதித்தல் இவை பாரதியாரின் அருங்குணங்கள்."***

பாரதி இவ்வுலகை விட்டு மறைந்துவிட்டாலும் அவரது தேசிய கீதங்களும், மற்றைய பாடல்களும், கதை, கட்டுரைகளும் இவ்வுலகம் உள்ளளவும் நிலைத்துப் புகழ் வீசும் என்பதில் ஐயமில்லை**** என்னும் வ.உ.சி.யின் வைர வரிகளை எண்ணிப் பார்க்கிறேன்.

---

* மு.சாயபு மரைக்காயர், பாரதி கண்ட இஸ்லாம், காரைக்கால், 1983, ப. 18.

** மானாமக்கீன், ஒரு முண்டாசு கவிஞரின் முஸ்லிம் நேசம், சென்னை, 2005, ப. 60.

*** சக்திதாஸன் சுப்பிரமணியன், பாரதி லீலை, சென்னை, 1938, ப. 57.

**** செ.திவான், வ.உ.சி.யின் வி.ஓ.சி. கண்ட பாரதி, சுஹைனா பதிப்பகம், 2000, பாளையங்கோட்டை, ப. 24.

எல்லாரையும் எல்லா மதத்தவரையும் ஒன்றென மதித்துப் போற்றி வாழ்ந்தவர் பாரதி. அவரை குறிப்பிட்ட சாதிச் சிமிழுக்குள் குறிப்பிட்ட மதத்திற்குள் எவரும் அடக்கக் கூடாது; கூடவும் கூடாது. அடக்கிடவும் இயலாது; அடக்கிடவும் முடியாது; முடியாது முடியவே முடியாது. அதற்குத் துளியேனும் இந்நூல் பயன்பட்டாலே அதுவே இந்த நூலிற்குக் கிடைத்த வெற்றியாகும்.

காணிக்கை



காரைக்குடியிலிருந்து

காற்றாய் வந்து

கனவாய்க் கலைந்த

இதயம் நிறை

இளவரசுக்கு

குறிப்புக்கள்

ஆயுர்வேதத்தின் உண்மையான சக்தி

™
Rajah ஆயுர்வேத சாலை

5C6/A4/2 அம்பை ரோடு,

குலவணிகர்புரம், திருநெல்வேலி – 627005.

போன்: 0462 – 3299327, 2572940